Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 21 வெள்ளிக்கிழமை (04.04.2014) பக்கங்கள் 20 ஓசை – 185

## மாணவர்கள் மீது தடியடி சிறுவர் நீதிமன்றில் வழக்கு

(இருபாலை)

மாதாந்தப் பரீட்சைக்கட்டணம், குறித்த காலப்பகுதிக்குள் செலுத்தவில்லையெனத்தெரிவித்து தனியார்கல்வி நிறுவன இயக்குநரின் பிரம்படி தாக்குதலில் தரம் 5, 6, மற்றும் 9ஆம் வகுப்பு மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இருபாலைப்பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனமொன்றிலேயே இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மாதாந்த தவணைக்கட்டணத்தை 25ஆம் திகதியன்றும் பரீட்சைக் கட்டணத்தை 25இலிருந்து 30 ஆம் திகதிக்குள்ளும் மாதாந்தம் செலுத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டு அதன்படியே மாணவர்கள் செலுத்தியும் வந்தனர்.

இந்த நிலையில் மாணவர்கள் சிலர் குறித்த பரீட்சைக் கட்டணத்தை அந்தக் காலப்பகுதியில் செலுத்தவில்லையெனத்தெரிவித்து குறித்த நிறுவன நிர்வாகி அந்த மாணவர்களை அழைத்து கைகளை திருப்பச்சொல்லி மொழியில் அடித்துள்ளார். இதனால் மாணவர்களின் கைகள் வீங்கியுள்ளன. இதில் ஒரு மாணவி இச்சம்பவம் குறித்து பெற்றோருக்கு தெரிவித்துள்ளார். உடனடியாகவே தந்தையார் அவரை அழைத்துச்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. விசாரணைக்குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதா? தீவிர பரிசீலனையில் அரசு

பிரத்தியேக செய்தி

(கொழும்பு)

யுத்தகால உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக வரவிருக்கும் ஐ.நா.விசாரணைக்குழுவை நாட்டுக்குள் பிரவேசிப்பதை அனுமதிப்பதா? இல்லையா? என்று அரச உயர் மட்டத்தில் தீவிரமாக ஆராயப்பட்டுவருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் விசாரணைக் குழுவினர் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி கோரியுள்ளது.

யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு எவ்வித வாய்ப்பும் வழங்கப் போவதில்லை. இந்த விசாரணைக் குழுவினர் இலங்கையின் வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் சென்று சாட்சியங்களைத் திரட்டும் பணிகளை முன்னெடுக்கவுள்ளதனையும் நிராகரிப்பதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெளிநாடொன்றிலிருந்து இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுமானால் உள்நாட்டில் செயற்படும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் அங்கு சென்று சாட்சியமளிக்க தயாராகவுள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

# முல்லையில் வீடுகள் கையளிப்பு புதிய வீடுகளுக்கும் அடிக்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, கேப்பாபிலவு கிராமத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 101 வீடுகள் நேற்று உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது அத்துடன் புதிய வீடுகளுக்காகவும் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கின் யுத்த மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மக்களில் 98 வீதமானவர்கள் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்பட்டிருப்பதாகவும், அவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கு அவசியமான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டம், கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 101 நிரந்தர வீடுகளைப் பயனாளிகளுக்குக் கையளித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கேப்பாப்பிலவு கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ள 320 குடும்பங்களில் 65 குடும்பங்களுக்கு ஏற்கனவே கேப்பாப்பிலவு மாதிரி கிரா

19 ஆம் பக்கம் பார்க்க



## நேபாள சமாதானக்குழு நேற்று யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நேபாள அரசின் சமாதான மற்றும் மீள்கட்டுமான அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு வடக்கின் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் வந்த இக்குழுவினர் யாழ். அரச அதிபரை யாழ். 19 ஆம் பக்கம் பார்க்க

## மீள் சுழற்சி தொழில்நுட்பம் உற்பத்திகளுக்கு ஊக்குவிப்பு கொழும்பில் விசேட கலந்துரையாடல்

கழிவு உலோகங்களை தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கி அதனூடாக கைத்தொழிற்துறையை மேம்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் நேற்று மேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்

19 ஆம் பக்கம் பார்க்க



## வெளியாகியது பெறுபேறு யாழ்.வேம்படி முன்னிலையில்

வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரணதர பரீட்சை முடிவுகளின்படி யாழ். மாவட்டத்தில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை முன் னிலை வகிக்கின்றது.

28 மாணவிகள் (ஏ சித்திகளைப் பெற்றுள்ள னர். இவர்களில் 8 மாணவிகள் ஆங்கில மொழியில் பரீட்சைக்கு தோற்றியவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

இவர்களில் 8 ஏ சித்தியை 85 மாணவிகளும், 7ஏ சித்தியை 33 மாணவிகளும் பெற்றுள்ளனர். இதேவேளை பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகள் அனைவரும் க.பொ.த. உயர்தர கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள் 100 வீத சித்தியடைந்துள்ளனர்.

இதன் அடிப்படையில் 9 பேர் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர். இவர்களில் 4 பேர் ஆங்கில மொழி

19 ஆம் பக்கம் பார்க்க

## அநீதியான தீர்மானத்தை கண்டித்து பிரதேசசபை முன்னால் போராட்டம் வலி. வடக்கில் நேற்று

வலி.வடக்கு பிரதேச சபையில் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிக்கு எதிராக பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்னால் நேற்றுக்காலை முதல் போராட்டத்தில் ஈடு 19 ஆம் பக்கம் பார்க்க



# க.பொ.த (சா/த) பரீட்சை - 2013

# பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று நண்பகல் வெளியாகின.

வடமாகாணத்தில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

9ஏ ஆங்கில மொழி மூலம்

அபிராமி ரவிதரன், ஜனந்தினி சிவபாலன், லக்சிகா உதயகுமார், பிரியங்கா கிறிஸ்ரியன், ராகவி ராகவன், சங்கவி சதானந்தராஜா, சஸ்மீரா ஸ்ரீகணேசன், வினுசியா பத்மநாதன்

9ஏ தமிழ் மொழி மூலம்

விஷ்ணுபிரியா ரவீந்திரன், பிரியங்கா நித்தியானந்தராஜா, ரதினி சண்முகலிங்கம், அபிராமி நற்குணம், கஜேந்தினி பாலேந்திரராஜா, நிஷானி பூவலிங்கம், சுபேஸ்கா மோகன்ராஸ், பவதாரணி கோகுலானந்தன், பெனிற்றா அன்ரன் ஜேசுதாஸ், ரக்ஷனா ரவீந்திரன், கௌதமி விஜயகுமார், சங்கவி திருச்செல்வம், லௌசியா சுந்தர், சுபஸ்திகா ஞானசம்பந்தன், சஜித்தா ஜீவிரட்ணராஜா, சாருகா சற்குணராஜா, மதுசா சிவயோகன், சர்மினி ஜெயசீலன், ருட்சிகா நவரட்ணம், நிலுஜா மகாதேவன்.

8ஏபி ஆங்கில மொழி மூலம்

அமுதா குணரட்ணம், டிலோசா தயாநிதி, கோபிஷா உதயகுமார், ஹாரணி பிரபாகரன், கம்சனா ரவீந்திரன், கீர்த்திகா இராமகிருஷ்ணா, சாளினி நகுலேஸ்வரன், தாரங்கி நவகுமாரன், துவரகா முரளீதரன்.

8ஏசி ஆங்கில மொழி மூலம்

சங்கவி திருச்செல்வநாதன், சங்கவி ரவீந்திரன், சுகன்யா சுகந்தன், திலக்சனா சிவானந்தன், திரிசிகா மணிவண்ணன்.

8ஏபி

ஹம்சா தனஞ்சயன், நிரோஜினி அல்பேட் ஜன்ஸ்ரீன், நிதர்சினி ராமச்சந்திரன், தேவசேனா விஜயகுமார், நிஷாந்தினி விஜயகுமார், வினோஜி சுரேஸ்குமார், பவதாரணி சிவராஜா, டனேக்கா சோமஸ்கந்தசாமி, கோபிதா பவளகுமாரன், லக்சிகா சேனாதிராஜா, மதுரங்கா விக்னேஸ்வரன், சரண்யா குகதாஸ், தமிழினி கங்காதரன், திஷாயினி இராஜேஸ்வரன், கம்ஷாளினி ஸ்ரீதரன், ஜனிதா தயாகுணன், கிரிகா தில்லைநாதன், கியானி சிவஞானம், சகிஸ்னா இரவிச்சந்திரன், ஸ்ரீதுர்க்கா சுகுமார், சுகன்ஜா சடகோபன், அபிராமி ஜெயகுமார், டசிந்தா லோகேந்திரன், டினோஜா நாகராஜா, கபாலினி ஆனந்தஜோதி, நிலானி இரட்ணசிறி, பிரசாந்தி இரவீந்திரராசா, சங்கவி ஜோகராஜா, சிவரஞ்சனி விவேகானந்தன், தனுஜா மகேந்திரன், தர்மானந்தி தயாபரன், துளசி ரட்ணசபாபதி, விபூசனா முருகதாசன், நீராஞ்சலி பரானன், கவிபிரியா ஜெயரஞ்சன், கஸ்மிலா பத்மநாதன், கயனி காங்கேசன், ஜலுயா துரைராஜா, காயத்திரி பஞ்சாட்சரம், பாலயசோதினி வெற்றிக்குமரன், வித்யசங்கவி இரவீந்திரராசா, துருஸ்திகா நேசலிங்கம்.

8ஏசி

அனித்துஷா அமரசேகரம், அர்ச்சனா குலசிங்கம், ஜெனீபா ஜெயராஜா, பிரியந்தி சந்திரலிங்கம், பிரணவி சிவராஜா, பிரவீனா இராகவன், சாரிகா விஜேந்திர சர்மா, திசாளினி பற்குணானந்தன், பவாஜினி மகேந்திரா, கலைவாணி சிவஞானம், சுபபிரதா மகேஸ்வரன், சுபஸ்திகா அமிர்தலிங்கம், தமிழ்ச்செல்வி சுரேந்திரன், துஜீபா விக்னேஸ்வரன், ஹாரினி சிற்றம்பலம், கஜலக்ஷி கேதீஸ்வரன், பிரவீனா சுரேஸ்சன்ட், ஹம்சிதா நித்தியானந்தன், நிலக்ஷிகா நற்குணராஜா, பவித்திரா ஈஸ்வரநாதன், கஜிதா சிவபாதம், தர்சிகா நாகேந்திரம், வைஸ்ணவி புஸ்பராஜா, விதுஷிகா யோகராஜா.

8ஏஎஸ்

அபிராமி ஸ்ரீஸ்கந்தராஜா, கோலமுகி வேதநாயகன், ஆரபி சிவசிதம்பரம், நிலோஜினி பாஸ்கரன், வினோஜா நித்தியானந்தன்.

**நெல்லியடி மத்திய கல்லூரி**

தமிழ் மொழி மூலம்

விஜயரட்ணம் சனன் - 9ஏ, லோகேஸ்வரன் விதுர்ஷா - 9ஏ, நேசலிங்கம் உஜானா - 9ஏ, கிருஷ்ணமூர்த்தி அபிநயன் - 8ஏபி, பிரபாகரன் அனிந்திதை -8ஏபி, தேவகுமாரன் கலைமகள் - 8ஏபி, பாலகிருஷ்ணன் வினித்குமார் - 7ஏ2பி, புஸ்பலிங்கம் அனோஜா - 7ஏபிசி, சுப்பிரமணியம் ஆர்த்திகாயினி - 7ஏபிசி, யோதீஸ்வரன் கம்சத்வனி - 7ஏ2சி.

ஆங்கில மொழி மூலம்

மனோகரன் துஷிதா - 8ஏசி, லிங்கரட்ணம் யேசுகா 8ஏசி, சுப்பிரமணியக்குருக்கள் வைஷ்ணவி - 8ஏசி, நவரட்ணராஜா துளசிகன் - 8ஏஎஸ்.

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

ஆங்கில மொழி மூலம்

உமாசங்கர் சஹானா - 9ஏ

தமிழ் மொழி மூலம்

பாலச்சந்திரன் நர்மதா - 9ஏ, ஜி.தர்சினி - 8ஏசி, கே.தேனுகா - 7ஏபிசி, பி.சுதர்சினி - 7ஏபிசி, எம்.மதுமங்கை - 7ஏ2சி, ஜே.யதுஷா - 6ஏபி2சி, கே.மிதுலா 6ஏ2பி, கே.யதுஷா - 5ஏ2பிசி, எஸ்.விஷ்ணுப்பிரியா - 5ஏ2பி2சி, கே.கீர்த்தனா - 5ஏ4பி, என்.கீர்த்தனா - 5ஏ3பிசி.

**கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி**

ஜெஸ்வி குலேந்திரன் - 9ஏ, சரண்யா சச்சிதானந்தம் - 7ஏபிசி.

**கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

தமிழ் மொழி மூலம்

சிவகுமார் சுஜித்குமார் - 9ஏ, கஜேந்திரகுமார் கஜானன் - 8ஏபி.

**முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி**

கந்தசாமி கௌசிகன் 8ஏசி.

**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

தமிழ் மொழி மூலம்

சி.வினிதா - 9ஏ, சௌ.யோகதர்மினி - 8ஏசி, க.பவித்திரா - 8ஏசி, பத்மஸ்ரீ இந்துசா - 7ஏபி, சுரேஸ் யதுஷன் - 6ஏ3பி, ஜெகதீஸ்வரன் விதுஷன் - 6ஏ2பிசி, திலகநாதன் சங்கவி - 6ஏபி2சி, நகுலேஸ்வரன் சகானா - 5ஏ2பிசிஎஸ்.

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

தமிழ் மொழி மூலம்

அ.சோபிகா - 9ஏ, ரி.கோகுலன் - 8ஏசி.

ஆங்கில மொழி மூலம்

ம.தரண்யா - 8ஏபி.

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

தமிழ் மொழி மூலம்

நித்தியானந்தன் அபிராமி - 8ஏபி, ஸ்ரீமோகன் ஸ்ரீவேதிகா - 8ஏபி, தேவதாஸன் உமையாளினி - 8ஏசி, இராஜேந்திரன் இனோஷா - 7ஏபிசி.

**முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி**

தமிழ் மொழி மூலம்

சி.வினுஜா - 9ஏ, பே.றயல்சியா - 9ஏ, சோ.கௌசிகன் - 8ஏபி, ச.ரவிவர்மன் - 8ஏசி, லெ.சஞ்சித் - 7ஏபிசி, பி.பிரியங்கா 6ஏ2பி, அ.அஞ்சிகா - 5ஏ3பிசி, இ.பாஜித் - 5ஏ3பிசி, எஸ்.டயானா - 5ஏ3பிசி, எம்.கஜானி 5ஏ2பி2சி.

**பளை மத்திய கல்லூரி**

தமிழ் மொழி மூலம்

அந்தோனிப்பிள்ளை ஆன் நிலக்சனா - 7ஏபிசி, விக்ரர் அன்ரனி வின்சனா - 6ஏபிசிஎஸ், விக்ரர் அன்ரனி வினோஜா - 6ஏபிசிஎஸ்.

**சென். பற்றிக்ஸ் கல்லூரி**

ம.மதுஷன் - 9ஏ, ஜி.நிலக்ஷன் - 9ஏ, என்.லோகசீலன் - 9ஏ, சி.ஆர்.மரின் என்றோய் - 8ஏபி, ஆர்.ஆர்.கிருசாந்தன் - 8ஏபி, ஜெ.அன்ரன் ஜெனோஷன் - 8ஏசி, வி.பெனட் சுஜீபன் - 8ஏசி, ஜெ.மைக்கல் வினுஷன் - 7ஏ2பி, ஜீ.ஹைறிப் அனிஷ்டஸ் - 7ஏபிசி, டி.கிறிசாந் - 7ஏபிசி, ஆர்.சுஜித் - 6ஏபி2சி, பி.பி.நிலோஜன் - 5ஏ3பிசி, ஜி.என்.ஜீன் லக்ஷ்மன் - 5ஏ2பிசிஎஸ், ஆர்.அட்சறன் - 5ஏ3பிஎஸ், கே.ஜக்சன் - 4ஏ5பி, எ.பி.அன்ரனி நோயல் 4ஏபி4சி, எ.ஜெறிக்சன் - 4ஏ3பி2சி, ஜெ.கொலின்ஸ் - 4ஏ3பி2சி, எ.எம்.ஜானுமக்சிமஸ் - 4ஏ3பி2சி, எ.ஜெ.றொயிஸ்டன் - 4ஏ2பி2சிஎஸ், சி.மெல்கிறிஸ்ரியன் - 4ஏ2பி3சிஎஸ், வி.யூட்நிறஞ்சன் - 4ஏபி3சிஎஸ்.

**மல்லாகம் மகா வித்தியாலயம்**

நிரோஜன் - 7ஏ, தனுசன் - 6ஏ, அபிராபி - 6ஏ (109,17,48)


## சிறுவிளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2518 திகதி 02-04-2014

ஆங்கில எழுத்து: E

வெற்றி எண்கள்: 05 16 18 43

போனஸ் இல: 29

ஜக்பொட் பரிசு ரூ.13,040,425/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 249433 | 20/- | 4,988,660/- |
| 2 இல | 17762 | 100/- | 1,776,200/- |
| 3 இல | 378 | 1,000/- | 378,000/- |
| 4 இல | - | 1,000,000/- | - |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9949 | 40/- | 397,960/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 714 | 1,000/- | 714,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 18 | 10,000/- | 180,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | 01 | 13,040,425/- | 13,040,425/- |
| 1 இல + போனஸ் இல | 11818 | 100/- | 1,181,800/- |
| 2 இல + போனஸ் இல | 552 | 500/- | 276,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 489 | 200/- | 97,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 291141 | | 23,662,345/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.04.05 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3382)


## திரிபோஷா வழங்கல்

அச்சுவேலி வளலாய் பகுதியில் உள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கான திரிபோஷா மா கடந்த செவ்வாய்க்கிழமை வளலாய் குடும்பநல உத்தியோகத்தர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

இதில் அவ்வூரைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்கள் தமக்கான திரிபோஷா மாவினைப் பெற்றுக்கொண்டனர்.

## வருடாந்த குளிர்த்தி

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி விழா இனறு நடைபெறும். இதனையொட்டி விசேட பூசை வழிபாடுகள், ஆராதனைகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும். (104)

## குருபூசை தினம்

தவத்திரு வே.முருகேசு சுவாமிகளின் 17 ஆம் ஆண்டு குருபூசைத்தினம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆசிரமத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை செல்வச்சந்நிதி முருகனுக்கு விசேட அபிஷேக பூசைகள் நடைபெறும். தொடர்ந்து சந்நிதியான் ஆசிரமத்தில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

முருகேசு சுவாமிகளின் கந்தக் கதம்பம் பற்றி கவிமணி க.ஆனந்தராஜா இசைச் சொற்பொழிவாற்றுவார். அதைத் தொடர்ந்து 63 நாயன்மாரின் குருபூசையும் நடைபெறுமென சந்நிதியான் ஆசிரமம் அறிவித்துள்ளது. (01)

## யாழ். பொதுசன நூலகத்தில் இன்று முதல் இணையசேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் பல்லாயிரக் கணக்கான நூல்களைத் தன்னகத்தே கொண்ட யாழ். மாநகர சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் யாழ். பொதுசன நூலகத்தில் இன்றுமுதல் இணையசேவை வழங்கப்படவுள்ளது.

சிங்கப்பூர் குடியரசின் வெளிநாட்டலுவல்கள் மற்றும் சட்டத்துறை அமைச்சின் உதவியுடன் இளைஞர் மத்தியில் அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை தூண்டும் வகையில் இளைஞர் பகுதி நவீனமயப்படுத்தப்படுகிறது.

அந்தவகையில் புதிதாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ள இளைஞர் பகுதியை மேலும் மெருகூட்டும் வகையில் சிறிலங்கா ரெலிகொம் தனது WIFI மூலம் அதிவேகமான இணைய சேவையை வழங்குகின்றது.

இந்தச் சேவை நூலகம் முழுவதும் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்துவதற்கென 20 மடிக்கணனிகளும் பாவனையில் உள்ளன. இந்தச் சேவை இன்று முதல் செயற்படவுள்ளதால் இன்றிலிருந்து மக்கள் இந்தச் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என மாநகர சபை அறிவித்துள்ளது.

# வேலணைப் பிரதேச வைத்தியசாலைக்கு

# சுற்றுமதில் இல்லாததால் அசௌகரியம்

## விசனம் தெரிவிக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேசசபைக் குட்பட்ட வேலணை பிரதேச வைத்தியசாலை, அதனுடன் இணைந்த புதிதாக நிர் மாணிக்கப்பட்டுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணி மனை என்பவற்றின் சுற்றுப் புறச் சூழல் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாக வும் இதனால் அங்கு பல அசௌகரியங்கள் இடம் பெற்றுவருவதாகவும் அப் பகுதி மக்கள் விசனம் தெரி வித்துள்ளனர்.

வேலணை பிரதேச வைத் தியசாலை, சுகாதார வைத் திய அதிகாரி பணிமனை ஆகியவை மக்களுக்கான சேவையை சிறப்பாக வழங்கி வருகின்றபோதிலும் அவற் றின் சுற்றுப்புறச் சூழலில் வேலியோ, சுற்றுமதிலோ இல்லாத காரணத்தினால் வைத் தியசாலை வளாகத்தில் கால் நடைகள் நடமாடித் திரி- வதாகவும் அங்குள்ள மரக் கன்றுகளை நாசம் செய்துவரு வதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இந்த வைத்தியசாலைக்கு அண் மையில் குடியிருப்பவர்கள் வைத்தியசாலை வளாகத் தினூடாக தமது போக்குவரத் தினை மேற்கொண்டு வருவதா கவும் இதனால் வைத்திய செயற்பாடுகள் பாதிக்கப்படு வதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை வைத்திய சாலையின் புதிய கட்டட நிர்மாணப்பணிகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற இந்தக் காலப்பகுதியில் கட்டடப்பணி களுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் திருட்டுப் போகும் அபாய நிலை காணப் படுவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இரண்டு நிலையங் களையும் இணைத்து வேலி யையோ அல்லது சுற்றுமதி லையோ அமைத்துத் தருமா றும் இது தொடர்பாக உரியவர் கள் கவனம் எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தின்

# கண்காட்சியும் கலை நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலைய கண்காட்சியும் கலை நிகழ்வும் இன்று மு.ப. 10 மணிக்கு யாழ். மகளிர் அபிவிருத்தி நிலைய ஓ.எல்.ஆர். தேவாலய வளாகத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்.பிரதேச செயலர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாகா ணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், சிறப்பு அதிதியாக யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.ஏ.ஜெய ராஜன் உதவி பிரதேச செயலர் செல்வி வ.தனிஷ்கா ஆகியோரும், கௌரவ விருந் தினர்களாக அருட்தந்தை ரெஜிராஜேஸ்வரன், கிராம அலுவலர் ஆர்.யாதவன் யாழ். மாதா கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் நா.தனேந்திரன் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கண்காட்சிக்கும், கலை நிகழ்வுக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (105)

# ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீர கத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை, கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள் ளது. எதிர்வரும் 13ஆம் திகதி காலை கைலாய வாகனமும், மாலை வேட்டைத்திருவிழாவும், இரவு சப்பறத்திருவிழாவும், எதிர்வரும் 14 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும், இரவு கொடியிறக்கமும் இடம்பெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி காலை சங் காபிசேகமும் மாலை பூங்காவனத் திருவி ழாவும் இடம்பெறும் மேலும் திருவிழாக் காலங் களில் தினசரி மதியம் பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்க ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளதாக அறங்காவலர் சபையினர் தெரி வித்துள்ளனர். (175)




சுதுமலை இளைஞர் கழகத்தால், சுதுமலை சிந்மயபாரதி மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது. பயன் பெற்ற மாணவர்களுடன், விருந்தினர்கள் நிற்பதைக் காணலாம். (114)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவில் காணப்படும் பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

மொழி உத்தியோகத்தர், இணைப்பு உதவியாளர், மொழி பெயர்ப்பாளர் (சிங்க ளம் / தமிழ் / ஆங்கிலம்) முகாமைத்துவ உதவி யாளர், சிரேஷ்ட லிகிதர், சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர்கள் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கல்வித் தகைமையாக பல்கலைக்கழகத் தில் பட்டம் பெற்றிருத்தலுடன், மும்மொழியில் மொழிபெயர்க்கக் கூடியவராகவும், கணனி அறிவுள்ளவராகவும், ஆராய்ச்சி நடவடிக்கை யில் ஈடுபட்டவராகவும், தகவல் தொழில் நுட்பம், சட்டம், பத்திரிகைத்துறை தொடர் பாடல், திட்டமுகாமைத்துவம் ஆகிய தகை மைகள் ஒவ்வொரு பதவிகளுக்கும் தேவைப் படுகின்றன.

வயது 18 - 45 வரையுள்ள நாட்டின் சகல பாகங்களிலும் சேவையாற்றக்கூடிய உடல், உள, ஆரோக்கியமுள்ள சிறந்த பண்புகளைக் கொண்ட நல்லொழுக்க முடையவர்கள் விண்ணப்பங்களை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் தலைவர் அரசகரும மொழி கள் ஆணைக்குழு, பாஷாமாந்திரய, இல, 341/7, கோட்டே வீதி, ரஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் அவசியமாகும்.

பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற் குட்பட்டதுமாகும். விண்ணப்பதாரர் எழுத்துப் பரீட்சை, நேர்முகப்பரீட்சைக்கும் சமுகமளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளன. (105)

# கொண்டை பூவுக்கு அழுகிறது கும்பி கூழுக்கு அழுகிறது




'நீராலானது' இந்த உலகம் என்று சொன்னாலும் நீரில்லாத உலகமே உருவாகி வருகிறது.

எங்கும் வரட்சி அல்லது பெருவெள்ளம். இரண்டிலும் சிரமமும் பாதிப்புமே அதிகம்.

இயற்கையின் சமநிலை குலைந்தால் இதுதான் விதி. இயற்கையின் சமநிலையைக் குலைப்பதில் இயற்கையின் புத்திரர்களில் 'பலே கில்லாடிகள்' மனிதர்கள்தான்.

எதிலும் சமநிலையைக் குலைத்து பெயர் எடுப்பவர்களும் மனிதர்களே!

அதனால்தான் பல சந்தர்ப்பங்களிலும் தாங்களே சமநிலை குலைந்து போகிறார்கள்.

இப்படித்தான் இப்பொழுது பூநகரிப் பிரதேச சபையிலும் ஒரு சமநிலைக் குலைப்பு நடந்து கொண்டிருக்கிறது.

அங்கே உள்ள தற்போது பதவியிலிருக்கும் தவிசாளரை வீழ்த்துவதற்காக திரை மறைவிலும் திரைக்கு முன்னுமாக பெரும் போராட்டங்களை அதே கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் நடாத்திக் கொண்டிருக்கிறார். இதற்காக அவர் 'கனேசப்பெருமானிடம்' நேர்த்திக் கடன் வைத்திருக்கிறார்.

வேடிக்கை என்ன என்று தெரியுமா? இருவரும் ஆனந்தசங்கரியின் விசுவாசிகள்.

விசுவாசிகளிடையே நடக்கும் மோதலை எப்படி வழிக்கு கொண்டுவருவது என்று 'சங்கரி'யருக்கு விளங்கவில்லை. ஆளுக்கு ஆள் போட்டி போட்டுக்கொண்டு சங்கரியருக்குக் கடிதமெழுதிக் கொண்டும் தொலைபேசியில் கோரிக்கைகளை விட்டுக்கொண்டுமிருக்கிறார்கள்.

தினமும் உலகமெல்லாம் கடிதம் எழுதி எழுதியும் களைக்காத சங்கரியாரை இவர்களின் கடிதங்கள் களைப்படைய வைத்துவிட்டன.

தவிசாளரும் தவிசாளரைக் கவிழ்ப்பதற்காகச் சதித்திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கும் இந்த உறுப்பினரும் பூநகரிப் பிரதேசவாசிகள் என்றபோதும் அந்தப் பிரதேசத்தில் வசிக்காதவர்கள். பதவிக்காக மட்டுமே சபைக்கு வந்து போகிறார்கள். இந்தப் பதவி ஆசைதான் கதிரைக்காக அடிபட வைக்கிறது..

இவர்கள் கதிரைக்காக சண்டை போடுகிறார்கள். சனங்களோ பூநகரி தண்ணீருக்காக அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

'கறுக்காய்த்தீவில் ஒரு வாளி தண்ணீரைக்கூட பெறமுடியாமல் உள்ளது. வாரத்திற்கு ஒரு தடவை மட்டுமே பிரதேச சபையின் நீர் வருகிறது' என்று சொல்கிறார் கறுக்காய்த்தீவுவாசி ஒருவர்.

'யாழ்ப்பாணத்திலிருந்தும் கிளிநொச்சியிலிருந்துமே குடிநீரை வாங்கிக்கொண்டு போகிறோம்' என்று சொல்லிக்கொண்டு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் தண்ணீர்க் 'கான்' (கொள்கலன்) களுடன் நின்றார் சிங்கன்.

'இந்த மாதிரி நிலைமை நீடித்தால் மீளக்குடியேறிய சனங்கள் மீள இடம்பெயர்ந்து விடுவார்கள்' என்று இன்னொரு உண்மையையும் சொன்னார்.

பிரதேச சபையிடம் முறையிட்டால், எதையும் செய்ய விடாமல் செயலாளரைக் கட்டுப்படுத்துகின்றார் தவிசாளர். தவிசாளரைக் கட்டுப்படுத்துகிறார் தவிசாளராக வரவிரும்பும் 'கனேசப்பெருமான்'.

எல்லாத்துக்கும் காரணம், கதிரை வியாதிதான்.

இந்த வியாதிக்காரரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்குப் பதிலாக, சபையின் ஆட்சிக் கதிரையில் அமர்த்தியதால் வந்ததுதான் இந்த வினை.

"வினை விதைத்தவன் வினையே அறுப்பான்." என்ற மாதிரி இவர்களைத் தேர்வு செய்ததால் வந்த வினையைத்தான் இப்பொழுது பூநகரிப் பிரதேச மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இப்படி தண்ணீருக்கு அலைய வேண்டிய நிலையும் வந்திருக்கு.

பூநகரியின் தண்ணீர்த் த[illegible]டுப்பாட்டை நிரந்தரமாக நீக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்குத் தடையை விதித்திருப்பதும் இந்த 'வினையை விதைத்தவர்கள்'தான்.

இரணைமடு குடிநீர்த்திட்டத்தின் மூலம் பூநகரிக்கும் தண்ணீர் வருவதாக இருந்[illegible]. அதைத் தடுத்து விட்டனர் 'வினை விதைப்போர்'.

ஈழத்தமிழர் வரலாற்றில் ஒருகாலம் சிறப்பான ராஜ்ஜியமாக விரிந்து, வளம் கொழித்திருந்த (பூநகரி) தாய் மடியில் இன்று 'இந்தப் பயல்கள்' ஆடுகின்ற ஆட்டமும் போடுகின்ற கும்மாளமும் கொஞ்சமல்ல.

என்ன செய்வது 'கும்பி கூழுக்கு அழுகிறது – கொண்டை பூவுக்கு அழுகிறது' என்ற நிலைதான்.

சோம்பல் எல்லா செயல்களையும் கடினமாக்கும், சுறுசுறுப்பு எல்லாவற்றையும் எளிமையாக்கும். - பிராங்கிளின்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இன்னும் எத்தனை திருவிழாக்கள்?

காலம் பொன்னானது என்பதில் தொடங்கி, அது போனால் திரும்பி வராது என்பது வரைக்கும் காலத்தின் பெறுமதியை உணர்த்த நம்மிடையே பல சொல்வழக்குகளும் சொலவடைகளும் உண்டு. மனிதர்களுக்கான வாழ்க்கை என்பது அரிய கொடை; ஆனால் அதற்குத் தரப்பட்டுள்ள காலமோ மிகச் சிறியது.

காலம் என்கிற மகா வெள்ளத்தில் துளியினும் துளியளவான காலமே இருந்துவிட்டுப் போய்விடப் போகிற நாம், அதற்குள் செய்ய வேண்டியவை பற்றி சிந்தித்தாக வேண்டும்; நம்மை ஒழுங்குபடுத்தியாக வேண்டும். வாழ்வை முற்றிலுமாக வீணாக்கி விட்டு அல்லது நரகமாக்கிவிட்டு ஒருநாள் இல்லாமல் போவதில் யாருக்கும் பெருமை இல்லை.

இறப்பு என்பது மட்டுமே மறுக்க முடியாத உண்மை என்ற கவனம் ஏற்படும்போதுதான் வாழ்க்கையைச் சிதைப்பதன் அபத்தம் விளங்கும். துன்பங்களையும் அவலங்களையும் தொடர விடுவதிலும், வாழ்வைப் பாழடிப்பதிலும் சிலர் காட்டும் தீவிரத்திலுள்ள மானுடவிரோதமும் குரூரமும் புரியும்.

ஒவ்வொருவரும் வாழும் காலம் என்பது கணக்கிடப்பட்ட ஒன்று. நமது நாட்டுக்கெல்லாம் சராசரி வயது மிஞ்சி மிஞ்சிப் போனால் எழுபதுக்குள்ளேதான்.

ஆனால் பல்லாயிரக்கணக்கான ஆண்டு வாழப்போகிறோம் என்ற மாயையில் தான் ஆதிக்க மனப்பான்மை, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல், மக்களைத் தவறாக வழிநடத்துதல், குறுகலான எண்ணங்களுக்காக கோபத்தைச் சாதித்தல் போன்றவற்றைச் செய்துகொண்டிருக்கிறோம்.

வாழ்வது என்பது முடிவில்லாத தொடர் கதையாக இருக்குமென்றால் மனிதர்கள் இன்னும் எவ்வளவு ஆபத்தானவர்களாக மாறிவிடுவார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் குலை நடுங்கும். ஆதிக்க மனப்பான்மையும் வீம்புகளும் அதிகரிக்கும்.

ஓர் ஆய்வில் சிலரிடம் நீங்கள் வாழப்போகும் காலம் இன்னும் ஒரு வாரம் தான் என்று கூறப்பட்டது. அவர்கள் அந்தக் குறுகிய காலத்திற்குள் தாங்கள் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளவே முயன்றனர். தங்களுக்குத் துன்பம் விளைவித்தவர்களின் பட்டியலை எடுத்துக் கொண்டு பழிக்குப் பழிவாங்கப் புறப்படவில்லை. சாகப்போகும் நேரத்தில் மனசாட்சிக்கு பயந்து நடந்து கொள்வதையே முக்கியமாகக் கருதினர்.

தமிழ்ச் சமூகத்தின் மீது அக்கறை கொண்டவர்களும்,அதன் குரலாக ஒலிக்க விரும்புபவர்களும் தங்கள் மனசாட்சிக்குப் பயந்து நடக்க வேண்டிய தருணம் இது. பழிவாங்கல், வீம்பு, கோபம், குறுகிய சுயலாபங்கள் ஆகியவற்றுக்காக சாமானியர்களின் வாழ்வைப் பணயம் வைக்கக் கூடாது. மூன்று தசாப்தங்களை யுத்தக் கொடுமைகளோடும் அவலங்களோடும் கழித்து விட்டனர் நமது மக்கள். இன்னும் அவர்களிடம் போரிடும் வீம்பும் அதற்கான அறைகூவல்களுமே முதன்மை நிலையில் இருப்பதாகக் காட்டிக்கொண்டு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை வேண்டுமென்றே தாமதிக்கும் போக்கை நாங்கள் ஆதரிக்கக் கூடாது.

இலங்கை அரசின் மீதும் இந்தியாவின் மீதும் சர்வதேசத்தின் மீதும் பழியைப் போட்டுவிட்டு, நமக்கான தீர்வு தள்ளித் தள்ளிப் போவதற்கெனவே அரசியல் செய்யக்கூடாது. உலகில் யாரும் ஒத்துக்கொள்ளாத ஒரு தீர்வையே நமது கோரிக்கையாக வைத்துக்கொண்டு, மக்களுக்கும் போலியான நம்பிக்கைகளை ஊட்டி காலத்தை வீணடிக்கக் கூடாது.

அழகியதும், அபூர்வமானதுமான இந்த வாழ்வை வரட்டு வீம்புகளால் அழித்துவிடாமல், யதார்த்த நிலைகளுக்கேற்ற முடிவுகளை எடுப்பதற்கு நம் மனங்களைப் இசைவுபடுத்துவோம்.

-ஆசிரியர்

# புலம்பெயர் அமைப்புகள் தடை; அறிவிப்பில் கையெழுத்திட்ட பீரிஸ்

(கொழும்பு)

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் 1373 இலக்க தீர்மானத்துக்கு அமைவாக விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும், 15 புலம்பெயர் தமிழ் அமைப்புகளை பயங்கரவாத அமைப்புகளாகப் பட்டியலிடுவது தொடர்பான, ஆவணத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கையெழுத்திட்டுள்ளார்.

இதுதொடர்பாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயங்கரவாதத்துக்கு எதிரான மற்றும் பயங்கர வாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1373 இலக்க தீர்மானத்துக்கு அமைய, பட்டியலிடப்பட்டுள்ள ஆட்கள் மற்றும் அமைப்புகள் பற்றிய பிரகடனத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கையெழுத்திட்டுள்ளார்.

இந்தச் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும். பாதுகாப்புச்செயலரின் பரிந்துரையின் பேரிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த சட்டவிதிமுறைகளின் கீழ், பட்டியலிடப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அமைப்புகளின் சொத்துகள், நிதிகள், பொருளாதாரவளங்கள் அனைத்தும், இந்தப்பட்டியலில் இருந்து நீக்கப்படும் வரையில் முடக்கி வைக்கப்படும். உரிய அதிகாரிகளின் அனுமதியின்றி முடக்கப்பட்ட சொத்துகளை இடம்மாற்றுதல், கைமாற்றுதல், மற்றும் அதனைக் கையாள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனை மீறுவோர் கடுமையான தண்டனைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், பல்வேறு நாடுகளின் தூதுவர்களுக்கு விளக்கமளித்துள்ளார். இந்த அமைப்புகள் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, இத்தாலி, நோர்வே, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், அவுஸ்ரேலியா, உள்ளிட்ட நாடுகளில் இயங்கி வருவதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

# போலி நாணயத்தாள்களை இனம் காணஇயந்திரங்கள்

(கொழும்பு)

அனைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களும், போலியான நாணயத்தாள்களை அடையாளம் காண்பதற்காக பயன்படுத்துகின்ற இயந்திரங்களின் பாவனை தொடர்பில் தெளிவுப்படுத்தப்படவுள்ளன. மத்திய வங்கி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளதாக, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இலங்கையில் போலி நாணயத்தாள்களின் பாவனை அதிகரித்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை அனைத்து நிதி நிறுவனங்களிலும் போலி நாணயத் தாள்களை அடையாளப்படுத்தும் இயந்திரங்கள் கட்டாயமாக பேணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# வவுனியா, அநுராதபுரத்தில் அதிகரித்த வெப்பநிலை

(வவுனியா)

வவுனியா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் 37 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரித்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் நாட்டின் வெப்பநிலை தற்போது அதிகரித்துள்ளதாக திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் அஜித் விஜேமான்ன தெரிவித்தார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பாக ஏப்ரல் மாதத்தில் சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுப்பதால், இந்த மாதத்தின் முதல் வாரத்திலிருந்து 18 நாட்கள் வரை நாட்டில் அதிக வெப்பம் நிலவும் என்றும் அவர் தெரிவித்தார்.

மே மாதம் வரை ஓரளவு வெப்பநிலை அதிகாரித்தே காணப்படுவதுடன், நுவரெலியா பிரதேசத்திலும் காலநிலையில் சிறிதளவு மாற்றம் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மாவட்டத்திற்கு மாவட்டம் வெப்பநிலையில் வித்தியாசம் நிலவுவதுடன், சில வேளைகளில் 39 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வவுனியா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களில் தற்போது அதிக வெப்பநிலை காணப்படுவதுடன், அந்த மாவட்டங்களில் 37.5 பாகை செல்சியஸ் வரை வெப்பநிலை பதிவாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நிதி நிறுவனங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு

### கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க

அண்மைக் காலமாக நிதி நிறுவனங்கள் மீதான கொள்ளைச் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக நிதி நிறுவனங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி நிதி நிறுவனங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

அண்மையில் மத்துகம பிரதேசத்தில் 50 இலட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து நாற்பத்து இரண்டு இலட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதனைத் தடுப்பதற்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்கள் நிதி நிறுவனங்களுக்கு அருகாமையில் சிவில் உடையில் நிலைநிறுத்தப்படவுள்ளனர்.

இதன் மூலம் கொள்ளைச் சம்பவங்களைத் தடுக்க முடியும் என பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் ஒன்பது நிதி நிறுவனக் கெள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# காலாவதியான நிலையில் ஜெலிப் பைக்கற்றுகள் மீட்பு

(கொழும்பு)

சிறுவர்களுக்காக விற்பனை செய்யப்படும் காலாவதியான 60,000 ஜெலிப் பைக்கற்றுக்கள் நுகர்வோர் அதிகார சபையினரால் மீட்கப்பட்டுள்ளன. காலி - ஹபராதுவ பகுதி விற்பனை நிலையம் ஒன்றில் இருந்தே இந்த ஜெலிப் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன. காலாவதியான ஜெலிப்பக்கற்றுக்களை திகதி மாற்றி விற்பனை செய்ய விற்பனை நிலைய பொறுப்பாளர்கள் தயார் நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட ஜெலிப் பைக்கற்றுக்களின் பெறுமதி 3 இலட்சம் ரூபா எனத் தெரியவருகிறது.

மாவனெல்ல பிரதேச தயாரிப்பு நிலையத்தில் இருந்தே இந்த ஜெலிப்பைக்கற்றுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உரிமையாளர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

# தேர்தலுக்குப் பின்னான காட்சி: தேவையான பாடங்களும் மற்றும் தெரிவுகளும்



**மாகாணசபை தேர்தலில் ஐ.தே.க. அபேட்சகர்களுக்கு வாக்களித்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவுக்கு வாக்களிக்கும் சாத்தியம் குறைவாகவே உள்ளது. மற்றும் சிறிய எதிர்க்கட்சிகளுக்கு சென்ற வாக்குகளை தன்பக்கம் இழுப்பதற்கும் அவருக்கு சாமர்த்தியம் போதாது. மிகவும் முக்கியமாக ஜனாதிபதி வேட்பாளர்கள் ரணில் அல்லது சந்திரிகாவை போல ஓரளவு சிறுபான்மையினரின் ஆதரவை பெற்றிருந்தால் ரணில் பக்கம் சாயும் சிறுபான்மை வாக்குகளுக்கு இழப்பீடு செய்வதைப்போல சிங்கள பற்றுள்ளவர்களின் வாக்குகள் மகிந்தவின் பக்கம் சாயும் வாய்ப்பு உள்ளது.**

**■ கலாநிதி தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து**

ஹொலிவுட் திரைப்படங்களின் வரலாற்றில் போற்றப்படும் படமான டொன் சீகலின் "டேட்டி ஹரி" படத்தில் ஹரி கலகான் எனும் காவல்துறை கண்காணிப்பாளராக நடித்துள்ள கிளின்ட் ஈஸ்ட்வூட் தனக்குத்தானே பேசிக்கொள்ளும் புகழ்பெற்ற வசனமான, "எனக்குத் தெரியும் நீ என்ன நினைக்கிறாய் என்று". அவன் ஆறு தடவை சுட்டானா அல்லது ஐந்து தடவை மட்டும் தானா என்றுதானே.... என்று ஆரம்பிக்கும் வசனம் இடம்பெறுகிறது.

அதே தோரணையில் எதிர்க்கட்சிகள் மாகாணசபை தேர்தல்களின் பின், எண்ணமிடும் உத்திகளை என்னால் சொல்ல முடியும். "ஐ.தே.க பெற்ற 25 விகிதத்துக்கும் அதிகமான வாக்குகளுடன் இன மற்றும் மதச் சிறுபான்மையினர் பெற்ற வாக்குகளையும் சேர்த்தால் மகிந்த ராஜபக்ஸவை தோற்கடிக்க அவசியப்படும் 50.1 விகிதத்தை எங்களால் பெறமுடியும்" என்று.

அந்தப் படக்காட்சியில் டேட்டி ஹரி அதற்கு தகுதியளிக்கும் ஒரு வாக்கியத்தையும் தொடர்ந்து சொல்கிறார், "ஆனால் அதைப் பார்க்கும்போது அது உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த .44 மக்னம் கைத்துப்பாக்கியை போலத் தெரிகிறது, அதனால் உனது தலையை சுத்தமாகத் தகர்த்திருக்க முடியும். நீ உன்னைத்தானே கேட்க வேண்டிய கேள்வி - நீ அதிர்ஷ்டசாலி என்று நினைக்கிறாயா?" என்பதுதான். எதிர்க்கட்சியினரின் கணிப்புகளுக்கு எனது பதிலும் இதற்குச் சமமானதுதான்.

"ஆனால் இதை ஒரு ஜனாதிபதித் தேர்தல் என்ற நிலையில் பார்க்கும்போது, அது நாட்டின் தலைமைத்துவத்துக்காக நடத்தப்படும் ஒரு மற்போர், மேலும் நீங்கள் ரணில் விக்கிரமசிங்கவை மகிந்த ராஜபக்ஸவுக்கு எதிராகக் களமிறக்கினால், நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு கேள்வி - நீங்கள் அதிர்ஷ்டம் செய்திருப்பதாக நினைக்கிறீர்களா?" என்பதுதான்.

நான் வாசித்த விமர்சகர்களால் எழுதப்பட்ட தேர்தலுக்குப் பின்னான ஆய்வுகள் யாவும், எனக்கு ஒன்றைத் தெளிவு படுத்தியது அதாவது அவர்கள் அரசியலைப் பற்றி ட்ரொட்ஸ்கி சொன்னதை ஒன்றில் அறியாதிருக்க வேண்டும் அல்லது மறந்திருக்க வேண்டும், பிரதானமாக அவர்களின் அந்தக் கணக்கு உயர்தர அட்சரகணிதத்தால் புனையப்பட்டிருக்க வேண்டும். அந்த உயர் அட்சரகணிதமானது, இலங்கையின் முறைமை ஜனாதிபதி முறைமை, பாராளுமன்ற முறைமை அல்ல, மற்றும் அதே வேளை மாகாணசபைத் தேர்தல் எதிர்கால போக்குகளுக்கான ஒரு சுட்டியாக இருப்பின், அது ஜனாதிபதித் தேர்தலுக்கு உள்ள வாய்ப்புகளை விட பாராளுமன்றத் தேர்தல் போக்குகளுக்கு மிகவும் சாதகமாக இருப்பதை சுட்டிக்காட்டுவதாகும்.

நாட்டின் தலைமைத்துவத்தை போன்ற உயர் பதவிக்கு, இரு போட்டியாளர்கள் போட்டியிடும்போது, சமூக - உளப்பாங்கின் இயக்கவியல் மிகவும் வித்தியாசமானதாக இருக்கும். இதன் கருத்து மகிந்த ராஜபக்ஸ தோற்கடிக்க முடியாதவர் என்பதல்ல. அவர் நிச்சயமாக தனது கடுமையான திறமை காரணமாக ஒரு வெற்றி ஓட்டத்தை ஆரம்பிப்பார். சிலவேளைகளில் அதில் அவரை தோற்கடிக்கவும் முடியும், ஆனால் நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கவினால் அல்ல.

அவரது கட்சியின் செயல்திறனில் சிறிது வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அவரது சொந்த தொகுதியான கொழும்பு மத்தியில்கூட சுமார் 5,000 வாக்குகள் வரை குறைவடைந்து கட்சியின் செயற்பாட்டில் கணிசமான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது, அதேவேளை கட்சியின் தலைமைக்காக அவருடன் வெளிப்படையாக போட்டியிட்டு வருபவர் (சஜித் பிரேமதாச), தனது கட்சி செயற்பாட்டில் கணிசமான முற்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் புகழில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. ஆனால் ஐ.தே.க. ஆதாயம் அடைய தவறியது மட்டுமல்லாது, அரசாங்கம் பெற்ற வாக்கு

**அரசாங்கம் தனது வலதுசாரி தீவிர சிங்கள கொள்கையிலிருந்து முன்னேற்றமான மையப்பகுதிக்கு திரும்ப வேண்டும் என்பதற்கு இது ஒரு தெளிவான சமிக்ஞை.**

விகிதத்துக்கும் இதனுடைய வாக்கு விகிதத்துக்கும் இடையில் சமப்படுத்த முடியாத பெரிய இடைவெளி காணப்படுகிறது. மிகவும் வியப்பான உண்மை என்னவென்றால் அரசாங்கத்துக்கும் மற்றும் ஐ.தே.க. இடையே காணப்படும் வாக்கு வித்தியாசத்துக்கான இடைவெளி 30 விகிதத்துக்கும் அதிகம், இது ஐ.தே.க. பெற்றுள்ள வாக்குகளை விட சற்று அதிகமான விகிதாசாரமாகும்.

அதன் கருத்து என்னவென்றால் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு ஐ.தே.க. தனது வாக்கு விகிதத்தை இரண்டு மடங்குகளுக்கும் சற்று அதிகம் உயர்த்த வேண்டும். நிச்சயம் இதற்கு எதிர்வாதமாக எதிர்க்கட்சியினர் கூட்டுச் சேரலாம் என்று கூறலாம், ஆனால் அதற்கான சுயமான சான்றுகள் மிக அரிது. ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்க முடியும் என்பது மிகவும் சாத்தியமற்ற ஒன்றாகும். அவர் அப்படிச் செய்தாலும்கூட, வாக்காளர்கள் முன்பாக ரணில் எதிர் மகிந்த என்கிற தெரிவு முன்வைக்கப்படுமானால், ரணிலை வாக்காளர்கள் கடுமையாக புறக்கணிப்பதையே காணமுடியும்.

மற்றைய வாதமாக வருவது, ஐ.தே.க இப்போது பெற்ற 25 விகிதத்தையும் ரணில் தனக்கு கிடைப்பதாக கணித்தால்கூட, சிறுபான்மை வாக்காளர்களின் வாக்குகளையும் அவர் சேர்க்க வேண்டி உள்ளது. இந்த இடத்தில்தான் ட்ரொட்ஸ்கியின் அரசியல் பற்றிய உயர் அட்சரகணிதத்துக்கு முரணாக சாதாரண எண்கணிதம் பொருத்தமுடையதாகிறது. மாகாணசபை தேர்தலில் ஐ.தே.க அபேட்சகர்களுக்கு வாக்களித்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவுக்கு வாக்களிக்கும் சாத்தியம் குறைவாகவே உள்ளது. மற்றும் சிறிய எதிர்க்கட்சிகளுக்குச்சென்ற வாக்குகளை தன்பக்கம் இழுப்பதற்கும் அவருக்கு சாமர்த்தியம் போதாது. மிகவும் முக்கியமாக ஜனாதிபதி வேட்பாளர்கள் ரணில் அல்லது சந்திரிகாவை போல ஓரளவு சிறுபான்மையினரின் ஆதரவை பெற்றிருந்தால் ரணில் பக்கம் சாயும் சிறுபான்மை வாக்குகளுக்கு இழப்பீடு செய்வதைப்போல சிங்கள பற்றுள்ளவர்களின் வாக்குகள் மகிந்தவின் பக்கம் சாயும் வாய்ப்பு உள்ளது.

இவை யாவும் கூட்டான எதிர்க்கட்சி ஒன்றை அடைய முடியாது என்றோ அல்லது பந்தயத்தில் ஜனாதிபதி ராஜபக்ஸவினை தோற்கடிக்க முடியாது என்கிற அர்த்தம் கற்பிப்பவை அல்ல. ஒரு பொது வேட்பாளரால் அல்லது ஐ.தே.க.வுக்கு புத்துயிர் வழங்கும் ஒரு வேட்பாளரால் ஜனாதிபதித் தேர்தலில் ஏனைய எதிர்க்கட்சிகளின் வாக்குகளை தன்பக்கம் கவருவதுடன் முன்பிருந்த வாக்காளர்களை தன்னிடத்தில் திரும்ப கொண்டு வரவும் முடியும்.

இவை யாவும் மாகாணசபைத் தேர்தல்கள் முடிவுகளின் சான்றுகளாக இருக்கின்றன, ஆனால் ஐ.தே.க.வின் உத்தியோக பூர்வ பதில்களில் இந்த முடிவுகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை மிகவும் ஆச்சரியமான ஒரு ஒற்றை தேர்தல் முடிவாக அம்பாந்தோட்டை மாவட்டம் இருப்பதாலோ என்னவோ...

மற்றும் இங்குகூட தென்பகுதியின் ஆழமான பகுதியில் அமைந்துள்ள திஸ்ஸமகாராமவில் ஆளும் கட்சிக்கும் மற்றும் ஆளும் குடும்பத்தின் செல்வாக்குக்கும் மட்டும் சரிவு ஏற்படவில்லை, ஐ.தே.க. உண்மையில் 10,000 வாக்குகள் (10 விகிதம்) அதிகம் பெற்றுள்ளது. இது ராஜபக்ஸ இயந்திரம் மற்றும் ஐ.தே.க. அமைப்பு ஆகிய இரண்டு முனைகளில் போராடும் ஒரு இளம் அரசியல்வாதி ஏற்படுத்தியுள்ள சாதனை. சஜித்தையும் அவரது பிரசாரத்தையும் ஐ.தே.க. தனிமைப்படுத்திய போதும், ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் செய்ததுடன் ஒப்பிட்டுப் பேசினால் அதைக் காட்டிலும் அவர் மிகவும் திறமையாக செய்து காட்டியுள்ளார்.

ரணில் ஐ.தே.க. கோட்டையான கொழும்பு மத்தியில் ஒரு சரிவினை பதிவு செய்துள்ளவர். அப்படியானவர், ஜனாதிபதித்தேர்தலில் சிங்கள,பௌத்தர்கள் உள்ள நாட்டின் இதயப் பகுதியில் எவ்வளவு மோசமாக செயற்படுவார்?

இதற்கு மாறாக, ராஜபக்ஸவின் ராஜியத்தின் மையப் பகுதியில் ராஜபக்ஸ இயந்திரத்துக்கு எதிராகவே சஜித்தினால் திறம்படச் செயலாற்ற முடியுமாயின் ராஜபக்ஸவின் நேரடி ராஜ்யத்தின் கீழ் வராத நாட்டின் இதர பகுதிகளில் எப்படி அவரால் தேர்ச்சி பெறாமலிருக்க முடியும்?

அதேபோல அரசாங்கமும் பாடம் கற்க வேண்டியுள்ளது. சிங்கள, பௌத்த பேரினவாத கட்சியை பகிரங்கமாக வழிநடாத்தும் சக்தி வாய்ந்த தனிநபரான பாதுகாப்புச் செயலாளரான கோத்தாபய ராஜபக்ஸவின் முகத்தில் அடித்தது போல அமைகிறது, இளம் ஹிருனிகா பிரேமச்சந்திரா பெற்றுள்ள வெற்றி. ஹிருனிகா, ஜனாதிபதி ராஜபக்ஸவின் ஆதரவைப் பெற்றதுடன், மூத்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரது ஆதரவையும் பெற்று, ஒரு ஶ்ரீ.ல.சு.க மற்றும் யு.பி.எப்.ஏ என்பன சேர்ந்த ஒரு இளமையின் கலவையாக முன்னிறுத்தப்பட்டு வெற்றியும் பெற்றார். அரசாங்கம் தனது வலதுசாரி தீவிர சிங்கள கொள்கையிலிருந்து முன்னேற்றமான மையப்பகுதிக்குத்திரும்ப வேண்டும் என்பதற்கு இது ஒரு தெளிவான சமிக்ஞை. ●

# சர்வதேச விசாரணை எனக்கூறி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி

## மேற்குலகை சாடுகிறார் அமைச்சர் சமரசிங்க



**சர்வதேச விசாரணை என்ற போர்வையில் இலங்கையில் குழப்பத்தை ஏற்படுத்த மேற்குலக நாடுகள் முயற்சிப்பதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.**

இது தொடர்பாக ஜனாதிபதியின் மனித உரிமை விவகாரங்களுக்கான சிறப்பு பிரதிநிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச விசாரணைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லாத நிலையில், நவநீதம்பிள்ளையினால் விசாரணைகளை பலவந்தமாக எம்மீது திணிக்க முடியாது.

அமெரிக்கா உள்ளிட்ட சில மேற்கு நாடுகளால் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வரபபடுவதற்கு முன்பு அரசாங்கம் எந்த நிலைப்பாட்டில் இருந்ததோ அதே நிலைப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருக்கிறது.

அனைத்துலக விசாரணையில் எமக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை.

உள்ளக விசாரணைகளை நாம் தீவிரப்படுத்தியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இதன் மூலமாக நியாயத்தை நிலைநிறுத்த முடியுமென நாம் உறுதியாக நம்புகின்றோம்.நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் பலகோணங்களிலும் உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில், சனல் 4 ஒளிநாடா தொடர்பான இராணுவ விசாரணை, காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கான ஆணைக்குழு, திருகோணமலையில் ஐந்து மாணவர்களின் கொலை தொடர்பான சிறப்பு விசாரணை என்று உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் ஆவணங்களை பரிசீலனை செய்து வருகிறது.

உள்ளக விவகாரங்கள் குறித்த அனைத்து விசாரணைகளையும் நேர்மையாக முன்னெடுப்பதன் மூலம், குற்றச்சாட்டுகளுக்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, அவற்றுக்கு காரணமானவர்களுக்கு நியாயமான தண்டனை பெற்றுக்கொடுக்க முடியும்.

உள்ளக விசாரணைகள் நியாயமாகவும் நேர்மையாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அரசாங்கத்திற்கு சர்வதேச விசாரணை அவசியப்படாது.

சர்வதேச விசாரணை என்ற பெயரில் எமது செயற்பாடுகளுக்குள் மூக்கை நுழைத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதே மேற்குலக நாடுகளின் விருப்பம்.

இதற்காகவே, இவர்கள் இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை வேண்டுமென ஒரே பிடியாக இருப்பதுடன் பலவந்தமாக ஏனைய நாடுகளையும் தமது பிரேரணைக்கு சார்பாக வாக்களிக்க வைத்துள்ளனர். அனைத்துலக விசாரணை இலங்கைக்கு பொருத்தமில்லாத ஒன்று. இதனை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன் பொறுப்பேற்கப்போவதுமில்லை.

நவநீதம்பிள்ளை தலைமையிலான விசாரணைகளுக்கு நாம் எந்த வகையிலும் தயாரில்லாத அதேவேளை, இதனை முன்னெடுப்பதற்கு நாம் இடம் வழங்கப் போவதும் இல்லை.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்த போதிலும், அவர் இங்கு வந்து இலங்கை குறித்த தவறான கருத்துகள் அடங்கிய அறிக்கையையே அனைத்துலக சமூகத்திற்கும் மனிதஉரிமைகள் பேரவைக்கும் முன்வைத்திருந்தார்.

இந்தநிலையில், எதற்காக அவர் மீண்டும் இலங்கை வர அனுமதிக்க வேண்டும்?

அப்படியே எமது நாட்டிற்கு அவர் வந்தாலும் இலங்கை குறித்த பிழையான அறிக்கையினையே அவர் மீண்டும் முன்வைப்பார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.


எனவே அவர் மீண்டும் நாட்டிற்குள் வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது.

நவநீதம்பிள்ளை மட்டுமல்ல, எந்தவொரு வெளிநாட்டுப் பிரதிநிதியும் அரசாங்கத்தின் அனுமதியின்றி நாட்டிற்குள் வர முடியாது.

உள்ளக விசாரணைகளை நீதி அடிப்படையில் நேர்மையாக முன்னெடுப்பதன் மூலம் நல்லிணக்கச் செயற்பாடுகளை முன்னரிலும் அதிக சக்தி மிக்கதாக உருவாக்க அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தேவையற்ற வெளிநாட்டு தலையீடு இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தாது

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு

இலங்கை மீதான தேவையற்ற வெளிநாட்டுத் தலையீடுகள் கடும் போக்கு வாதத்தை மேலும் அதிகரிக்கச் செய்யுமே தவிர இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தாது என அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை எட்ட முடியும் என்பதனை அரசாங்கம் உறுதியாக நம்புகிறது.

நாட்டில் இனத்துவ கடும்போக்குவாதங்கள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். சிங்கள பௌத்த, தமிழ் அல்லது முஸ்லிம் பயங்கரவாதத்தை ஏற்றுக் கொள்ள முடியாது இலங்கை தேசிய அடையாளங்களுடன் கட்டியெழுப்பப்பட வேண்டியது அவசியமானது

உலகின் மிகவும் பயங்கரமான பயங்கரவாத அமைப்பு ஒன்றை இல்லாதொழித்த நாடு என்ற வகையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது எமது கட்சியான லங்கா சமசமாஜ கட்சி சிறுபான்மையின மக்களின் உரிமைகளுக்காக என்றும் குரல் கொடுத்து வந்துள்ளதாவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இராணுவ ஒழுக்கம் தெரியாத இளைஞர்களால் களங்கம்

## என்கிறார் இராணுவப் பேச்சாளர்



விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது அவசர அவசரமாக இணைத்துக் கொள்ளப்பட்ட இராணுவத்தினரால், தற்போது இராணுவம் சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கேகாலை பகுதியில் 27 இலட்சம் ரூபா பெறுமதியான, ஐயாயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் 520 ஐ வைத்திருந்த இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். இது தொடர்பாக இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்த இராணுவத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தகவல் வழங்கிய இராணுவப் பேச்சாளர், இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவ ஒழுக்கங்கள் தொடர்பில் எதுவுமே தெரியாத சில இளைஞர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாகவும் அவர்களே தற்போது இராணுவத்தை களங்கத்துக்கு உட்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் நிலையான சமாதானம் சர்வதேச விசாரணை வழிவகுக்கும்

## நம்பிக்கை கொள்கிறது "த ஏஜ்"




இலங்கைக்கு எதிரான ஐ.நாவின் சர்வதேச விசாரணை இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துமென த ஏஜ் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்த காலப்பகுதியில் இருந்து, இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களை வெளிப்படுத்துமாறு சர்வதேச நாடுகள் கோருகின்றன. ஆனால இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் அதனைத் தொடர்ந்து நிராகரிப்பதுடன், இதனை ஒரு கௌரவப் பிரச்சினையாக பார்த்து வருகிறது.

ஆனால் இந்த விடயத்தில் உண்மையான விசாரணை செய்து, கடந்த கால உண்மைகள் வெளிக் கொணரப்படாத நிலையில் நிலையான சமானத்தையோ, மறுசீரமைப்பையோ ஏற்படுத்திவிட முடியாது.

எனவே ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணையானது, இலங்கையில் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற உண்மைகளை வெளிக்கொண்டு வந்து, அதற்கு அரசாங்கம் முகம் கொடுக்கும் வகையில் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்தால், ஐக்கிய நாடுகள் சபை இலங்கையின் இறைமையை மீறியுள்ளதாக கருதவும் முடியாது. காரணம் இலங்கை அரசாங்கம் தாம் பொறுப்புக்கூற தவறியுள்ள நிலையில அதனை மேற்கொள்ளும் பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையிடம் இருக்கிறது என்றும் த் ஏஜ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

# வலுவான எதிர்க்கட்சி இல்லையெனில் மேற்குலகம் நாட்டை தோற்கடிக்கும்

## எச்சரிக்கிறார் தயான்ஜயதிலக



நாடு ஒன்றின் அரசாங்கத்தின் மீது இருக்கும் நம்பிக்கை வீழ்ச்சியடைந்து, அந்நாட்டில் வலுவான எதிர்க்கட்சி இல்லாத நிலையில், மேற்குலக நாடுகளினால் அப்படியான நாட்டை தோற்கடிக்க முடியும் என முன்னாள் இராஜதந்திரியான கலாநிதி தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் பெரும்பாலான மக்கள வாக்களிக்காதமைக்கும், ஜெனிவாத் தீர்மானத்திற்கும் இடையில் தொடர்புள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணமாக நாடுகளில் பொதுத் தேர்தல் அல்லாத ஏனைய தேர்தலில் வாக்களிக்கும் மக்களின் எண்ணிக்கையானது குறைந்தே காணப்படும்.

18 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம், அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக தேர்தலில் வெல்ல முடியவில்லை என ஒரு சிலர் கூறுகின்றனர்.

இவை அனைத்தும் இருந்தும் வடக்கில் பெருமளவிலான படையினர் இருந்தும் வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

சரியான எதிர்க்கட்சி இருந்தால் மக்கள் வாக்களித்து அரசாங்கத்தை தோற்கடிப்பார்கள். அவ்வாறான வலுவான எதிர்க்கட்சி இல்லாத நிலையில் மக்கள் வாக்களிக்க எண்ணுவதில்லை.

நாட்டில் ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் மீதான் மக்களின் நம்பிக்கை குறைந்து வருகிறது.

பிரதான எதிர்க்கட்சி மீதும் மக்களுக்கு தற்போது நம்பிக்கையில்லை. இந்த நிலையில் மாற்றங்கள் ஏற்படாது போனால் மக்கள் அரசியல் செயற்பாடுகளில் இருந்து தூர விலகிச் செல்ல ஆரம்பித்து விடுவார்கள்.

# சுமாத்ரா சிறையில் 30 இலங்கை அகதிகள்?


(இந்தோனேசியா

வடக்கு சுமாத்ராவின் மெடான் சிறையில் 30 இலங்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது அந்தத் தடுப்பு முகாமின் தலைவர் பூர்பனாஸ் சினாகாவை மேற்கோள் காட்டி, அன்ட்ரா நியுஸ் இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இருந்து அகதிகளாக அவுஸ்ரேலியா செல்ல முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்டவர்களாக இவர்கள் இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# மக்களிடம் சமூக பாகுபாடுகளை வளர்ப்பது வேதனையளிக்கின்றது

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(பூநகரி)

அனைத்து ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக நீண்ட போராட்டம் நடந்த மண்ணில் இன்றும் சில சக்திகளால் சமூக பாகுபாடுகள் வளர்க்கப்படுவது வேதனையான விடயம் என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பூநகரி பிரதேச பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தெரிவு செய்யப்பட்ட புதிய இயக்குநர் சபையினருடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

பூநகரி பனை, தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் தனது செயற்பாடுகளை விரிவாக்கி வருமானத்தை பெருக்கி அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்க வேண்டும். அதற்காக நாமும் எங்களாலான அனைத்து ஒத்துழைப்புகளையும் தொடர்ந்தும் வழங்குவோம். குறிப்பாக சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள காணிப் பிணக்கினை விரைவில் தீர்த்து வைப்பதற்கும், மேலதிக கள்ளை போத்தலில் அடைப்பதற்கான அனுமதியினை பெறுவதற்கும் முயற்சிகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பூநகரி பிரதேச செயலாளர் சத்தியசீலன்,பூநகரி பிரதேச சபை உறுப்பினர் இராசலிங்கம், பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செ.சுபாஸ்கரன் பொது முகாமையாளர் ஞானசுவேந்திரன் மற்றும் இயக்குநர் சபை உறுப்பினர்கள் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வடக்கில் மும்மொழிக்கொள்கை வளவாளர்களும் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் மும்மொழிக் கொள்கையினை அமுல்படுத்தும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட 21 வளவாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதன்போது, 12 சிங்கள வளவாளர்களும், 9 ஆங்கிலவளவாளர்களும் நியமனக்கடிதங்களை பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மும்மொழிக் கொள்கை அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது. (25)

# மீட்கப்படாத நகைகள் ஏலம்

(வன்னி)

வன்னிப் பிராந்திய மக்கள் வங்கிக் கிளைகளில் 28.02.2013 இற்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக வன்னிப்பிராந்திய மக்கள் வங்கி செயலகம் அறிவித்துள்ளது.

மேலும் அவற்றின் விபரங்கள் வருமாறு,

பளை, பரந்தன், கிளிநொச்சி கிளையின் பொருட்கள் நாளையும், நாளை மறுதினமும் கிளிநொச்சி மக்கள் வங்கி கிளையிலும், மன்னார் பேசாலை கிளையின் பொருட்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி மன்னார் கிளையிலும், முருங்கன் நானாட்டான் சிலாவத்தை கிளையின் பொருட்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி முருங்கன் கிளையிலும் ஏலவிற்பனை செய்யப்படவுள்ளன.

செட்டிக்குளப் பொருட்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி செட்டிக்குளத்திலும் முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான் கிளையின் பொருட்கள் எதிர்வரும் 19ஆம் திகதி முல்லைத்தீவு கிளையிலும், மாங்குளம், மல்லாவி, கனகராயன் குளம் கிளையின் பொருட்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி மாங்குளம் கிளையிலும் விற்பனை செய்யப்படவுள்ளன.

வவுனியா நெடுங்கேணி கிளையின் பொருட்கள் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் வவுனியா கிளையிலும் விற்பனை செய்யப்படவுள்ளன என செயலகம் அறிவித்துள்ளது.(105)

# டெங்கு நோய்த்தாக்கத்தால் அதிகளவு மாணவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் இதுவரையில் பத்து டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பணிப்பாளர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணியளவில் டெங்கு கட்டுப்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அதன்போது உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இது போன்ற டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமாயின் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் சுகாதாரமான சூழலை நாம் ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும். அதுமட்டுமல்லாது இந்த டெங்கு நோயினால் அதிகமாக பாதிக்கப்படுகின்றவர்கள் பாடசாலை மாணவர்களே. எனவே டெங்கு நோய் தொடர்பில் பாடசாலைகளுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.(48)




## ஜய வருடம் உங்களுக்கு எப்படி?

**மிதுனம்**

மக்களால் மதிப்பும் கௌரவமும் பெற்றோருக்கு கிடைக்கும். மின்சாரம், தொலைபேசி இணைப்புக்கள் பொருத்தப்படும். காதலில் வீசிய புயல் தணிந்து விடும். குடும்பத்தில் நிலவிய சந்தேகக் கோடு விலகி சந்தோஷம் தக்க வைக்கும். வேளாண்மை சிறப்பதுடன் கால் நடை, கோழி வளர்ப்பு என்பன இலாபம் தரும். உள்ளூரில் வேலைவாய்ப்பு கிடைப்பதினால் தேடிவந்த வெளியூர் பயணத்தைக் கைவிடுவர். பெற்றோரின் தேக நலமேம்பாட்டினால் கவின் சூழல் ஏற்படும். பகைமை உணர்வுகள் மறைந்து விடும். வியாழ சுகம் இருப்பதினால் இழுபட்ட தடைப்பட்ட நிகழ்வுகள் வெற்றியைக் கொண்டுவரும். குடும்பத்தில் மகிழ்வு தக்கவைக்கும். 5 இல் சனி நெஞ்சில் சளியாக சிலரின் முயற்சிகள் வேதனையைக் கொண்டுவரும். நீர்த்து விஷக்கடி பற்றிக்கவனமெடுங்கள். மாமன்மார் உறவில் விரிசல் தோன்றும். உதவாத பொருட்களைப் பெற்று மனவேதனையை ஏற்படுத்தும். உடல்வாகு, நிறம், சீதனப் பிரச்சினையால் முற்றாகும் நிலையில் இருந்த விவாகம் ஸ்தம்பித்து விடும். பாலியல் துன்புறுத்தலால் இருபாலாரும் பாதிப்படைவர். பெற்றோரின் புத்திமதிகளை அலட்சியம் செய்து தீராத வேதனையை அனுபவிப்பார்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா,
வி.ஏ.சிவராசா

# முரசின் இன்றைய பலன்



**(04.04.2014 வெள்ளிக்கிழமை)**

விஜய வருஷம் பங்குனி மாதம் 21 ஆம் திகதி.
மரணயோகம் / பஞ்வமி.
ரோகினி நட்சத்திரம் பி.இ. 04.35 வரை. பின் மிருகசீரிடம்.
இராகு காலம் 10.40 - 12.10 வரை. சுபநேரம் 06.10 - 07.40 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | செயல்திறன் கொண்டவரிடம் பணியை ஒப்படைத்ததால் வேலைப்பளு நீங்கிவிடல், தொழில் சம்பந்தமான கூட்டத்திற்குச் சமூகமளித்தல். |
| ரிஷபம் | இலத்திரனியல் தராசில் மோசடிசெய்யப்பட்டு பாவிக்கப்பட்டமையினால் தண்டனை, பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வில் சித்தியினால் அரசுத்தொழில் கிடைத்தல். |
| மிதுனம் | உரிய நேரத்தில் சென்றமையினால் கன்னமிட முயன்றோரின் செயல் தோற்றுவிடல், திருமண முயற்சி தடைப்படல். |
| கடகம் | பழைய பொருட்கள் கொள்வனவு செய்ய மனைக்கு வருபவர் பற்றி கவனமாக இருத்தல், தாயாரின் தேக நலம் மேம்படுவதை எண்ணி மகிழ்வடைதல். |
| சிம்மம் | பரீட்சைச் சித்தியினால் அரசுப்பணிக்கு நேர்முகத்தேர்விற்கு அழைத்தல், புதிய மனை அமைக்க பொருத்தமான இடத்தை சோதிடர் மூலம் தீர்மானித்தல். |
| கன்னி | பிள்ளைகளை கடுமையாகக் கண்டிக்காமல் பவ்வியமாக புத்திமதி கூறமுற்படல், தம்பதியர் மத்தியில் நிலவிய கருத்து முரண்பாடு அகன்று விடல். |
| துலாம் | சம்பளப் பற்றாக்குறையினால் தனித்தொழில் ஆரம்பிக்க சகோதரர் உதவி செய்ய முன்வரல், சகுனப்பிழையினால் பிரயாணத்தை நிறுத்தும் முடிவு எடுத்தல். |
| விருச்சிகம் | நீண்ட நாட்கள் தொடர்பின்றி இருந்தவரின் தகவல் அறிந்ததால் மகிழ்வு, நோயின் உபாதை நீங்க சத்திர சிகிச்சைக்கு சம்மதம் தெரிவித்தல். |
| தனுசு | தேங்கிய பொருட்களை விற்றுத்தீர்க்க விளம்பரம் செய்யும் எண்ணப்பாங்கு. காணாமற் போன கால் நடையைத்தேடி அலைந்ததால் தேகநலம் பாதிப்பு. |
| மகரம் | மாணவர் வீசாவில் வெளியூர் சென்று கற்க ஆயத்தமாதல், எதிரியை எச்சரிக்கை செய்து துன்பம் நேராமல் இருக்க காவல்துறையை நாடுதல். |
| கும்பம் | நிலுவை செலுத்த ஆபரணங்களை அடகுவைக்கும் நிலைப்பாட்டில் இருத்தல், மூடப்பட்டிருந்த வியாபார நிலையத்தை மீண்டும் இயக்க நடவடிக்கை ஏற்படல். |
| மீனம் | விலைப்பட்டியலைக் காட்சிப்படுத்தாமையால் தண்டம் பெறுதல், முகவரின் திருவிளையாடலினால் பயணத்தைக் கைவிட முடிவுசெய்தல். |

# மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்று வழங்கப்பட்டது கிண்ணம்

## மத்திய கல்லூரி அதிபர் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

கைவிடப்படுவதாக ஒப்பமிட்டு முடிவுக்கு வந்த வடக்கின் போர் மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் வெற்றிக் கிண்ணம் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்றுக் கொண்ட அணி என்ற வகையில், கிரிக்கெட் நீதி நியாயத்துடன் வாழ வேண்டும் என்ற அடிப்படையில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணிக்கு கிண்ணத்தை வழங்குவதில் மத்திய கல்லூரி சமூகம் பெருமையடைகின்றது என யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

108ஆவது வடக்கின் போர் மூன்று நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் வெற்றிக் கிண்ணம் வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 8.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வு குறித்து அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

எமது இரு கல்லூரிக்கு[illegible]டையேயான பெருத் [illegible] போட்டி சிறப்பாக கடந்த [illegible]ஆம் திகதிளில் திட்டமிட்டபடி [illegible]ந்து கொண்டிருந்தபோது இறுதி நாளில் தீர்ப்பாளரின் தீர்ப்பில் குழப்பநிலை அடைந்த மைதானம் தொடர்ந்து இறுதியான தீர்ப்பாளரின் தீர்ப்பை ஏற்று விளையாட முடியாத நிலையில் போட்டி கைவிடப்பட்டது யாவரும் அறிந்ததே. அந்த இறுதி நேர தீர்ப்பை எமது அணி ஏற்று விளையாடாததற்கு நாம் வகைகூறக் கடைப்பட்டுள்ளோம். இது சர்வதேச கிரிக்கெட் மற்றும் நீதி நியாயத்துக்குட்பட்டதாகும். இந்நிலையில் சென். ஜோண்ஸ் கல்லூரி இதற்கு நியாயமான தீர்ப்பை தந்தால்தான் மத்திய கல்லூரியுடன் எதிர்காலத்தில் இந்த உறவைப் பேண முடியும் என்ற எண்ணத்தைத் தெரிவித்தபோது, நிலைமையை உணர்ந்து கொண்ட நாம் 108ஆவது வருட பாரம்பரியமும், நட்பும் இடையில் முறிந்துவிடக்கூடாது என்பதற்காக இரு கல்லூரி அதிபர்களும் போட்டி கைவிடப்படுவதாக ஒப்பிட்டு முடிவுக்கு வந்திருந்தபோதிலும் அவர்களது கோரிக்கையைப் பரிசீலித்து நாம் இறுதி வரை விளையாடி வெற்றி தோல்வி தீர்மானிக்காத நிலையிலும் நட்பும் பாரம்பரியமும் தொடரவேண்டும் என்ற அடிப்படையில் பின்வரும் மூன்று பரிந்துரைகளை முன்வைத்து மூன்று நாட்கள் பேச்சுவார்த்தை நடாத்தினோம்.

இதில் ஒன்று: துடுப்பாட்டம் கைவிடப்பட்டது என்ற முடிவுடன் 50 ஓவர் விளையாடுவது இரண்டாவது மத்தியஸ்தரின் இறுதித் தீர்ப்பை ஏற்று விடுபட்ட இடத்திலிருந்து விளையாடி முடிப்பது, மூன்றாவது இரண்டாவது இனிங்கை விளையாடுவது.

இந்த மூன்று பரிந்துரைகளையும் ஏற்று விளையாடி பரிசு கொடுக்கவே வேண்டி நின்றோம். ஆனால், இவற்றில் எவற்றையும் ஏற்க மறுத்தபோதும் எமது சகோதர சென். ஜோண்ஸ் கல்லூரி நிர்வாகம் மூன்று நாள் பேச்சுக்களிலும் தீர்ப்பாளரின் தீர்பை ஏற்று அணிக்கு வெற்றியை கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. தொடர்ந்து 50 ஓவர் போட்டி விளையாட தாம் தயார் இல்லை என்பதையும் முடிவாகத் தெரிவித்தனர்.

நான் இந்தக் கல்லூரிக்கும் சமூகத்துக்கும் புதியவனாக இருந்தாலும் 108 வருட நட்பும் பாரம்பரியமும் பாதுகாக்கப்பட வேண்டியது அதிபரின் பெரும் பங்கு என்பதை உணர்ந்ததனாலும் இதற்கு மேலாக இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் வாழும் இரு கல்லூரி பழைய மாணவர்களது தூய்மையான நட்பைத் தெரிந்து கொண்டமையாலும் அவர்களது நட்புக்கு தலைசாய்த்து மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்றுக் கொண்ட அணி என்ற வகையில் கிரிக்கெட் நீதி நியாயத்துடன் வாழ வேண்டும் என்ற அடிப்படையில் சென். ஜோண்ஸ் கல்லூரிக்கு இந்தக் கிண்ணத்தை வழங்கி மத்திய கல்லூரிச் சமூகம் பெருமையடைகிறது. ஏதிர்காலத்தில் பாதுகாப்பான மைதான சூழலை ஏற்படுத்தி இரு அணிகளும் அச்சமின்றி தமது திறன்களை காட்ட வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் பொருத்தமற்ற தலையீடுகள் நீக்கப்படும் என்றும் அதில் தெரிவித்துள்ளது.





வெற்றிக் கிண்ணம் மற்றும் காசோலை வழங்கப்படுவதைக் காணலாம்

விளையாட்டுச் செய்திகள்

## அதிர்ச்சித் தோல்வி


பேமிளி சர்கிள் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றில் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில், பெண்களுக்கான டபிள்யு.டி.ஏ., பேமிளி சர்கிள் கோப்பை ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சுலோவாக்கியாவின் ஜனா செபிலோவாவை சந்தித்தார். முதல் செட்டை 4-6 என இழந்த செரீனா, 2ஆவது செட்டையும் 4-6 எனக் கோட்டைவிட்டார். ஒரு மணி நேரம், 24 நிமிடங்கள் வரை நீடித்த போட்டியின் முடிவில், செரீனா 4-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

## மீண்டும் உலக சம்பியன் நம்பிக்கையுடன் ஆனந்த்

முதல்நிலை வீரர் கார்ல்சனை வென்று மீண்டும் உலக சம்பியன் பட்டத்தை வெல்வேன் என விஸ்வநாதன் ஆன்ந்த் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ரஷ்யாவில் நடைபெற்ற கன்டிடேட்ஸ் தொடரில் வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது. ஒரு காலகட்டத்தில் தொடர்ந்து ஆட வேண்டுமா என்ற மனநிலையில் இருந்தேன். தற்போது இந்த வெற்றி மூலம் மீண்டும் பிறந்தது போல், உத்வேகத்தில் இருக்கிறேன். எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிக்காக என்னை முழுவதுமாக தயார்ப்படுத்தி வருகிறேன். இதில் கார்ல்சனை வென்று மீண்டும் உலக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. ஒவ்வொரு முறை விளையாடும் போதும் நான் முடிவை பற்றி எண்ணியதே கிடையாது. எனது முழு சிந்தனையும் ஆட்டத்தில் மட்டுமே இருக்கும் எனத் தெரிவித்தார்.





## தோல்விக்கு காரணம் என்ன? விளக்குகிறார் சகிப் அல் ஹசன்

(டாக்கா)

பங்களாதேஷில் போட்டிகள் நடைபெறுவதால் எங்களிடமிருந்து இரசிகர்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். இதேபோல் ஊடகம் மற்றும் கிரிக்கெட் சபையும் தொடர்ந்து நெருக்கடி அளித்து வருவதால் பதற்றத்திற்கு மத்தியில் வீரர்கள் விளையாட வேண்டி உள்ளது. இதுவே எங்கள் தோல்விக்கு முக்கிய காரணம் என பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சகிப் அல் ஹசன் தெரிவித்துள்ளார்.

மோசமாக விளையாடினால் அணியில் இருந்து நீக்கிவிடுவார்கள் என்ற எண்ணத்தினால், அணி மீது கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, தனது சொந்த ஆட்டம் குறித்து மட்டும் வீரர்கள் கவனம் செலுத்துகிறார்கள்.

இதனால் பயிற்சியாளர், அணித்தலைவர் மற்றும் வீரர்கள் ஒருங்கிணைந்து செயற்பட முடிவதில்லை. அதேசமயம் பயிற்சி வசதிகள் நல்ல முறையில் இல்லை. உலகத் தரம் வாய்ந்த பயிற்சியாளர்கள் இல்லை.

அடுத்த இரு ஆண்டுகள் உள்ளூரில் சர்வதேச கிரிக்கெட் போட்டி எதையும் நடாத்தக்கூடாது. அவ்வாறு தொடர்ந்து பங்களாதேஷில் போட்டிகள் நடந்தால் உள்ளூர் இரசிகர்களிடம் இருந்து எதிர்பார்ப்பு குறையும். எனவே தற்போதைக்கு வெளிநாட்டில் விளையாடுவதே சிறந்ததாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய ஆட்டம்

இரண்டாவது அரையிறுதி

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

தென்னாபிரிக்கா எதிர் இந்தியா

இடம் : டாக்கா நேரம் : 7.00

# மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மரதன் புதுக்குடியிருப்பில் நாளை ஆரம்பம்

(புதுக்குடியிருப்பு)

வடக்கு மாகாண பாடசாலை வீர,வீராங்கனை களுக்கான அரை மரதன் போட்டி நாளை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நடைபெற வுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளின் விளை யாட்டு விழாவின் ஓர் அங்கமாக நடாத்தப்படும் இம்மரதன் ஓட்டப் போட்டி 21 கிலோ மீற்றர் தூரம் கொண்டதாகும்.

இப்போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளை இன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் தமது வரவினை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர் கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் வீர,வீராங் கனைகள் தங்குவதற்காக தங்குமிட வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதில் ஆண் போட்டியாளர்கள் புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரியிலும், பெண் போட்டி யாளர்கள் ஸ்ரீ சுப்பிரமணியம் வித்தியாசாலை யிலும் தங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

இப்போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர் களின் உடைகள் பொருத்தமானவையாக இருக்க வேண்டும் எனவும், இதுவிடயமாக விசேட கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கும் போட்டி ஏற்பாட்டாளர்கள் போட்டியில் பங்கு பற்றுவதற்கான பெற்றோரின் சம்மதக் கடிதம், மருத்துவச் சான்றிதழ் என்பனவும் சமர்ப்பிக் கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாக வுள்ள இப்போட்டி முல்லைத்தீவு நகரில் நிறை வடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஹொக்கி அணியை மேம்படுத்தும் முகமாக கல்லூரியின் பிரித்தானியா வாழ் பழைய மாணவன் சிறினிவாசன் மதனதீபன் தனது நண்பர்களூடாக 35,000 ரூபா பெறுமதியான ஹொக்கி வளைகோல்களை (ஸ்ரிக்ஸ்) அன்பளிப்புச் செய்துள்ளார்.

இவ் உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வின்போது கல்லூரி அதிபர் க.இரத்தினகுமாரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் ஹொக்கி விளையாடும் பாடசாலை களாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி ஆகிய அணிகள் முன்னணியில் திகழ்கின்றமை குறிப் பிடத்தக்கது.




# கோட்ட மட்ட தடகளம் விசுவமடு ம.வி. முதலிடம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட தடகளப் போட்டியில் விசுவமடு மகாவித்தியாலயம் முதலிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது.

புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட தடகளப் போட்டி அண்மையில் விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலிடத்தைப் பிடிக்க விசுவமடு மகாவித்தியாலயம் மற்றும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிகளுக்கிடையில் கடும் போட்டி நிலவி யது. இருப்பினும் விசுவமடு மகாவித்தியாலய வீர,வீராங்கனைகளின் திறமையான செயற்பாட்டிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வீர,வீராங்கனைகள் பின்தள்ளப்பட்டனர்.

ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் விசுவமடு மகாவித்தியாலயம் 330 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி 328 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் முதன் முறையாக 400 மீற்றர் ஓடு பாதையில் இப்போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இப் பாடசாலையிலிருந்து ஒவ்வொரு வருடமும் தடகள வீர,வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உடுவில் பிரதேச மட்ட கபடி கலைஒளி, காந்தி மன்றம் சம்பியன்

(உடுவில்)

உடுவில் பிரதேசத்திற்குட்பட்ட அணி களுக்கிடையிலான கபடிப் போட்டியில் இணுவில் கலைஒளி, காந்தி மன்றம் அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப் பற்றிக் கொண்டன.

உடுவில் பிரதேச பதிவு செய்யப் பட்ட அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஆண், பெண்களுக்கான கபடிப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றன.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டி யில் இணுவில் கலைஒளி, இணுவில் இந்து அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இணுவில் கலைஒளி அணி 48-36 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று பிரதேச மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்களுக்கான கபடிச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சுன்னாகம் காந்தி மன்றம் அணி யும், இணுவில் கலைஒளி அணியும் மோதின. இதில் காந்திமன்றம் அணி 33-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஏனைய போட்டிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இறுதி நாள் போட்டி இந்த மாத இறுதிப் பகுதி யில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டு வருவதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# மாவட்ட தாச்சி இன்று அரையிறுதி

(உடுவில்)

உடுவில் உதயசூரியன் விளை யாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் நடாத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொட ரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இன்று உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் புதுமடம் வைகறை அணியும் மயி லிட்டி வள்ளுவர் மோதவுள்ளது. இப் போட்டித் தொடரின் முதல் அரையிறு திப் போட்டி நேற்று நடைபெற்றது. இறு திப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி அமைப் பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

# தேசிய ஹொக்கி; இன்று காலிறுதி, அரையிறுதி

(வட்டுக்கோட்டை)

இலங்கை பாடசாலை ஹொக்கிச் சங்கத்தினால் நடாத் தப்பட்டு வரும் தேசிய மட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொட ரின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

இலங்கை பாடசாலை ஹொக்கிச் சங்கம் 19 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்திவரும் தேசிய மட்ட ஹொக்கிப் போட்டி நேற்று முன்தினம் முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின் றது.

இதில் ஆண்கள் பிரிவில் 22 பாடசாலை அணிகளும், பெண்கள் பிரிவில் 16 அணிகளும் பங்குகொள்கின்றன. முதல் சுற்று ஆட்டங்கள் லீக் சுற்று அடிப்படையில் நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் லீக் சுற்று ஆட்டங்கள் நேற்று நிறைவடைந்தன. காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகள் இன்றைய தினம் நடைபெறவுள்ள அதே வேளை, இறுதிப் போட்டி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன.



யாழ். மாவட்டம் சார்பாக வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி அணிகள் ஆண்கள் பிரிவிலும், உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணிகள் பெண்கள் பிரிவில் பங்குகொண்டன. ஆண்கள் பிரிவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகளும், பெண்கள் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி களும் புள்ளிகள் அடிப்படையில் காலி றுதிப் போட்டியில் மோதிக்கொள்ள அதிக வாய்ப்பிருப்பதாக போட்டி ஏற் பாட்டாளர்களால் தெரிவிக்கப்படுகின் றது. (93)



தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்படும் சைக்கிள் ஓட்டப் போட்டியில் இரண்டாம் கட்டம் நேற்று வவுனியாவிலிருந்து மதவாச்சி வரையில் நடைபெற்றது. தேசிய இளைஞர் மாநாடு தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய இளைஞர் சேவைகள் மற்றும்,தேசிய இளைஞர் கழக சம்மேளனம், இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட சைக்கிள் ஓட்டம் நேற்று முன்தினம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி வவுனியாவைச் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (48)

# சம்பந்தன் பொதுமக்களுக்காக அரசாங்கத்திடம் பிச்சை எடுக்க மாட்டாராம்! ஆனால் தனக்காக எடுப்பார்!!

- வானவில் 38 இதழ் கட்டுரையிலிருந்து.

அரசாங்கத்திடம் பிச்சை எடுத்து தமிழ் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை தமக்கு இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவரும், அவ்வமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவருமான இரா.சம்பந்தன் சமீபத்தில் வைபவம் ஒன்றில் பேசும்போது கூறியிருக்கிறார்.

ஏறத்தாழ இதே கருத்துப்பட வட மாகாண-சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும் ஒரு வைபவத்தில் பேசும்போது கூறியிருக்கிறார். அதாவது அவர் தனது பேச்சில் அரசாங்கம் வடக்கில் பல அபிவிருத்தி வேலைகளை முனனெடுத்து வருகிறது என்பது உண்மைதான் என்ற போதிலும், அது எமக்கு முக்கியமில்லை, தமிழ் மக்களின் விடுதலை தான் முக்கியம் என்று கூறியிருக்கிறார்.

இந்த இரண்டு பேரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குட்டையில் ஊறிய ஒரே மட்டைகள்.

இவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். அப்படி அவர்கள் பேசுவதற்கான துணிச்சலைக் கொடுத்தவர்கள் வேறு யாருமல்ல தமிழ் பொதுமக்கள்தான். ஏனெனில் அவர்கள் எப்போதும் அரசாங்கத்திடமோ அல்லது ஏனையவர்களிடமோ தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்டு, தமது வாக்குககளை மட்டும் இந்த மலட்டு அரசியல்வாதிகளுக்குப் போட்டு வருகிறார்கள்.

கடந்த வட மாகாணசபைத் தேர்தலின்போது கூட, வட மாகாண மக்கள் அந்தவிதமான கேடுகெட்ட கைங்கரியத்தைத்தான் செய்தார்கள். 30 வருடங்களாக விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் புலிகளிடமும், இதர ஆயுதக் குழுக்களிடமும் அவர்கள் பெற்ற துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால், நாசகார யுத்தத்திற்கு இந்த பொதுமக்கள் ஆதரவாகத்தான் இருந்தார்கள். இல்லை, இல்லை அவர்கள் பயத்தினால்தான் அப்படி இருந்தார்கள் என்று யாராவது சொன்னால் அது பொய்ப் பேச்சு.

அப்படி பயத்தினால்தான் புலிகளுக்கு ஜால்ரா போட்டார்கள் என்றால், புலிகள் அழிக்கப்பட்ட பிறகு நடந்த தேர்தல்களில், அதுவும் யார் பார்வையும் படாமல் இரகசியமாக வாக்களிக்கும் தேர்தல்களில் தம்மை அழிவிலிருந்து காப்பாற்றியதுடன், புனர் வாழ்வும் அளித்த உண்மையான சக்திகளுக்கு அவர்கள் வாக்களித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவில்லை. இப்படியாக கண்ணைத் திறந்துகொண்டு பாழும் கிணற்றில் விழும் தமிழ் மக்களின் செய்கைதான் சம்பந்தன், ஐங்கரநேசன் போன்றோர் இப்படித் திமிர்த்தனமாகப் பேசுவதற்கு இடம் கொடுத்திருக்கிறது.

இந்தச் சம்பந்தன் தான் ஏதோ பெரிய பரிசுத்தவான் போலவும், ஒன்றுக்கும் ஆசைப்படாத துறவி போலவும் பேசுவதில் ஏதாவது உண்மையுண்டா? எள்ளளவும் கிடையாது. இவரது கடந்தகால வரலாறே பாம்புக்குத் தலை-யையும், மீனுக்கு வாலையும் காட்டிய வரலாறு தானே?

புலிகள் அழிக்கப்படுவதற்கு முன்னர் இந்தச் சம்பந்தன் வகையறாக்களால் தமது தொகுதிகளுக்குத் தன்னும் சுதந்திரமாகப் போய்வர முடிந்ததா? புலிகள் அழைத்தால் மட்டும் கிளிநொச்சிக்குச் சென்று அன்ரன் பாலசிங்கத்திடமும், தமிழ்செல்வனிடமும் அரசியல் வகுப்பு எடுத்து வந்தார்கள். மறுபக்கத்தில் அரசாங்கத்திடம் இரகசியமாகக் கதைத்து தமக்கான சலுகைகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

சந்திரிகா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் புலிகளால் தனது உயிருக்கு ஆபத்து என்று அவரிடம் இரகசிய முறைப்பாடு செய்து, கொழும்பில் பாதுகாப்பான இடத்தில் வீடும், குண்டு துளைக்காத காரும், பொலிஸ் பாதுகாப்பும், இதர பல சலுகைகளும் இந்த இரா. சம்பந்தன் பெறவில்லையா? அவர் நேர்மையானவர் என்றால் பகிரங்கமாக இதை மறுக்கட்டும் பார்க்கலாம்.

இப்படியெல்லாம் செய்த அவர் இப்பொழுது பொதுமக்களின் தேவைகளுக்காக அரசாங்கத்திடம் பிச்சை எடுக்க மாட்டேன் என வாய்ச்சவடால் அடிக்கிறார், தன்மானம் பேசுகிறார். புழுத்து நாற்றம் எடுக்கும் தமது கடந்த கால அரசியல் வரலாற்றை மறைப்பதற்காக தனது உடலில் ரோசம் கொப்பளிப்பதாக படம் காட்டுகிறார்.

அப்படி ரோசமானவர்களாக இந்தத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புத் தலைவர்கள் இருந்தால், முதலில் இலங்கை அரசாங்கத்தின் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதையும், அந்தப் பதவியால் கிடைக்கும் கொழுத்த சம்பளம், சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களையும் உதறித்தள்ள வேண்டும். அதைவிடுத்து தாங்கள் அரசாங்கத்திடம் எல்லாவிதமான நன்மைகளையும், சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, சாதாரண மக்களுக்காக மட்டும் அரசாங்கத்திடம் "பிச்சை எடுக்க மாட்டேன்" என்று சொல்வது வடிகட்டின அயோக்கியத்தனமே தவிர வேறொன்றும் அல்ல.




# சிந்தனை பூர்வமாக, பார்க்கும் முறைகளை மாற்றுவதுதான் கலையின் இயக்கம்


– எம்.டி. முத்துக்குமாரசாமி.

என்னுடைய எம்.ஏ.வுக்கான தீஸிஸ்ஸாக ஜேம்ஸ் ஜாய்ஸினுடைய "யுலிஸஸ்" நாவலை எடுத்துக் கொண்டிருந்தேன். ஜேம்ஸ் ஜாய்ஸைப் படிப்பது எனக்கு விருப்பமான ஒன்றாக இருந்தது. அப்போது என் மனநிலை நனவோடை எழுத்து முறை, எக்ஸிஸ்டென்ஷியலிஸம் இந்த இரண்டினாலும் கவரப்பட்டிருந்தது. அந்த மனோ நிலைக்கு ஏற்ப ஒரு கதையை நான் தமிழில் எழுத வேண்டுமென நினைத்தேன். அதே தன்மையுடன் கூடிய கதை ஒன்றை எழுதினேன். ஜேம்ஸ் ஜாய்ஸ் எனக்கு ஆதர்சமான எழுத்தாளராக இருந்த அதே வேளையில் ஸில்வியா பிளாத்தின் மீதும், அவருடைய மரணம், அவருடைய வாழ்க்கை, அவருடைய கவிதைகள் மீதும் பெரிய ஈடுபாடும் எனக்கு இருந்தது.

"ஸில்வியா பிளாத்" நிறைய கவிதைகள் எழுதி இருக்கிறார். "பெல்ஜார்" என்ற ஒரு நாவலைக் கூட எழுதி இருக்கிறார். ரொம்பவும் சென்சிட்டிவ்வான கவித்துவ மனநிலை அவருடையது. இப்படி நிறைய எழுதிக் கொண்டிருந்தாலும், திடீரென்று எழுத முடியாத சூழ்நிலையில் அது எப்படி ஒரு திருப்பமானதாக மாறி அவருடைய வாழ்க்கையை எப்படி துயரமான முடிவுக்கு இட்டுச் சென்றது என்பதை யோசிக்கும் போது, ஸில்வியா பிளாத்தின் மேல் எனக்கு அபூர்வமான பிரியம் ஏற்பட்டது. அந்த பிரியத்தை எப்படி என்று என்னால் சொல்ல முடியவில்லை. "எழுதுவதால் உயிர் வாழ்கிறேன் என்பதோடு எழுதமுடியாமல் போகும்போது உயிரே போய் விடுகிறது" என்கிற தன்னிலை, ஸில்வியா பிளாத்திடம் இருப்பதை நான் உணர்ந்தேன்.

எனக்கு ஜேம்ஸ் ஜாய்ஸ் போல பக்கம் பக்கமாக எழுதக் கூடிய (யுலிஸஸ் நாவல் கூட 600 பக்கங்கள்) ஓர் ஆளுமையின் மீது ஈர்ப்பு இருந்த அதே சமயத்தில் ஸில்வியா பிளாத் மாதிரியான ஒருவர் எப்படி எழுத முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார் என்ற மனோநிலையின் மீதும் பற்று இருந்த காரணத்தினால் என்னுடைய புனைபெயரை "ஸில்வியா" என்று வைத்துக் கொண்டேன்.

என்னுடைய படைப்புகளில் வடிவங்களின் மீது தான் நான் ஆர்வமானவனாக இருந்தேன்.



ஸில்வியா பிளாத்

தொடர்ந்து சிறுகதை. வடிவங்களை எப்படி முழுமையாக மாற்றுவது, ஒரு பதற்றத்திற்கு ஆளான, அமைதியற்ற, பிளவுபட்ட, ஒரு இலக்கற்ற ஓரிடத்திலிருந்து அதை படைப்பின் ஆதார மையமாக வைத்து நீங்கள் என்ன மாதிரியான படைப்பைப் படைப்பீர்கள் என்று பார்க்கும் போது, நேர்கோட்டில் கதை சொல்வது என்பது எனக்கு சாத்தியமற்றுப் போனது. அதையே என்னுடைய பலமாகவும் கருதுகிறேன். "நான்லீனியர் ரைடிங்" தான், என்னால் எழுத முடியும் என்பதும் தெரியவந்தது.

நவீன எழுத்தாளர்கள், பின் நவீன எழுத்தாளர்கள் எல்லோருமே நாட்டுப்புறக் கலைகளில் இருந்துதான் தங்களுடைய போஸ்ட் மார்டனிஸ்ட் மொழியை உருவாக்குகிறார்கள். மிலோரட் பாவிக்கின் எழுத்துக்களில் செர்பிய நாட்டுப்புற கதைகளும், புராணங்களும் மறு உருவாக்கம் பெறுகின்றன என்றால், மார்க்குவெஸ்ஸின் படைப்புகளில் கொலம்பிய நாடோடிக் கதைகளும், பாடல்களும் புது வடிவம் பெறுகின்றன.

பின்நவீனத்துவ சிந்தனையாளர்கள் கலைகளை உயர்ந்த கலை, தாழ்ந்த கலை என்றெல்லாம் வகைப்படுத்துவதில்லை. இலக்கியம் என்பது ஒருவகை மொழி விளையாட்டு; அறிவு சார்ந்த உரையாடல்களில் வெளிப்படுகின்றன உண்மைகள். இவை வாசிப்பின் காலகட்டத்தினாலும், வாசக கருத்தியலிலாலும் உருவாக்கப்படுகின்றனவே அன்றி எழுத்தாளனால் அல்ல.

அதனால்தான் என்னுடைய படைப்புகளில் உயரிய இலட்சியங்களின் கருத்தாக்கம் இருக்கின்ற போதே அதன் கூடவே ஒரு கீழ்த்தரமான விஷயமும் ஒத்த நேரத்தில் கூடவே இருக்கும். இப்படி பல புள்ளிகள் இணைகின்ற சிந்தனைகள் எனக்குக் கிடைத்தன. இவற்றிலிருந்துதான் எனக்கான இலக்கியத்திற்கான ஜினியாலஜியை நான் வகுத்துக் கொண்டேன்.

வில்லியம் ஃபாக்னர், காஃப்கா, மார்க்குவெஸ், பாவிக், போர்ஹே, பார்த்தல்மே, கோர்த்தசார் என பலரை வரித்துக்கொண்டேன் என்று சொல்லலாம்.

கோணங்கி, நாகார்ஜுனன், தமிழவன் போன்றவர்கள் அன்றைக்கு என்ன நினைத்தார்கள் என்றால் வாக்கிய வடிவங்கள் நேரடியானதாக இல்லாமல் அது சிதையும் போதுதான் ஒரு கவிதைக்கான சாத்தியப்பாடு ஏற்படுகிறது என்று கருதினார்கள்.

இதனால் புரியாமலே போய்விடக் கூடிய எழுத்து உருவாகிற ஆபத்து அதில் இருந்தாலும் கூட, அந்த ஆபத்தை எதிர்கொண்டு பயணிக்கலாம் அதுதான் உண்மையான இலக்கியம் என்றும் சொன்னார்கள். இதற்கெல்லாம் தியரிட்டிக்கலான சப்போர்ட்களும் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நாகார்ஜுனனிடமிருந்து இது ஆரம்பித்து பிறகு அது கோணங்கியிடம் விரவிவிட்டது என்பது என்னுடைய எண்ணம்.

இதில் என்னுடைய கருத்து என்னவென்றால், வாக்கிய அளவில் செய்யக்கூடிய சிதைவு இருக்கிறதே அது ஓர் அளவுக்குத்தான் உண்மையாக இருக்க முடியும். அது கவிதையினுடைய வடிவத்திற்கு மட்டுமே சரியானது. சிறுகதைக்கோ, நாவலுக்கோ அது சரியானதல்ல என்ற முடிவுக்கு நான் இரண்டு மூன்று கதைகள் எழுதிப் பார்த்தவுடனேயே வந்து விட்டேன். முற்றுப்புள்ளி இல்லாமல் எழுதின கதைகள். வாக்கியங்களை சிதைத்தெழுதின கதைகள் என்று நனவோடை உத்தியிலிருந்து நகர்ந்து வந்து விட்டேன். நகர்ந்து வந்த பிறகு ஒரு இலக்கிய வகைமையின் வடிவத்தில் செய்யப்படுகின்ற பரிசோதனைகள், அதை எப்படி படைப்பு ரீதியாக எடுத்துக் கொண்டு மேலே போக முடியும் என்பது முக்கியமல்ல; அதன் தன்மைகள்தான் முக்கியமானது என்று நினைக்கத் தொடங்கிவிட்டேன். இது இலக்கிய ரீதியாக மட்டும் முக்கியமானது என்று சொல்ல மாட்டேன். சிந்தனை பூர்வமாக, பார்க்கும் முறைகளை மாற்றுவதுதான் ஒரு கலைக்கான இயக்கமே இருக்கிறது என்பேன்.

# உடல்நிறை குறைப்பு ஒரு இலகுவான கலை


9

சி. சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்.
[நன்றி: Jaffna Diabetic Centre]

மனித உடம்பு ஒரு வினைத்திறன் கூடிய வாகனத்தை ஒத்ததாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றது. ஒருவர் ஒரு சாதாரண தேநீர் அருந்தினால் அதில் உள்ள சக்தியில் அவரால் 3 கிலோமீற்றர் ஓட முடியும். ஒருவர் உடற்பயிற்சிக்காக தினமும் 3 கி.மீ. தூரம் ஓடி விட்டு அந்தக் களைப்பைப் போக்குவதற்கு மேலதிகமாக ஒரு தேநீர் அருந்தினால் அவரிலே எந்த வித சக்தி இழப்பும் ஏற்பட மாட்டாது. எனவே இதன் காரணமாக எந்த வித நிறைகுறைவும் ஏற்படமாட்டாது.

ஒரு சாதாரண பெண்ணின் உடம்பை பராமரிப்பதற்கு 1900 கிலோ கலோரி சக்தி தேவைப்படும். ஒருவர் தனது நிறையை குறைத்துக்கொள்ள விரும்பினால் அவர் தனக்கு அன்றாடம் தேவைப்படும் சக்தியிலும் பார்க்க குறைந்த சக்திப்பெறுமானம் உள்ள உணவுகளையே உண்ணவேண்டும். ஒவ்வொருவரும் தான் சேமித்துவைத்திருக்கும் சக்தியில் 6500 கிலோகலோரியை இழக்கும் பொழுது அவரின் நிறை 1 கிலோவினால் குறைவடைகின்றது. அதாவது ஒருவர் உடற்பயிற்சி மூலமோ அல்லது உணவுக்கட்டுப்பாட்டு மூலமோ 6500 கிலோ கலோரி சக்தியை இழந்தால் அவரின் நிறை 1 கிலோவினால் குறைவடையும்.

ஒருவர் தனது உடற்தேவைக்கு மேலதிகமாக 50g சீனி சேர்க்கப்பட்ட தேநீரை அருந்துபவராக இருந்தால் அவரின் உடல்நிறை 1 கிலோவினால் அதிகரிக்கும். அதே போல அவர் 26 ரோல்ஸ்களை மேலதிகமாக உண்ணுவாராக இருந்தால் அவரின் நிறை 1 கிலோவினால் அதிகரிக்கும். தினம்தோறும் ஒருவர் தனது உடற்தேவைக்கு மேலதிகமாக 1 தேநீரையும், 1 ரோல்ஸ் ஐயும் உண்டு வந்தால் 17 நாட்களில் அவரின் நிறை 1 கிலோவினால் அதிகரிக்கும். அதாவது நாம் இடைநேரங்களில் உண்ணும் உணவுகளும் எமது நிறை அதிகரிப்பில் பெரும் பங்கு வகிக்கின்றன.




உடற்பயிற்சியும் உடல் நிறை குறைப்பிலே ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. அத்துடன் உடற்பயிற்சி உடலின் வினைத்திறனைக் கூட்டுவதற்கும் பல நோய்களைத் தவிர்ப்பதற்கும் பல நோய்களின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கும் உதவியாக இருக்கிறது. அதாவது உடல் ஆரோக்கியமும் அழகும் பெறுவதற்கு உடற்பயிற்சி முக்கிய பங்கு வகிக்கிறது. ஒருவர் தான் வழமையாக நடக்கும் தூரத்திற்கு மேலதி-கமாக 150 கி.மீ. தூரத்தை நடந்தால் அவரின் நிறை 1 கிலோவினால் குறைவடையும்.


ஒருவர் உணவுக்கட்டுப்பாடு இன்றி உடற்பயிற்சி மட்டும் செய்து நிறையைக் குறைத்துக்கொள்வது கடினமாகும். எனவே நிறைகுறைப்பு முயற்சிக்கு உடற்பயிற்சியும், உணவுக்கட்டுப்பாடும் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது.

நாம் உண்ணும் உணவுப்பொருள்கள் ஒவ்வொன்றினதும் கலோரிப்பெறுமானம் என்ன என்பதை அறிந்து வைத்திருப்போமாக இருந்தால் எமது உடற்தேவைக்கு வேண்டிய உணவின் அளவை நாமே தீர்மானிக்க முடியும். நாம் உண்ணும் உணவின் அளவை மாற்றி நிறைகுறைப்பையும் செய்துகொள்ள முடியும்.

(தொடரும்)

# "தி மெசேஜ்" - இஸ்லாத்தின் கதை

- அதிஷா -




நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை அடிப்படையாக வைத்து பத்து பதினைந்து ஆவணப்படங்களாவது வெளியாகி யிருக்கும். அவருடைய வாழ்க்கையை வைத்து எடுக்கப்பட்ட ஒரே முழு நீளத் திரைப்படம் என்றால் "தி மெசேஜ் - THE MESSAGE" மட்டும்தான். இயக்குநர் முஸ்தபா அக்கட் இயக்கிய இத்திரைப்படம் 1977இல் வெளியானது.

இப்படம் தொடங்குவதற்கு முன்பாகவே ஒரு ஸ்லைட் போடுகிறார்கள். "இப்படத்தை தயாரித்தவர்கள் இஸ்லாமிய பண்பாட்டை மதிக்கிறவர்கள், இறைதூதர் நபிகளுக்கு உருவம் கொடுப்பது இஸ்லாத்தின் புனிதமான கோட்பாட்டிற்கு எதிரானது என்பதால் இப்படத்தில் நபிகளின் உருவம் எங்குமே காண்பிக்கப்படவில்லை".

இஸ்லாம், நபிகள் நாயகம் என்கிற எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு இதை ஒரு சாதாரண திரைப்படமாக பார்ப்போம். நாயகனின் உருவத்தை காட்டாமலே ஒரு திரைப்படம் சாத்தியமா? தமிழ்ப்படங்களில் மிகச்சில காட்சிகள் அது போல முயற்சிப்பதுண்டு.. முதலில் காலை காட்டி பிறகு நெஞ்சைக்காட்டி பிறகு முகம் காட்டுகிற யுக்திகள், அல்லது படம் முழுக்க நிழலாக காட்டப்படும் வில்லனின் உருவம் இறுதிக்காட்சியில் அவிழ்க்கப்படும் என்பது மாதிரி நிறைய உண்டு. ஆனால் ஒரு படம் முழுக்கவே கதாபாத்திரத்தின் அதுவும் கதையின் நாயகனின் உருவத்தை ஒரு ஃப்ரேம் கூட காண்பிக்காமல் எப்படி படமெடுக்க முடியும்?

என்ன சொல்ல...

ப்ரில்லியன்ட். படத்தில் நபிகளை காட்ட மட்டுமில்லை. அவருடைய குரலும் கூட வருவதில்லை. உலக சினிமாவில் நாயகனை காட்டாமலேயே எடுக்கப்பட்ட ஒரே படம் இதுவாகத்தான் இருக்க வேண்டும்!

அவர் தோன்றுகிற காட்சிகளில் பல நேரங்களில் கமரா அவருடைய கண்களாக மாறிவிடும். அவருடைய point of view-விலிருந்து காட்சிகள் சொல்லப்படும். அல்லது அவரை நோக்கி மற்ற பாத்திரங்கள் பேசுவதாகவும், பெரும்பாலான நேரங்களில் நபிகளின் பதில் மௌனமாக வரும்படி காட்சிகள் அமைக்கப்பட்டிருந்தன. அல்லது அவருடைய பதிலை அவருடைய சீடர்கள் சொல்வதாகவும் அமைக்கப்பட்டிருக்கும்.

ஒரு சில காட்சிகள் தவிர்த்து எங்குமே நபிகள் காட்டப்பட வில்லை என்கிற உணர்வே வராதபடி காட்சிப்படுத்தியது நிச்சயம் மிகப்பெரிய சாதனைதான்! பதூர் மற்றும் உகுத் போர்க்கள காட்சிகளின் போது மட்டும் போரை முன்னின்று நடாத்துவதாக நபிகளின் உறவினரான ஹம்சாவை காட்டுகிறார்கள்.

ஆனால் அப்போர்களை முன்னின்று நடாத்தியது நபிகள்தான். படத்தில் இதுபோல சில வரலாற்று சலுகைகளையும் இயக்குநர் எடுத்துக்கொண்டிருக்கிறார்.

நபிகளின் முழு வாழ்க்கையையும் இப்படம் காட்சிப்படுத்துவதில்லை. இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களையும் அது எதிர்கொண்ட சவால்களையும் அச்சவால்களை எப்படி நபிகளும் அவருடைய சீடர்களும் எதிர்கொண்டு அரபு நாடுகளில் தனக்கென ஒரு மிகப்பெரிய சாம்ராஜ்யத்தை நிறுவினார் என்பதும் காட்சிப்படுத்தப்படுகின்றன. மெக்காவிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு மெதீனாவில் முதல் வழிபாட்டுத் தலத்தை நிறுவி மீண்டும் மெக்காவிற்கே திரும்பி அந்நகரை ஆண்ட அபூ சுஃபியானை சரணடையச் செய்வதோடு படம் முடிகிறது.

படத்தில் வில்லனாக சித்தரிக்கப்படும் அபூ சுஃபியானை விட அவருடைய மனைவியாக வரும் ஹிந்தின் பாத்திரம் அருமையானது. தன்னுடைய தந்தை மற்றும் சகோதரனை போரில் கொன்ற ஹம்சாவை பழிவாங்கத் துடிக்கும் அவருடைய நடிப்பும் ஆவேசமும் அவ்வளவு கச்சிதம்.

படத்தின் நாயகனாக நபிகள் இருந்தாலும் முக்கால்வாசி படத்தைத் தன்னுடைய அபாரமான நடிப்பினால் ஆட்கொள்பவர் இரண்டு முறை ஒஸ்கார் விருதுகளை வென்ற அன்டனி குயீன். நபிகளின் உறவினரான ஹம்சாவாக் மிகச்சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருப்பார்.

நபிகள் குறித்தும் இஸ்லாத்தைப்பற்றியும் சில அடிப்படையான விஷயங்களை தெரிந்துகொள்ள நினைப்பவர்கள் இஸ்லாம் தன்னுடைய துவக்க காலத்தில் என்னவாக இருந்தது என்பதை புரிந்துகொள்ளவும் நினைப்பவர்கள் இப்படத்தை நிச்சயம் பார்க்கலாம். யூ-டியூபிலேயே முழுப்படமும் தமிழ் டப்பிங்கில் கிடைக்கிறது.


# அப்பிடியே சாப்பிடலாம்!

தைவானில் ஒரு திருமண விழா. பந்தி முடிந்ததும் இலை எடுக்கும் வேலை... இல்லையில்லை... தட்டுகளை எடுக்கும் வேலை அங்கில்லை. மண்டபத்தின் பின்புறத்தில் தட்டுகளை, கரண்டிகளை, ஸ்பூன்களைக் கழுவும் வேலையும் இல்லை. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் எழுவதற்குள்ளேயே மாயமாய் அவை மறைந்துவிட்டனவா? என்றுதான் எல்லோருக்கும் தோன்றும். விருந்து பரிமாறப்பட்ட தட்டுகளை, கரண்டிகளை, ஸ்பூன்களை எல்லாம் அங்கே தின்றுவிடுகிறார்கள். ஆம்... அங்கு உணவு பரிமாறப்படும் தட்டுகள், கரண்டிகள், ஸ்பூன்களை எல்லாம் கோதுமையில் செய்துவிடுகிறார்களாம். ஓர் இனிப்பை ஸ்பூனில் எடுத்துச் சாப்பிட்டு முடித்ததும், அந்த ஸ்பூனையும் சாப்பிட்டு விட வேண்டியதுதான்.

இந்த கோதுமைத் தட்டுகள், கரண்டிகள் எல்லாம் பிளாஸ்டிக் தட்டுகள், கரண்டிகள் போன்றவற்றுக்கு மாற்றாக - சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கின்றன.

இதில் உள்ள ஒரே ஒரு குறை... எவ்வளவு சுவையான உணவுகளைச் சாப்பிட்டாலும், கடைசியில் வாயில் மிஞ்சியிருப்பது அந்தத் தட்டுகளின், கரண்டிகளின், ஸ்பூன்களின் சுவைதான்.



# தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியின் நூற்றாண்டு கால தடங்கள்



பாவலர்
தெ. துரையப்பாப்பிள்ளை

பாவலர் தெ. துரையப்பாப் பிள்ளை தெல்லிப்பளை யிலுள்ள அவரது வீட்டில் 1910 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரியை ஆரம்பித்தார்.இரண்டு வருடங்கள் பாவலர் இல்லத்தில் இயங்கிவந்த மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரி, 1912 ஆம் ஆண்டு ஆவணி மாதம் தற்போது கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கும் இடமான அம்பனை, தெல்லிப்பளை என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது.பல தடவைகள் அரச உதவி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், 1919 ஆம் ஆண்டிலேயே முதல் அரச உதவி கிடைக்கப்பெற்றது.தொடர்ந்து, மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரி வளாகத்தினுள் இயங்கிவந்த சரஸ்வதி தமிழ்ப் பாடசாலை, மகாஜனக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தர வகுப்புவரை நிறுவப்பட்டது

## மகாஜனக் கல்லூரி வரலாறு

இலங்கையில் மேற்குலகக் காலனித்துவ ஆட்சிக்காலப் பகுதியில், காலனித்துவ அரசாங்கத்தினால் கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அப்பாடசாலைகள் கல்வியில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் அப்பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியினைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டதுடன் சைவத்தமிழ் மக்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது. இக்கால கட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றிவந்த பாவலர் தெ. துரையப்பாப்பிள்ளை சைவத்தமிழ் மக்களும் ஆங்கில மொழிப்புலமை பெற்று அவர்களும் வேலை வாய்ப்புக்களைப் பெறவேண்டும் என்ற நற்சிந்தனையோடு, தனது ஆசிரியப் பதவியினையும் துறந்து, போதிய பண வசதியோ, இடவசதியோ அற்ற நிலைமையிலும் தனது அறிவாற்றலையும் தன்னம்பிக்கையையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு தெல்லிப்பளையிலுள்ள அவரது வீட்டில் 1910 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரியை நிறுவி, அரச உதவிகள் கிடைக்கப் பெறாத நிலையிலும், தமிழ் மக்களின் நிதியுதவியுடன் அமெரிக்க மிசன் பாடசாலைகளுக்கு நிகராக கல்லூரியை திறம்பட நடாத்தி வந்தார்.

மகாஜனக் கல்லூரி ஸ்தாபகரான பாவலர் தெ. துரையப்பாப்பிள்ளை 24.06.1929 அன்று காலமானார். அவரை நன்றியுடன் நினைவுகூரும் முகமாக ஆண்டுதோறும் அவர் இறந்த தினமான ஆனி 24 ஆம் திகதி ஸ்தாபகர் தினம் நினைவுகூரப்பட்டு வருகின்றது. ஸ்தாபகரின் மறைவைத் தொடர்ந்து, கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிவந்த சின்னப்பா அதிபராகக் கடமையேற்று, பாவலர் வழியில் பாடசாலையைத் திறம்பட வழிநடாத்தி வந்தார். 1936 ஆம் ஆண்டு கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதுடன், 1943 ஆம் ஆண்டு கல்லூரியில் பெண்கள் கல்விகற்பதற்கான இட ஒதுக்கீடு செய்யப் பட்டதுடன் செல்வி. இராஜமலர் சின்னையா அவர்கள் கல்லூரியின் முதலாவது ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். அதிபர் திரு. சின்னப்பா 1941 ஆம் ஆண்டு நவீன விஞ்ஞானக் கல்வி கற்பிக்கும் வசதியினை கல்லூரியில் ஏற்படுத்தினார். இதுவரை 160 ஆகவிருந்த கல்லூரி மாணவர் தொகை, இவரது காலப்பகுதியில் 300 ஆக உயர்வடைந்தது. தொடர்ந்து, 17.07.1945 அன்று திரு. சின்னப்பா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டார்.

அவரைத்தொடர்ந்து, கல்லூரியின் பழைய மாணவரும், 1932 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றியவரும், கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பாப்பிள்ளையின் புதல்வருமான தெ. து. ஜெயரத்தினம் 03.09.1945 அன்று கல்லூரி அதிபராகக் கடமையேற்றுக்கொண்டார். இவரது காலப் பகுதியே மகாஜனக் கல்லூரியின் பொற்காலமாகும். கல்லூரி சகல துறைகளிலும் அபார வளர்ச்சி பெற்று 2000 மாணவர்கள்வரை கல்விகற்கக்கூடிய வசதிகொண்ட கல்லூரியாக வளர்ச்சி கண்டதுடன் இலங்கைத்தீவின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக உயர்ந்தது.

நிர்வாகக் கட்டமைப்பு, கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் போன்றவற்றில் கல்லூரி சிறப்புற்றது. அத்துடன் புதிய வகுப்பறைக் கட்டடங்கள், விளையாட்டுமைதானம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், நூலகம், கைவினை, மனையியல் மற்றும் நடனம் ஆகிய பாடங்களுக்கான நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், தேனீர்ச்சாலை மற்றும் புத்தகசாலை என கல்லூரியின் வளர்ச்சி பார்ப்போர் வியக்கும் வண்ணமிருந்தது. அதுமட்டுமன்றி, மகாஜனன் என்ற வருடாந்த மலர் வெளியீட்டினையும் தொடக்கி வைத்தவர் அதிபர் தெ. து. ஜெயரத்தினம் அவர்களேயாவார். இதன்காரணமாக அதிபர். தெ. து. ஜெயரத்தினம் மகாஜன சிற்பி எனப் போற்றப்படுகின்றார்.

## இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு நிகழ்வு-2014



















# பாவனைக்குதவாத மலசலகூடத்தொகுதி
# புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை



(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலய கரையோர சந்திக்கருகாமையில் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் கட்டப்பட்ட மலசல கூடங்கள் தற்போது பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சுனாமிக்குப்பின்னரான வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நெக்டெப் நிறுவனம் மற்றும் சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறு வனம் ஆகிய இரு நிறுவனங்க ளின் பங்களிப்புடன் 5,500,00 ஆயிரம் ரூபா செலவில் பொலி கண்டி கிழக்கு கடற்றொழிலா ளர் கூட்டுறவுச் சங்கத்தினரால், ஆண்,பெண்களுக்மென தனியாக மலசலகூடத்தொகுதி அமைக்கப்பட்டது

இந்நிலையில் தற்போது இவை பாவனைக்குதவாத நிலையில் கைவிடப்பட்டுள்ளமையால் குறித்த ஆலயத்திற்கு வரும் அடியார்கள்,பஸ்நிலையத்துக்கு வரும் பயணிகள் பயன்படுத்த முடியாது சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இம்மலசலகூடத் தொகுதி பற்றைகள் சூழ்ந்து கவனிப்பாரற்ற நிலையில் காணபடுவதாகவும் அதிக நிதி செலவில் கட்டப்பட்ட இம்மலசலகூடத் தொகுதி பயன்படாமல் இருப்பது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுத்து அவற்றை சீர்திருத்துமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

# பூநகரி கோட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டி

(முழங்காவில்)

பூநகரி கோட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டி நிகழ்வு இன்று பிற்பகல் 1 மணியளவில் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மரத்தினம் தலைமையில் பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் 20 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களின் போட்டி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. எஸ். இதயராஜ் , சிறப்பு விருந்தினர்களாக பூநகரி உதவித்திட்டமிடல் பணிப்பாளர் வி. சொக்கநாதன், கிளிநொச்சி வலய நிர்வாக உதவிக்கல்விப் பணிப்பாளர் சி. தேவகுமார், கிளிநொச்சி அழகியல் பாட உதவிக்கல் விப் பணிப்பாளர் சி. சிவசிவா, பூநகரி பிரதேசசபைத் தவிசாளர் ஸ்ரீஸ்கந்தராசா, பூநகரி வைத்திய அதிகாரி ப.கோகுலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (112)

# இரும்பு விலை வீழ்ச்சி தொழிலாளர்கள் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் இரும்புத்தொழிலில் ஈடுபடும் மக்கள் திடீரென ஏற்பட்ட இரும்பின் விலை வீழ்ச்சியினால் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கடந்த மூன்று தினங்களாக இவ்வாறான நிலைமை தொடர்வதாகவும் இதனால் பெரும் நஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தவிர யாழ் .முஸ்லிம்களில் பலர் பிரதான தொழிலாக தற்போது இரும்புத்தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.இந்நிலையில் இரும்பின் திடீர் விலை குறைப்பு அவர்களின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

இரும்பு சேகரிக்கச் செல்லும இரும்புத் தொழிலாளர் கடந்த காலத்தில் 40 முதல் 42 ரூபாவிற்கு இரும்பு வியாபாரிகளுக்கு இரும்பு களை வழங்கிவந்தனர்.

ஆனால் இன்று சடுதியாக ஏற்பட்ட மாற்றத்தினால் 30 ரூபாவிற்கு இரும்பினை இரும்பு வியாபாரிகளுக்கு வழங்குகின்றனர்.

கடந்த காலத்தில் இரும்பின் விலை இம்மாவட்டத்தில் 49 முதல் 51 ரூபாய் வரை ஏற்றம் கண்டிருந்தது.இன்று இவ்வாறு விலைத்தளம்பலினால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இரும்புத்தொழிலை அதிகமானோர் மேற்கொண்ட நிலையில் இவ்வாறான திடீர் விலை குறைப்பினால் தொழிலினை அநேகர் கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (105)

வெள்ளி நற்சிந்தனை...



# சமரம் பாடிய வள்ளலார்

பலநூற்றாண்டுகளுக்கு முன்னால் கிரேக்க நாட்டில் ஒரு தத்துவஞானி இருந்தார். அவர், ஒருநாள் பகற்பொழுதில் முச்சந்தியில் கையில ஒரு விளக்குடன் நின்று கொண்டிருந்தார். பகல நேரத்தில் விளக்குடன் நிற்கும் அவருடைய விசித்திர நடத்தைக்குக் காரணம் கேட்டபோது, அவர் சொன்னார் "நல்ல நாணயமான, கண்ணியமுள்ள, ஒழுக்கம் நிறைந்த, நேர்மையான ஒரு மனிதன் எங்காவது கிடைப்பானா என்று தேடிக் கொண்டே இருக்கின்றேன். என்றார்.

இவ்வாறு சென்னை திருவெற்றியூரில் அமைந்துள்ள வடிவுடையம்மன் ஆலயத்திற்கு செல்லும் பாதையில் சித்தர் ஒருவர் இருந்தார். இவர் பாதையில் போபவர்கள், வருபவர்களைப் பார்த்து நாய், பேய்... எனத் திட்டிக் காரி உழிழ்ந்தவாறு இருந்தார். சென்னையில் வாழ்ந்து வந்த இராமலிங்கம் அடிகள் –வள்ளலார் அப்பாதையில் அம்பிகையைத் தரிசிக்கச் செல்வார். சித்தர், வள்ளாளரைப் பார்த்தும் மனிதன் போகின்றானே என்று கூச்சலிடுவார்.

வள்ளாளர் தனது ஐம்பதாண்டுக் கால வாழ்க்கையில் பெரும் பகுதியை சென்னையிலே கழிததார். இந்துமத மறுமலர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். சாதி சமய அரக்கரைக் கடுமையாகச் சாடினார். அன்பு மதம் தழைக்க அரும்பாடுபட்டார். ஈகையும் இரக்கமும் வாழ்க்கைக்கு எவ்வளவு தேவை என்பதை வலியுறுத்தினார்.

6000பக்கங்களைக் கொண்ட அவரது அருட்பாவில், ஆன்மாவின் அழியாத்தன்மையை எடுத்துச் சொன்னார். யோகப் பயிற்சியின் மூலம உடலை எப்படிக் காப்பாற்றிடலாம் என்று விளக்கினார்.

இறைவனின் படைப்பு அனைத்தையும் நேசிக்கச் சொன்னார். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினார். இதனை மனம் உருகப் பாடினார் . சைவ உணவின் சிறப்பை எடுத்து விளக்கினார்.

வடலூரில் மூன்று பெரும் அமைப்புக்களை உருவாக்கினார். சன்மார்க்க சங்கம், தர்மசாலை ஞானசாலை ஆகிய மூன்றுமே அவை யாகும்.

இராமலிங்க சுவாமிகளின் சாதனை இறையருளால் ஏற்பட்டதாகும். வள்ளலாரின் கருத்துக்கள் காலத்தின் தேவையாகும். அருட்பாவில் இடம்பெற்றுள்ள பாடல்களைக் கற்றுக் பயனடைவோமாக.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

தந்தையர் அனைவருக்கும் இருமுகம். ஒன்று கொலை இன்னொன்று ஆசி. நீ கொலைமுகத்தை மட்டும் கண்டிருக்கிறாய். பெரும்பாலான அன்னையர் அதையே மைந்தருக்கு அளிக்கிறார்கள். தானும் தந்தையாக ஆகி தந்தையை இழந்த பின்பு மட்டுமே மைந்தர்கள் தந்தையின் ஆசியை உணர்கிறார்கள். மைந்தரிலும் இருமுகங்கள் உண்டு. தந்தையைக் கொல்லவும் தந்தையாக வாழவும் வருபவன் மைந்தன். தன்னைக் கொன்று தன் காட்டை கைப்பற்ற வந்தது மகவு என்று அறியாத வேங்கை இல்லை. தந்தை மைந்தன் விளையாட்டுதான் இப்புவியில் நிகழும் உயிர்நடனங்களிலேயே அழகியது, மகத்தானது. அதைப் புரிந்துகொள்பவன் அனைத்தையும் புரிந்து கொள்கிறான்...

மைந்தன் சுட்டிக்காட்டி வினவிய முதல்வினா தந்தையை நோக்கி நீ யாரென்பதாகத்தானே இருக்கமுடியும்? அதற்கான பதில் 'மைந்தா நானே நீ என்பதன்றி வேறெப்படி இருக்க முடியும்? ஆனால் தந்தையர் அதை உணர்வதற்கு ஞானம் கனியும் ஒரு புள்ளி தேவையாகிறது. நான் நான் என்றெழுந்த மனமும் எனது எனது என விரிந்த கைகளும் குறுகிச்சுருங்கும் ஒரு பருவம்... குருதிகுளிர்ந்தபின் தன் வற்றிய கைகளால் மைந்தனைப் பற்றும்போது அந்த மாபெரும் திரை அறுந்து விழக் காண்கிறான் மனிதன். மகனே நானே நீ என்கிறான். அனேகமாக அவன் அதைச்சொல்லி முடிப்பதற்குள் எமன் அவன் உயிரை கைப்பற்றியிருப்பான்.

**– ஜெயமோகனின் மகாபாரதத்தில்**

இன்றைய சூழலில் காந்தியின் தனிமனிதன் சாத்தியமா என்றால் இல்லை என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் அது ஒரு இஷ்டலோகம். மனிதன் இருமையை விசாரித்தான் என்ற பிரமிளின் வரியை போல நமது வாழ்க்கைமுறை கிரேக்க காலத்திலிருந்து உருவாகி வந்த தத்துவ சிந்தனையின் விளைவு. தஸ்தாவெய்ஸ்கி தொடர்ந்து தன்னுடைய நாவல்களில் இன்று நாம் வந்து அடைந்திருக்கும் விஞ்ஞான வாழ்வின் தளத்தையை குறித்தே கவலைப்படுகிறார். அவர் தன் மக்கள் தங்கள் மரபை விட்டு விலகிச்செல்லாமல் இருக்கவேண்டும் என்று தொடர்ந்து சொல்கிறார். ஒரு போதும் ரஷ்யா ஐரோப்பிய நாடுகளை போல மாறக்கூடாது என்கிறார். அவர் விஞ்ஞான உலகில் மனிதன் அடையும் ஆன்மிக மரணத்தை பற்றியே பேசினார். இங்கே தஸ்தாவெய்ஸ்கியையும் காந்தியையும் இணைத்துப்பார்க்கலாம்.

காந்தி முன்வைத்த இஷ்டலோகத்தின் மனிதன் இன்னும் பலகாலங்களுக்கு சாத்தியமே இல்லை. ஆனால் இது இலக்கியங்களில் சாத்தியமான ஒன்று. கலைகளில் சாத்தியமான ஒன்று. மின்சாரம் அற்ற, தன் உடைகளை தானே நெய்யக்கூடிய தன் உணவை தானே உருவாக்கக் கூடிய குடும்பம் அற்ற தனிமனிதன் இலக்கியங்களில் உருவாகி வரலாம். அவன் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்து பேசலாம். குடும்பம் அற்றவன் கம்யூன் போன்ற சூழலில் வாழலாம். அத்தகைய மனிதனை அந்த ஊரின் மனிதர்கள் விநோதமாக பார்ப்பதாக அல்லாமல் அந்த ஊரே அப்படி இருப்பதாக படைக்கலாம். அந்த ஊர் தேசமற்றதாக இருக்கலாம். அந்த ஊர் அமைப்பற்றதாக இருக்கலாம். அதாவது அப்படியான இஷ்டலோகத்தின் சாத்தியங்கள் நமது இலக்கியங்களில் உருவாகி வரவேண்டும். காந்தி முன்வைத்த அமைப்பின் சிக்கல்கள் இன்றைய நடைமுறை தளத்தில் என்ன என்பதை அம்பேத்கரிய பார்வையில் முன்வைக்கலாம். மார்க்ஸிய பார்வையில் முன்வைக்கலாம். மார்க்ஸியமும் தலித் சிந்தனையும் காந்திய சிந்தனைகளும் இலக்கியத்தில் ஒன்றோடு ஒன்று உரையாடலாம். அதன் மூலம் உருவாகிவரும் சிந்தனை புதிய தளங்களை நோக்கி நம்மை இட்டுச்செல்லலாம். அது காந்தி முன்வைத்த சுவராஜின் சிக்கல்களையும் சாத்தியங்களையும் நமக்கு உணர்த்தலாம். காந்தி மாற்று பொருளாதாரத்தின் குறியீடாக வருங்காலங்களில் அதன் உண்மையான அர்த்தத்தில் மாறவேண்டும். அதை இலக்கியங்களும் கலைகளும் செய்ய வேண்டும். அதன் மூலம் நாம் அகமகிழ்ச்சி கொண்ட ஒரு தனிமனிதனை வருங்காலத்தில் சிருஷ்டிக்க முடியும். காந்தி மாற்று பொருளாதாரம் குறித்து முன்வைத்த சிந்தனைகளை முன்வைத்து ஏன் கலைகளும் இலக்கியங்களும் உரையாட வேண்டும் என்றால் இன்றைய சூழலில் அதுவே மாற்று தரப்பு. அதுவே நீங்கள் இந்த அமைப்பை எதிர்த்து கேள்வி கேட்பதற்கான கருவிகளை உங்களுக்கு வழங்குகிறது. அதுவே மாற்றமின்மை என்ற தளத்திலிருந்து மாற்றத்திற்கான அவசியங்கள் குறித்த உரையாடல்களுக்கு அழைத்துச்செல்கிறது. ஏன் அதை கலையும் இலக்கியங்களும் செய்ய வேண்டுமென்றால் அதுவே கலையின் பணி. The Purpose of art is to negate.

**– சர்வோத்தமன்**

# ஜெனிவா தீர்மானம் மூலம் அமெரிக்க உறவு பாதிக்காது

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு



ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், இலங்கை மற்றும் அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு உறவுகளைப் பாதிக்காது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பாதுகாப்பு பரிமாற்றங்கள் பல வருடங்களாக இருந்து வருவதாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்கா பல பயிற்சிகளை வழங்கி வருகிறது. இந்தப் பயிற்சித் திட்டங்கள் அரசியல் பிரச்சினைகளால் பாதிக்கப்படவில்லை.

இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் இணைந்து வழங்கும் 24ஆவது பாதுகாப்பு பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம் கொழும்பில் தற்போது நடைபெற்றது வருகிறது எனவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.


அதேவேளை ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொண்டதன் காரணமாகவே பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் மறுத்துள்ளார்.

இந்த அமைப்புகள் மேற்கொண்டு வந்த சில நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட சட்டப் பிரச்சினைகள் காரணமாகவே அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு நலன் கருதியே மேற்படி 16 அமைப்புகள் தடை செய்யப்பட்டன.

இதேவேளை வடக்கில் இன்னும் 82 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பிலேயே கண்ணிவெடி அகற்ற வேண்டி உள்ளது கண்ணிவெடி காணப்பட்ட 2004 சதுர கிலோ மீற்றரில் 82 சதுர கிலோ மீற்றரே எஞ்சியுள்ளது. அதுவும் காட்டுப்பகுதியே. கண்ணிவெடி அகற்றல் மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஒத்துழைப்பு கிடைக்கிறது. கம்போடியா மற்றும் வியட்நாம் நாடுகளை விட கண்ணிவெடி அகற்றும் பணிகளில் இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளது என்றார்.

# கணனிக்கற்கை நெறிபூர்த்தி மாணவர்களுக்கு சான்றிதழ்



(இணுவில்)

இணுவில் பொதுநூலகத்தினால் நெனசல அறிவகம் கணனிப்பயிற்சித் திட்டத்தினூடாக நடத்தப்பட்ட 3 மாதகால கணனிப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த 32 மாணவர்களுக்கு வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் சி.திருவாகரனினால் சான்றிதழ்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கற்கை நெறியானது, மார்ச் மாதம் நடுப்பகுதியில் முடிவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உணவு மானியம்

ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு 203 மில்லியன் ரூபா பெறுமதியான உணவு மானியத்தை வழங்கியுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்த மானியம் வழங்கப்பட்டிருப்பதாக ஜப்பானிய தூதரகத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு உதவும் வகையில் இந்த மானியம் ஜப்பானினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பொதி செய்யப்பட்ட மீன் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

# வைக்கல் பொம்மையுடன் ஒப்பீடு

## தேர்தல்கள் ஆணையாளர் வரவேற்பு



இறந்த பிணமெனக் கூறாமல் வைக்கல் பொம்மையுடன் தன்னை ஒப்பீடு செய்தமையை ஏற்றுக் கொள்வதாக தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.


ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத்பொன்சேகா அண்மையில் தேர்தல்கள் ஆணையாளரை வைக்கல் பொம்மை எனக் குறிப்பிட்டிருந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வைக்கல் பொம்மைக்கு சில அதிகாரங்கள் உள்ளன பறவைகளை அச்சமூட்டி விரட்டி அடிக்கக்கூடிய ஆற்றல் உள்ளது எனவே என்னைப் பிணத்துடன் ஒப்பிடாமல் வைக்கல் பொம்மையுடன் ஒப்பீடு செய்தமையை ஏற்றுக்கொள்கிறேன்.

அத்துடன் சுயாதீன ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படுவதையே நான் விரும்புகிறேன் அவ்வாறு ஆணைக்குழு அமைக்கப்பட்டால் தேர்தல்கடமைகளை இலகுவாக மேற்கொள்ள முடியுமென்பதுடன் எல்லோரிடமும் திட்டுவாங்க வேண்டிய அவசியமும் இருக்காதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுச்சேவை ஆணைக்குழு வடமாகாணத்தில் உதயம்



பொதுச்சேவை ஆணைக் குழுவின் நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதுடன் அதன் தலைவராக ஓய்வுபெற்ற கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக் குழுவின் நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வடமாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களிற்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கினார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவன், பிரதம செயலாளர திருமதி விஜயலட்சுமி ரமேஸ, வடமாகாண பேரவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (25)

# தகவல் தந்தால் ஒரு மில்லியன் சன்மானம்

## யாழில் சுவரொட்டிகள்


இலங்கையில் விடுதலை புலிகள் அமைப்பினை மீண்டும் உருவாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கோபி, தெனியன் மற்றும் அப்பன் ஆகிய மூவர் தொடர்பில் தகவல் தருமாறு கோரி யாழில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இவர்கள் தொடர்பில் தகவல் தருபவர்களுக்கு ரூபா ஒரு மில்லியன் சன்மானம் வழங்கப்படுமென அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் உரிமை கோரப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகள், யாழ் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் நகரப் பகுதிகள் மற்றும் குருநகர் பிரதேசத்திலும் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (25)

# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட முல்லை வலய கட்டடம் வெடித்தது

## அலுவலகத்தை வேறிடம் மாற்றக் கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகக் கட்டடத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால், அந்த அலுவலகத்தை வேறிடத்திற்கு மாற்றுமாறு வடமாகாண கல்வித் திணைக்களத்திடம் மேற்படி அலுவலகத்தில் கடமையாற்றும் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

இந்த அலுவலகம் குறைந்த மூலதனங்களைக் கொண்டு கடற்கரைக்குச் செங்குத்தாகக் கட்டப்பட்டதால், அலுவலகக் கட்டடத்தில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த அலுவலகம் பொருத்தமானபடி நிர்மாணிக்கப்படாமையால், ஒவ்வொரு நாளும் முற்பகல் 11 மணியிலிருந்து அலுவலகத்திற்குள் உஷ்ணம் ஏற்படுகிறது. இவ்வாறு உஷ்ணம் காணப்படும் வேளையில் அலுவலகத்தினுள் இருக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அதிகாரிகள் கூறினர்.

எனவே, இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சாரதிகள் கைது

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில்மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை கைது செய்வ தற்கு விசேட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையும் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நெல் உற்பத்தியில் வீழ்ச்சி அரசி இறக்குமதிக்கு திட்டம்

பெரும்போகத்திற்கான நெல் உற்பத்தி போதியளவு இடம்பெறாமையினால் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாமையினால் இந்த பெரும்போகத்திற்கான நெல் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பெரும்போகத்தில் 4 ஆயிரம் ஹெக்டேயர் வயலில் நெல் விதைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உரிய மழை கிடைக்காமையினால் கடந்த சிறுபோகத்தின் போது. நூற்றுக்கு 25 சதவீத நெல் விளைச்சலில் குறைவு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதன் காரணமாக விவசாயிகள் மேலதிக பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுமாறு - மாவட்ட செயலாளர்கள் ஊடாக ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2014

## விஞ்ஞானம்


**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) பின்வருவனவற்றில் எது குறுக்கலையைத் தோற்றுவிக்கும்
1) இசைக்கவர் அதிரும்போது
2) ஒலி அலை
3) சிலிங்கியின் சுயாதீன முனையை முன்பின்னாக அசைக்கும்போது
4) ஒளி அலை

2) மிகக் குறுகிய அலை நீளத்தைக் கொண்ட அலை
1) காமா அலை 2) றேடியோ அலை
3) நுண் அலை 4) கழிஊதாக்கதிர்

3) பின்வருவனவற்றில் எதன் மூலம் ஒலியைத் தோற்றுவிக்க முடியாது?
1) அதிரும் வாள் அலகு 2) கோயில் மணி
3) காது 4) இசைக்கவர்

4) பின்வருவனவற்றில் எது சுருதி கூடிய அலை



5) 520 $H_2$ மீடிறனைக் கொண்ட இசைக்கவர் மூலம் பிறப்பிக்கப்பட்ட ஒலி அலையின் நீளம் எனின் உருவாகிய ஒலியின் வேகம் யாது?
1) 330 m/s 2) 332.8m/s
3) 330.8m/s 4) 815ms-1

6) பின்வருவனவற்றில் எதனூடுஒலி ஊடுகடத்தப்பட மாட்டாது
1) வளி 2) நீர் 3) இரும்பு 4) வெற்றிடம்


7) ஒலியைக் குறைவாகத் தெறிக்கச் செய்யும் பொருள்
1) அழுத்தமான சுவர் 2) கண்ணாடி
3) மாபிள் சுவர் 4) கம்பளித்திரை

8) வானொலி அலையின் மீடிறனை அளக்கும் அலகு
1) வோல்ற் 2) அம்பியர் 3) கேற்ஸ் 4) செல்சியஸ்


9) ஒலியின் உரப்பை அளப்பதற்குப் பயன்படும் அலகு
1) கேற்ஸ் 2) வாற்று 3) டெசிபெல் 4) கூலோம்

10) புல்லாங்குழல், வீணை,மிருதங்கம் ஆகிய கருவிகள் முறையே
1) காற்றக்கருவி, கொட்டற்கருவி, இழைக்கருவி
2) காற்றுக்கருவி, இழைக்கருவி, கொட்டற்கருவி
3) இழைக்கருவி, கொட்டற்கருவி, காற்றுக்கருவி
4) இழைக்கருவி, காற்றுக்கருவி, கொட்டற்கருவி

11) கீழே தரப்பட்ட சந்தர்ப்பங்களில் சமவலுத்தடை குறைந்த கூற்று எது?





12) a, b, c ஆகிய ஊடகங்களினுடாக ஒளிக்கதிர் பயணம் செய்வதை படம் காட்டுகிறது a,b,c ஆகிய ஊடகங்களாக இருக்கக்கூடியவை முறையே
1) வளி, நீர், கண்ணாடி 2) வளி, கண்ணாடி,நீர்
3) வளி, கண்ணாடி, நீர் 4) கண்ணாடி, நீர், வளி




13) $59^0$f இல் உள்ள நீரில் வைக்கப்பட்ட செல்சியஸ் வெப்ப மானியின் வாசிப்பை சரியாகக் காட்டுவது
1) $15^0C$ 2) $20^0C$ 3) $59^0C$ 4) $70^0C$

14) வலது சோனை அறைச்சுவரில் மேற்பெருநாளம் திறக்கும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள அமைப்பு
1) இதயமுடுக்கி 2) முக்கூர்வால்வு
3) இருகூர்வால்வு 4) அரைமதிவால்வு




15) பாக்குவெட்டியின் புயம் AB= 3 cm, BC =12 cm ஆக இருப்பின் வேகவிகிதம் யாது?
1) எதனோல் 2) நீர்
3) அசற்றோல் 4) காபனாற்குளோரைட்டு

16) கலப்புன்னங்களில் சுவாசத்துடன் தொடர்புடையது
1) இழைமணி 2) பச்சையம்
3) இறைபோசோம் 4) புன்கரு

17.) 1700$H_2$ இசைக்கவர் அதிர்ந்து பிறப்பிக்கும் ஒலிஅலையின் வேகம் $340ms^{-1}$ எனின் அலைநீளம் உடன் சரியான தொடர்பு

1) $\lambda = \frac{1700}{340}$ m 2) $1700 = \frac{340}{\lambda}$ m 3) $340 = \frac{340}{\lambda}$ m 4) $1700 = \frac{\lambda}{340}$ m

18) அம்பிபியா,மமேலியா ஆகியவற்றின் இதய அறைகள் தொடர்பான சரியான எண்ணிக்கை
1) 3,4 2) 4,3 3) 3,3 4) 4,4


19) அயன்பிணைப்பு, பங்கீட்டுவலுப்பிணைப்புக்களை ஒருங்கே கொண்ட சேர்வை
1) NaCl 2) $AlCl_3$ 3) $NA_4Cl$ 4) $CH_4$

20) 230 V, 100W எனக் குறிப்பிட்டுள்ள மின்குமிழ் உயர் வலுவின் ஒளிரும் போது மின்குமிழினூடாக மின்னோட்டம் பாயும்
1) 230 x100A 2) அயடீன் 3) புரோமின் 4) பொசுபரசு

21) விசையின் சர்வதேச நியம அலகு
1) நியூட்டன் 2) யூல் 3) வோல்ற்று 4) பஸ்கால்

22) சுவாசப்பை சிற்றறையில் காணப்படும் வளிமண்டல ஒட்சிசன் எவ்வாறாக மயிர்த்துளைக் குழாய்களினுள் காணப்படும் குருதிக்கு அனுப்படுகின்றது
1) உயிர்ப்பான கொண்டு செல்லல் 2) பரவல் மூலம்
3) கனவளவு வேறுபாடு மூலம் 4) குருதியமுக்கம் மூலம்

23) நிக்குரோம் கம்பிச்சுருளினுடாக மின்னோட்டம் செல்லும் போது பெறப்பட்ட தகவல்களை வரைபில் தரப்பட்டுள்ளது அச்சுருளின் தடைப்பெறுமானம் யாது?
1) 32 ஓம் 2) 0.5 ஓம் 3) 2 ஓம் 4) 8 ஓம்





24) பின்வருவனவற்றில் அயன்பிணைப்பைக் கொண்டவை
1) NaCl 2) $CO_2$ 3) $Cl_2$ 4) $H_2O$

25) 100 கிராம் NaOH இல் அடங்கியுள்ள NaOH இன் மூல் அளவு யாது?
(Na=23, O = 16, H =1)
1) 10 2) 1.0 3) 0.25 4) 0.01

26) பின்வருவனவற்றுள் எது ஒரு அகவெப்பத்தாக்கமாகும்?
1. நீருடன் செறிந்த சல்பூரிக்கமிலம் சேர்த்தல்
2. சுட்ட சுண்ணாம்பிற்கு நீர் சேர்த்தல்
3. செப்பு சல்பேற்று கரைசலினுள் மக்னீசிய நாடாடவை இடுதல்
4. திண்ம அமோனியம் குளோரைட்டுக்கு நீர் சேர்த்தல்

27) பின்வருவனவற்றுள் எவ் மின்சுற்றில் உள்ள மின் குமிழ்கள் சமாந்தர இணைப்பில் இணைக்கப்பட்டுள்ளது





28) குருதியில் அடங்கியுள்ள கூறுகளில் கருதி உறைதலுக்கு சிறப்பாக உதவுவது எது?
1) செங்குருதிச் சிறுதுணிக்கைகள் 2) வெண்குருதிச் சிறுதுணிக்கைகள்
3) குருதித்திரவ விழையம் 4) குருதிச் சிறுதட்டுக்கள்

29) மனிதக் குருதிச் சுற்றோட்ட தொகுதியில் எந்த நாளத்தில் ஒட்சிசனேற்றப்பட்ட அடங்கியிருக்கும்
1) ஈரல் வாயினாளம் 2) நுரையீரல் நாளம்
3) பிற்பெரு நாளம் 4) சிறுநீரக நாளம்

30) இரசாயன சக்தியை மின்சக்தியாக மாற்றும் உபகரணம்
1) உலர் மின்கலம் 2) மின்குமிழ்
3) தைனமோ 4) தொலைப்பன்னி

31) பின்வருவனவற்றில் அவதிக்கோணம் C ஐ சரியாகக் காட்டுவது




32) அரியத்தினுாடாக வெள்ளொளிக்கற்றையை செலுத்தும் போது மிகக்கூடுத லான விலகலை காட்டும் நிறம் எது?
1) சிவப்பு 2) நீலம் 3) ஊதா 4) பச்சை


33) யாதாயினும் மூலகத்தின் சமதானிகளிற்கிடையே வேறுபடக்கூடிய இயல்பு பின்வருவனவற்றுள் எது?
1) அணுவெண் 2) திணிவெண்
3) புரோத்தன் எண்ணிக்கை 4) இலத்திரன் எண்ணிக்கை

34) கயிறிழுவைப் போட்டியொன்றில் பங்குபற்றும் இரு குழுக்கள் ஒவ்வொன்றும் கயிற்றின் மீது 4000 N விசையின் உனற்றுகின்றன அவ்வேளை கயிற்றில் தொழிற்படும் விளையுள் விசையின் பருமன் யாது?
1) 8000N 2) 0N 3) 4000N 4) 2000N

35) பின்வருவனவற்றில் எவை ஒரே வகையை சேர்ந்த இசைக்கருவிகள் ஆகும்
1) வயலின் கிட்டார், புல்லாங்குழல், 2) கிற்றார், புல்லாங்குழல்,மேளம்
3) எக்காளம், புல்லாங்குழல், சங்கு 4) மணி, மேளம், வயலின்

36) பின்வருவனவற்றுள் மாறா வெப்பநிலைக்குருதி கொண்டவிலங்கு
1) பாம்பு 2) ஆமை 3) கிளி 4) சலமண்டர்

37) தரப்பட்ட அங்கிகளில் ஒளித்தொகுப்பை மேற்கொள்பவை எவை?
A பரமேசியம் B கிளமிடமோனஸ் C ஸ்பைரோகைரா D மதுவம்
1) Aயும் Bயும் 2) Bயும் Cயும் 3) Cயும் Dயும் 4) Aயும் Cயும்




38) 3/2 முறிவுச்சுட்டி கொண்ட கண்ணாடிக் குற்றியின் அடிப்பகுதியில் உள்ள  புள்ளியானது மேலிலிருந்து பார்க்கும்கோது இப்புள்ளி 4cm ஆல் உயர்ந்து தென்படுகிறது கண்ணாடிக் குற்றியின் தடிப்பு யாது?
1) 8 cm 2) 9 cm 3) 12 cm 4) 15 cm

39) 2 kg திணிவுடைய பறவை ஒன்று 400 J இயக்கப் பண்பு சக்தியை பிரயோகித்து உயரத்தில் மாறா வேகத்தில் பறந்து செல்கிறது எனின் பறவை பறக்கும் வேகம் என்ன?


1) 10 $ms^{-1}$ 2) 20$ms^{-1}$ 3) 30$ms^{-1}$ 4) 40$ms^{-1}$

40) பின்வருவனவற்றில் கருவைக் கொண்டிராத தாவரக்கலமும் விலங்குக்கலமும் முறையே

1) தோழமைக்கடகலம்,வெண்குழியக்கலம் -
2) நெய்யரிக்குழாய் கலம், செங்குழியம்
3) புடைக்கலவிழையம், குருதிச் சிறுதட்டு
4) தோழமைக்கலம், குருதிச்சிறுதட்டு


## பகுதி - 02

**1) ஒளிக்கதிர் செல்லும் பாதைகள் உருவில் தரப்பட்டுள்ளது**




i) நீரிலிருந்து வளிக்குச் செல்லும் AB என்ற கதிர் செல்லும் பாதை மாறியுள்ளது இத்தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படும்
ii) EB என்ற கதிர் செல்லும் பாதை மாறி F என்ற கதிராக வெளியேறுகின்றது இந்நிலையில் படுகோணத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?
iii) ஒளிக்கதிர் E இன் படுகோணத்தை சற்று அதிகரிக்கும் போது ஒளிக்கதிருக்கு நடைபெறும் மாற்றம் எவ்வாறு அழைக்கப்படும் அதனை எளிய வரிப்படம் மூலம் காட்டுக.
iv) ஒளிமுறிவு தொடர்பான சினெல்லின் விதி (snell's Law) யை தருக?
v) AB என்ற ஒளிக்கதிரின் படுகோணம் 30 C எனின் BC என்று கதிரின் முறிகோணத்தை காண்க (நீரின் முறிவுச் சுட்டி 1.33)

2. 10 cm x 8 cm x 4 cm பக்கநீளங்களை கொண்டதும் 2kg உடைய மரக்குற்றி ஒன்று கிடையான மேசையில் வைக்கப்பட்ட விற்றராசு மூலம் இழுக்கப் படுவதை படம் காட்டுகின்றது.



i) 2 kg திணிவு விசையானது எத்தனை நியூட்டனுக்கு சமமானது
ii) மரக்குற்றி மேசைமீது இழுக்கும்போது செவ்வன் மறுதாக்கம் யாது?
iii) மரக்குற்றியின் மட்டுமட்டான இயக்க நிலையில் விற்றராசு 12 N வாசிப்பை காட்டியது எனின் எல்லை உராய்வு விசையின் பருமன் யாது?
iv) மரக்குற்றியில் தொழிற்படும் செவ்வன் மறுதாக்கம் எல்லை உராய்வு விசை ஆகியவற்றை வரிப்படத்தில் குறித்துக்காட்டுக.
v) உராய்வு குணகத்தின் பருமன் யாது?
vi) உராய்வானது எமக்கு அனுகூலமாக அமையும் சந்தர்ப்பங்கள் 2 தருக?


b) i) மரக்குற்றியின் அகன்ற முகம் (10cm x 8 cm) மேசையில் தொடுமாறு வைக்கும்போது மேசையில் பிரயோகிக்கப்படும் அமுக்கம் யாது?
ii) மரக்குற்றியின் ஒடுங்கிய முகம் 8 cm x 4 cm மேசையில் தொடுமாறு வைக்கப்படும்போது மேசையில் பிரயோகிக்கப்படும் அமுக்கானது எவ்வாறு மாற்றமடையும்?
iii) மேற்படி சந்தர்ப்பத்தில் இடம்பெறும் அமுக்க மாற்றத்தை ஒத்த மாற்றம் எமது அன்றாட வாழ்வில் பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

3. சில மூலகங்களின் அணுவெண்ணானது அட்டவணையில் தரப்பட்டுள்ளது தரப்பட்ட குறியீடுகள் அல்ல

| மூலகம் | A | D | E | | L | M | R |
|---|---|---|---|---|---|---|---|
| அணுவெண் | 6 | 10 | 11 | 12 | 13 | 17 | 19 |


i) மூலகம் E இயிலுள்ள இலத்திரன்களின் எண்ணிக்கை யாது?
ii) மூலகம் E இன் இலத்திரன் நிலையமைப்பை தருக?
iii) மூலகம் E ஆனது ஆவர்த்தன அட்டவணையில் எத்தனையாம் கூட்டத்தை சேர்ந்தது.
iv) தரப்பட்ட மூலகங்களில் அருவாயுவாக காணப்படுவது யாது?
v) ஒரே கூட்டத்தை சேர்ந்த மூலகங்கள் எவை?
vi) கூடியளவில் பங்கீட்டு பிணைப்பை கொண்ட சேர்வைகளை உருவாக்கும் மூலகம் எது?
vii)
a) மூலகம் G உம் M உம் சேர்ந்து உருவாகும் சேர்வைகளின் மூலக்கூற்று சூத்திரத்தை தருக?
b) மேற்படி சேர்வையானது எவ்வகையான பிணைப்பை கொண்டது.
viii) மூலகம் E யானது வளியில் எரிக்கப்படும் போது இடம்பெறும் தாக்கத்திற்குரிய இரசாயன சமன்பாட்டை தருக?
b) E ஆனது எரிக்கப்படும் போது தோன்றும் ஒட்சைட்டின் பெறுமானம் பற்றி யாது கூறுவீர்?

4. மாணவன் ஒருவனது செய்முறை பதிவேட்டிலிருந்து பெறப்பட்ட பகுதியொன்று படத்தில் தரப்பட்டுள்ளது.




i) இப்பரிசோதனையின் நோக்கம் யாது?
ii) இங்கு கட்டுப்பாடு அமைப்புக்குரிய ஆங்கில எழுத்து எது?
iii) இப்பரிசோதனையின் நீர் பெறும் அவதானம் யாது?
iv) இப்பரிசோதனையிலிருந்து பெறக்கூடிய முடிவு யாது?
v) a) மேற்படி பரிசோதனையின் போது பொலுத்தீன் பையில் படியும் சேர்வையின் இரசாயன குறியீட்டைத் தருக?
b) மேற்படி சேர்வையை இனங்கான பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள் ஒன்று தருக?
vi) AB ஆகிய அமைப்புக்கள் ஒரே தாவரத்தில் அமைக்கப்படுவதால் கிடைக்கும் பயன் யாது?
vii) இப்பரிசோதனையின் முடிவில் குறிப்பிடப்படும் செயற்பாட்டை கட்டுப்படுத்த பின்வரும் தாவரங்கள் கொண்டுள்ள சிறப்பியல்பு கள் தருக?
(1) சூரியகாந்தி -
(2) அலரி -
(3) நாகதாளி -
(4) சவுக்கு -
(5) அரசமரம் -

5) வீட்டு மின்சுற்றின் ஒரு பகுதி தரப்பட்டுள்ளது.
i) தரப்பட்ட அமைப்பின் உள்ள ABCD ஆகிய பகுதிகளை பெயரிடுக
ii) B,C ஆகியவற்றின் பயன் கள் ஒன்று வீதம் தருக?
iii) அமைப்பு இல் மேலதிக மின்னோட்டம் செல்வதை தடுக்க பயன்படும் அமைப்பு யாது?




## தரம் 5 மாணவர்களுக்கான பொது அறிவுத் துணுக்குகள்


### விளையாட்டுக்கள்

- எமக்கு உடல், உள ஆரோக்கியத்தை விளையாட்டுக்கள் தருகின்றன.
- நாம் கல்வி கற்கும் பாடசாலைகளில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கமானது.
- பிரதேச செயலக பிரிவுகளிலும், மாவட்ட மட்டங்களிலும் விளையாட்டுப் போட்டிகள் வருடந்தோறும் நடைபெறுவது வழக்கம்.
- அரசாங்கத்தினால் வருடந்தோறும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் படுகின்றன.
- விளையாட்டுக்கள் அவற்றின் உருவாக்கம், ஆடப்படும் முறை, தேவை ஆகியவற்றைப் பொறுத்து வேறுபடுகின்றன.

### கிராமிய விளையாட்டுக்கள்


தாயம் போடுதல்


போர்த்தேங்காய்



முட்டி உடைத்தல்


றபான் அடித்தல்


பல்லாங்குழி


கபடி


சடுகுடு


நுளம்புவலை

# மன்னாரில் கைத்தொழிலில் ஈடுபடும் பயனாளிகளுக்கு உபகரணங்கள்



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வாழவின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய கைத்தொழில் துறைசார்ந்தோருக்கு தொழிற்துறை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றுள்ளன.

மன்னார் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் மேற்படி நிகழவு இடம்பெற்றது.

இதன்போது வாழ்வின் எழுச்சித் திட்டத்திற்கு அமைவாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பல்வேறு பட்ட கைத்தொழிற்துறைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்பிரகாரம் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் முனனெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழல் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களினதும் ஏனைய துறைசார்ந்த நிறுவனங்களினதும் தொழிற்துறைசார்ந்த பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு தொழிற்துறை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் திட்ட விளக்கவுரையினை அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி நிகழ்த்தியதையடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றினார்.

மன்னார் மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சித் திட்டத்தினூடாக தொழிற்துறைசார்ந்த பயிற்சிகளை நிறைவு செய்த பனை அபிவிருத்திச் சபையின் ஊடாக 73 பேரும், கைத்தொழில் அபிவிருத்தச்சபையின் ஊடாக 62 பேரும், தேசிய பொறியியல் ஆய்வு நிறுவனம் ஊடாக 10 பேருக்கும் தொழிற்துறை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது வாழ்வின் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் கமகே, ஈ.பி.டி.பியின் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களான லிங்கேஸ், சந்துரு, பனை அபிவிருததி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், வடமாகாண சபை உறுபபினர் றிஸ்வான் பதியுதின், மன்னார் நகரசபை உறுப்பினர் டில்சான், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் இயக்குநர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சிறிபாஸ்கரன், அமைச்சின் கீழான நிறுவனங்களினது உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.



மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் அருணோதய மன்றத்தினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் நடாத்தப்பட்ட இரத்ததான முகாமில் இளைஞர்கள் இரத்தம் வழங்குவதைக் காணலாம். (48)

# திரிவுபடுத்தப்பட்ட செய்திக்கு உபதவிசாளர் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச சபை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு கதவுடைத்து அடா வடி என்ற் தலைப்பில் யாழ். குடாநாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த செய்திக்கு வலி.கிழக்கு பிரதேசசபை உப தவிசாளர் கந்தையா தர்மலிங்கம் மறுப்புத் தெரவித்ததுடன் தனது கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வலி.கிழக்கு பிரதேச சபையின முன்னாள் தவிசாளர் அன்னலிங்கம் உதயகுமார் பதவியிழந்து 3 மாதம் கடந்த நிலையிலும் எமது சபை இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படாத நிலையில் கடந்த 28.03.2014 (வெள்ளிக்கிழமை) சபை கூடுவதற்கு என்னால் நிகழ்ச்சி நிரலுடன் உறுப்பினர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதன் பிரகாரம் அன்றைய தினம் சபைக்குச் சென்றபோது கூட்டம் நடாத்த முடியாது என மறுப்புத் தெரிவித்து மண்டபக் கதவு திறக்கப்படவில்லை.

அது தொடர்பாக நாங்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்த போது பொதுமக்களும் கூட்டம் தொடர்பான பத்திரிகைச் செய்திகளைப் பார்த்து சபை முன்றலில் கூடிவிட்டனர்.

மக்களின் குறைபாடுகளைச் செயலாளருடன் கேட்டறிந்து கொண்டிருந்தபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்பாராத விதமாக அவ்வழியே வந்து மக்களைக் கண்டதால் உள்ளே வந்து மக்கள் பிரச்சினையைக் கேட்டறிந்து உப தவிசாளர் எங்கே என்று என்னை அழைத்து விசாரித்தபோது எமது பிரச்சினையைத் தெரிவித்தோம்.

அதற்கு அவர் நீங்கள் கூட்டம் நடாத்துவதை தடுக்க முடியாது கூட்டத்தை நடாத்தி மக்கள் பிரச்சினையை கவனத்தில் எடுத்து தீர்க்குமாறு தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து சபை மண்டபத்திற்கு நாங்கள் சென்றபோது கதவு திறந்தே இருந்தது. நாங்கள் உள்ளே சென்று கூட்டத்தை நடாத்திப் பல விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து விட்டு வெளியே வந்தபோது அமைச்சர் பொது மக்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தார்.

நாங்கள் அவரிடம் எமது சபையின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி சபை இயங்கவும் அபிவிருத்திக்கு நிதி பெற்றுத் தருமாறும் கோரினோம்.

அதன் பிரகாரம் அவர் எம்முடன் கலந்துரையாட மண்டபத்திற்கு வருகைதந்து எங்களுடன் கலந்துரையாடி எமது சபைக்குத் தேவையான நிதி உதவியினை அரசாங்கத்திடமிருந்து பெற்றுத் தருவதாகவும் சபையின் கழிவகற்றல் பொறிமுறைக்கு உழவு இயந்திரம் ஒன்றும் பெற்றுத் தருவதாக உறுதியளித்திருந்தார்.

அத்துடன் அவர் சபையை விட்டுச் சென்றதும் நாமும் வெளியேறினோம் என்று மேலும் தெரிவித்தார்.

## இயந்திரம் அன்பளிப்பு

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான அச்சுப் பதிவு இயந்திரமொன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கலலூரியின் அதிபர் திருமதி பால ராணி ஸ்ரீதரனிடம் ஒன்றியத்தின் தலைவர் இவ் அச்சுப்பதிவு இயநதித்தை கையளித்தார். (01)

# கரட்டின் விலை வீழ்ச்சி

யாழ்.குடாநாட்டில் மரக்கறிகளின் விலைகள் திடீரெனக் குறைந்துள்ள நிலையில் கரட்டின் விலையிலும் திடீர்ச்சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக ஒரு கிலோ கரட்டின் விலை சுமார் 70 ரூபா முதல் 80 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது குடாநாட்டின் பிரதான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ கரட் 50 ரூபா முதல் 60 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

யாழின் பல்வேறு இடங்களிலுமிருந்து அதிகளவிலான கரட் சந்தைக்கு எடுத்து வரப்படுகின்றமையே இத் திடீர் சரிவுக்குக் காரணமென வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (48)

# வேலணை ஐயனார் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வு


வேலணை துறையூர் இலந்தவனம் அருள்மிகு பூரணை புட் கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய நவகுண்ட மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. 7 ஆம் திகதி காலை 9.00 மணிமுதல் 8 ஆம் திகதி மாலை 3.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதிஷ்டா கிரியைகளை முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

கும்பாபிஷேகம் சிறப்புற நல்லாசிகளை கிரியாகலாமணி சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருககள், அருளுரையை நல்லையாதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், ஆசியுரையை சித்தாந்த நல்லறிஞர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (21)

# எம்.ஜி.ஆர்.உருவச்சிலை கல்வியங்காட்டில் திறந்துவைப்பு



தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் நடிகருமான புரட்சித் தலைவர் அமரர் எம்.ஜி.ஆரின் உருவச்சிலையொன்று நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் யாழ். கல்வியங்காட்டுப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜா சிலைக்குரிய பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். எம்.ஜி.ஆரின் சிலைக்கு யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் இ.சுந்தரலிங்கம், ஜனாதிபதியின வன்னி மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம் மற்றும் பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

யாழ். கோப்பாயினைச் சேர்நத ஒருவரினால் 300,000 ரூபா செலவில் 6 அடியில் இச்சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையினை இந்திய சிற்பக்கலைஞர் புருசோத்தமன் நிர்மாணித்திருந்தார்.

முதல்வர் திருமதி யோகேஸ்வரி எம்.ஜி.ஆர் பற்றியும் அவரது பணிகள் தொடர்பாகவும் உரையாற்றினார். ஜனாதிபதியின் இணைப்பாளர் கனகரத்தினம் புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். பற்றியும் யாழ். எம்.ஜி.ஆர். இ.சுந்தரலிங்கத்தின் எம்.ஜி.ஆர் காலத்து நிகழ்வுகளையும் நினைவு கூர்ந்து உரை நிகழ்த்தினார்.

யாழ். எம்.ஜி.ஆர் பாடல்களையும் இனிமையாகப் பாடினார். வறுமைக்கோட்டிற் குட்பட்டவர்களுக்கு புரட்சி நடிகர் எம்.ஜி. ஆரின் சிலை திறப்பை முன்னிட்டு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பொதுமக்கள் மற்றும் எம்.ஜி.ஆர். இரசிகர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.(48,137)

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# உலக அளவில் அணு ஆயுதங்களை பயன்படுத்தமாட்டோம் எனும் ஒப்பந்தம்

## பிரதமர் மன்மோகன்சிங் யோசனை

அணு ஆயுதங்களை முதலில் பயன்படுத்த மாட்டோம் என உலக அளவில் ஒப்பந்தம் செய்ய வேண்டும் என பிரதமர் மன்மோகன் சிங் ஆலோசனை கூறியுள்ளார்.

அணு ஆயுதமில்லா உலகு, கோட்பாட்டிலிருந்து நிஜத்தை நோக்கி என்ற தலைப்பில் நேற்று முன்தினம் சர்வதேச கருத்தரங்கில் பிரதமர் மன்மோகன்சிங் ஆற்றிய உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் தாம் வைத் திருக்கும் அணு ஆயுதங்கள் பிறரை அச்சுறுத்தவே என்பதை அங்கீகரித்து அது பற்றிய விவரங்களை பிரகடனப்படுத்தினால் முதலில் பயன்படுத்தமாட்டோம் என உலக அளவில் ஒப்பந்தம் செய்துகொள்ள நாம் வழி காணலாம்.

அணு ஆயுதங்களை வைத்திருப்பதன் நோக்கமே பிறநாடுகள் தாக்குதல் நடத்தாமல் இருக்கவுமே அவற்றை மிரட்டவுமே என்ற குரல் எங்குமே. கேட்கிறது.

அதுமட்டுமன்றி அணு ஆயுதமில்லா உலகு அமைவதை இந்தியா ஆதரிக்கிறது. ஆயினும் கடினமான பாதுகாப்பு நிலவரம் காரணமா கவே அணு ஆயுத வல்லமை படைத்த நாடு எனத் தன்னை பிரகடனப் படுத்திக் கொள்ள வேணடிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏற்பட்டது.

1974இல் தமது அணு ஆயுத திறனை உலகுக்கு உணர்த்திய இந்தியா அதன் பின்னர் சுமார் 25 ஆண்டுகள் கட்டுப்பாடுடன் நடந்து கொண்டது. இந்நிலையில் கடினமான பாதுகாப்பு சூழல் காரணமாக 1998இல் அணு ஆயுத சோதனை நடத்தியது.

அணு ஆயுதங்கள் பேரழிவு சக்தி கொண்டவை. பொது நலனுக்கும் உதவக்கூடியது அணு சக்தி தொழில் நுட்பத்தை அமைதி நோக்கங்களுக்கு பயன்படுத்தி மனித சமுதாயத்துக்கு பலன் தருவதாக உறுதிசெய்யும் அதேவேளையில் பேரழிவுக்கு அதை பயன் படுத்தாதிருக்க வழி காண வேண்டும்.



பொறுப்புமிக்க அணு ஆயுத நாடாக, அணு ஆயுதங்களை அதிகரிப்பதில் ஈடுபாடு காட்டுவதில்லை என்ற முடிவில் தெளிவாக இருக்கிறது இந்தியா. அணு ஆயுதமில்லா உலகம் என்பது இந்தியாவின் பாதுகாப்பை மட்டும் அல்ல உலகத்தின் பாதுகாப்பையே அதிகரிக்கும் என்றார்.



கோச்சடையான் திரைப்படம் வெற்றி பெறவேண்டி ரஜினியின் ரசிகர்கள் நேற்றுமுன்தினம் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு பாதயாத்திரை சென்றதனைக்காணலாம்.

## அதிபரைப் போல ஆண்கள் அனைவரும் சிகை அலங்காரம் செய்யவேண்டும்

### வடகொரியாவில் புதிய உத்தரவு



வடகொரியாவில் உள்ள ஆண்கள் அனைவரும், அந்நாட்டின் அதிபரைப் போல் தலைமுடி அலங்காரம் செய்து கொள்ள வேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. பொதுவாக வட கொரிய ஆண்கள் 28 விதம் தலைமுடி அலங்காரம் வைத்துக் கொள்ளவே அந்நாடு அனுமதி அளித்திருந்தது. அந்த வகையில் தற்போது அந்நாட்டு அதிபர் கிங்ஜாங்கின் தலைமுடியை பின்பற்றுமாறு அங்குள்ள ஆண்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வடகொரியாவில் தான் இந்த வித்தியாசமான உத்தரவு போடப்பட்டுள்ளது என மக்கள் தெரிவித்தனர்.

எங்கள் தலைவரின் தலைமுடி அலங்காரம் தனித்தன்மை வாய்ந்தது. என்று ஒரு பகுதியினர் கூறினாலும், ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான முகமும் - தலையும் இருப்பத[illegible] எல்லாருக்கும் எப்போதும் இந்த அலங்காரம் ஒத்து வராது என்று மற்றொரு பகுதியினர் கூறுகின்றனர். எனினும் அரசு உத்தரவை மீற முடியுமா எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## நடிகை நக்மாவுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்



மீரட் தொகுதியில் போட்டியிடும் நடிகை நக்மாவிற்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திற்கு உத்தரப் பிரதேச காங்கிரஸ் கட்சி கோரிக்கை மனு அனுப்பியுள்ளது. மீரட் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மத்திய தேர்தல் ஆணையத்திற்கு காங்கிரஸ் சார்பில் அனுப்பப்பட்டுள்ள மனுவில் கூறியதாவது.

மீரட் தொகுதியில் போட்டியிடும் திரைப்பட நடிகை நக்மாவின் தேர்தல் பிரசாரத்திற்கு நூற்றுக் கணக்கானோர் வருகின்றனர். கூட்டம் அதிகமாக இருப்பதால், அவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

தற்போது மீரட் மாவட்ட நிர்வாகம் சார்பில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதாக இல்லை. எனவே, நக்மாவின் பிரசாரத்திற்குச் செல்லும்போது கூடுதலாக காவலர்களை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி, மீரட்டில் பிரசாரத்திற்குச் சென்ற நக்மாவை இளைஞர் ஒருவர் சீண்டினார். இதனால், கோபத்திற்கு உள்ளான நக்மா, அந்த இளைஞரின் கன்னத்தில் அறைந்தார். இதைத் தொடர்ந்து, அவரின் பாதுகாப்பை அதிகரிக்க காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது

## கிரைமியாவின் சிறுபான்மையினருடன் ஐ.நா. கூட்டத்தை புறக்கணித்தது ரஷ்யா



ரஷ்யாவுடன் இணைந்த கிரைமியாவின் தாத்தார் சிறுபான்மையினருடன் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவை குறித்துப் பேச் லிதுவேனியா ஐ.நா. பாதுகாப்புச் சபையின் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தது. ஆனால் அதிகாரபூர்வமற்ற முறையில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தை ரஷ்யா புறக் கணித்துள்ளது.

உக்ரேனை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைப்பதற்கான முடிவை கடைசி நிமிடத்தில் அந்நாட்டு ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் மறுக்கவே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அங்கு பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவி விலக அங்கு இடைக்கால அரசு அமைந்தது. ஆனால், அந்நாட்டின் ஒரு பகுதியான கிரைமியா ரஷ்யாவுடன் இணைவதாக முடிவெடுத்து பொதுமக்களிடையே அவசர வாக்கெடுப்பும் நடத்தியதைத் தொடர்ந்து உலக நாடுகளின் ஆட்சேபனைகளுக்கு இடையே ரஷ்யா கிரைமியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது. ரஷ்யாவுடன் இணைந்த கிரைமியாவின் தாத்தார் சிறுபான்மையினருடன் மனித உரிமைகள் மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவை குறித்துப் பேசவே லிதுவேனியா ஐ.நா. பாதுகாப்புச்சபையின் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தது.

இந்தக் கூட்டம் பொருத்தமற்றது, உக்ரேனில் நிலவும் மோசமான நிலைமையிலிருந்து சர்வதேச நாடுகளின் கவனத்தைத் திசை திருப்பும் முயற்சி என்று ரஷ்யா கூறியது. இந்தக் கூட்டம் ஒருதலைப்பட்சமான பிரசார நிகழ்ச்சி என்றும் விமர்சனம் செய்துள்ளது. ஐ.நா.வின் பாது காப்புச்சபை உறுப்பினர்கள் [illegible]ரும் கிரைமியாவில் நடைபெற்ற வாக்கெடுப்பு சட்டவிரோதமானது என்றும் ரஷ்யா கிரிமியாவை இணைத்துக்கொண்டது செல்லாது என்றும் கருதுவதாக லிதுவேனியாவின் ஐ.நா துணைத் தூதர் ரீட்டா கஸ்ரஜயன் தெரிவித்தார். மேலும் இந்தக் கூட்டத்தின் மூலம் உறுப்பினர்கள் சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் ஊடகங்களின் நடுநிலையான போக்குக் குறித்த தாத்தார் சமூகத்தினரின் கவலைகளைக் கேட்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு மயிரிழையில் தப்பினார் முஷாரப்



பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப்பின் பண்ணை வீட்டுக்கு அருகே நேற்று அதிகாலை சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

முஷாரப்பை குறிவைத்து நடாத்தப்பட்ட இந்தப் படுகொலை முயற்சியில் இருந்து அவர் அதிர்ஷ்டவசமாகத்தப்பியுள்ளார்.

ராவல்பிண்டியில் உள்ள பாகிஸ்தான் இராணுவத்திற்குச் சொந்தமான இருதய நோய் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வந்த பர்வேஸ் முஷாரப நேற்று அதிகாலை 3 மணி அளவில் அங்கிருந்து பண்ணை வீட்டிற்கு மாற்றப்பட்டார்.

பாதுகாப்பு நிறைந்த பைசாபாத் - ரவால் டாம் சவுக் வீதியில் பர்வேஸ் முஷாரப் பாதுகாப்பு வாகனம் கடந்து சென்ற போது சக்தி வாய்ந்த குண்டு வெடித்தது. இதில் பாதுகாப்பு வாகனத்தில் இருந்த ஒருவர் படுகாயமடைந்தார். சம்பவ இடத்தில் ஒரு அடி அளவில் பெரும் பள்ளம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் முன்னாள் அதிபர் முஷாரப்பை குறிவைத்தே நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலும் வெடிகுண்டு வீதி ஓரத்தில் இருந்த சாக்கடை அடியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பொலிஸார் மேலும் வெடிகுண்டுகள் ஏதேனும் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறதா என சோதனையில் ஈடுபட்டு வந்தனர்.

பர்வேஸ் முஷாரப்புக்கு தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு பல அடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. பலத்த பாதுகாப்பையும் மீறி இந்தத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஆழிப்பேரலை எச்சரிக்கை

சிலியின் வடபிராந்தியத்தில் மீண்டும் ஆழிப் பேரலை அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

7.6 ரிக்டர் அளவில் மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டுள்ள நிலையில் சிலி அதிகாரிகள் இந்த அறிவிப்பை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சிலியில் உணரப்பட்ட 8.2 ரிக்டர் அளவான நிலநடுக்கத்தை அடுத்து ஏற்பட்ட ஆழிப் பேரலை காரணமாக 6 பேர் பலியாகியிருந்தனர்.


அத்துடன் 2600 வீடுகள் அழிவடைந்துள்ளதுடன், பாரிய அளவில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறிருந்தமை குறிப்பிடதக்கது

இந்த நிலையில் மீண்டும் நில அதிர்வு உணரப்பட்டுள்ள நிலையில். சிலி மற்றும் பெரு ஆகிய நாடுகளில் ஆழிப்பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கரையோரப்பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மற்றுமொரு அநீதி அம்பலம்
# அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கண்ணீர்

## கரைச்சி பிரதேசசபை மீது குற்றச்சாட்டு



முப்பது வருடங்களாக சந்தையில் வியாபாரம் செய்த எனக்கு பிரதேச சபை அநீதி இழைத்துவிட்டது என நேற்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் கண்ணீர் விட்டு நியாயம் கேட்டார் பெண் ஒருவர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சி கரைச்சி பிரதேசத்தின் மீளாய்வுக் கூட்டம் நேற்று கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றுக்கொணடிருந்த வேளை சபைக்கு முன் வந்த பெண் ஒருவர் தான் கிளிநொச்சி பொதுச் சந்தையில் கடந்த முப்பது வருடங்களாக வியாபாரம் செய்து வந்ததாகவும் சந்தையில் உள்ள அனைத்து வியாபாரிகளும் இதனை உறுதிப்படுத்தி கையொப்பம் இட்டு கடிதம் வழங்கிய போதும் டிப்போச் சந்தியில் அமைந்துள்ள சந்தையில் தனக்கு கடை வழங்காமல் கரைச்சி பிரதேச் சபையினர் அநீதி இழைத்து விட்டதாக சபைக்கு முன் அமர்திருந்த கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரைச் சுட்டிக்காட்டி கண்ணீருடன் தெரிவித்தார்.

மேலும் குறித்த பெண் தெரிவித்த போது தான் பல தடைவைகள் பிரதேச சபையின் தவிசாளரை உறுதிப்படுத்தப்பட்ட பல கடிதங்களுடன் சென்று கதைததாகவும் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து வியாபாரம் செய்து வரும் தனக்கு மிகவும் மோசமான அநீதி இழைக்கப்பட்டுள்ளது. தான் கிளிநொச்சி சந்தையின் பண்ழய வியாபாரி என்பது சபையின் தவிசாளருக்கு நன்கு தெரியும் எனவும் ஆனால் அவர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டினார். அத்தோடு கிளிநொச்சி சந்தையில் புதிதாக பலருக்கு கடைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதனை சுட்டிக்காட்டி அவர் ஏன் தனக்கு கடை வழங்கப்படவில்லை என்பதனை பிரதேச சபையின் தவிசாளர் தெரிவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இதுன் போது கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை.குகுராஜா எவ்வித பதிலும் அளிக்காமல் மௌனமாகவே இருந்துவிட்டார் இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், திணைகளங்களின் அதிகாரிகள் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பெரும்பாலானோர் கலந்து கொண்டிருந்தனர் (29)

# இடம்பெயர்ந்தோருக்கு அமெரிக்க உதவித்திட்டம்

## தமிழகத்தில் உள்ளோருக்கு முன்னுரிமை

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு உதவவும் அமெரிக்கா முன்வந்திருப்பதாக அந்த நாட்டின் இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவும் திட்டங்களுக்காக இந்த வருடத்தில் 17 இலட்சம் டொலர்களை (இலங்கைப் பணத்தில் சுமார் 22 கோடி ரூபாவை), செலவிட அமெரிக்க அரசு முன்வந்திருப்பதாக அந்த அறிக்கை தெரிவித்தது. பால் ரீதியான வன்முறைகள், கடத்தல், சிறுவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகல் போன்றவற்றிலிருந்து அத்தரப்பினரைப் பேணிப் பாதுகாத்தல், சிறுவர் மற்றும் பெண்களுக்கான மேம்பாடு, மனோ ரீதியான நலன், உள வளர்ச்சி போன்றவை தொடர்பான திட்டங்களின் அடிப்படையிலேயே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன. நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்குவது தொடர்பான இலங்கைச் சட்டத்தில் 2009 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின்படி குடியுரிமை பெறுவதற்கு தகுதியிருந்தும், உரிய ஆவணங்கள் இல்லாத அகதிகளுக்கு உரியவற்றைப் பெற்றுக்கொடுக்கவும் அமெரிக்க நிதி உதவித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் யுத்தம் முடிவுற்று ஐந்து வருடங்கள் கடந்த பின்னரும் இன்னும் பல்லாயிரக்கணக்கான இலங்கை அகதிகள் இந்தியாவில் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### அநீதியான...

பட்டு வருகின்றனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையின் சுகாதாரத் தொண்டர்கள், அலுவலக ஊழியர்கள், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மற்றும் தாய்மார் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "நல்ல உள்ளம் கொண்டவரை காயப்படுத்த வேண்டாம், எம்து வைத்தியதிகாரியை குறை கூறாதே, சிறுவர்களுக்காக தனது சொந்தப் பணத்தை செலவு செய்தவர்", "பத்திரிகையாளர்களே உண்மையை ஆராய்ந்து எழுதுங்கள், ஏழைகளின் தோழர் மீது கை வையாதே போன்ற சுலோகங்களைத் கைகளில் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி வலி.வடக்கு பிரதேசத்தில் சிறப்பாக சேவையாற்றவில்லையென்றும் இதனால் அவரை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் இடமாற்றம் செய்யுமாறும் கடந்த திங்கட்கிழமை வலி.வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

மருத்துவத்துறைக்கு அப்பால் கல்வி, கலை, கலாசாரம், ஆன்மீகம் போன்ற பல்வேறு துறைகளில் சமூக சேவையாற்றி வருகின்ற தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார், வலி.வடக்கு பிரதேசத்தில் சிறந்த சேவையாற்றி வருகின்றார். இந்த நிலையில் இவருக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சுகிர்தனிடம் மகஜர் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# ரயில் விபத்தில் இளைஞர் மரணம்

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணம் செய்த ரயிலின் மிதி பலகையில் பயணம் செய்த ஒருவர் அதே ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

மிதிபலகையில் பயணம் செய்து கொண்டிருந்தவர் தவறி விழுந்து அதே ரயிலில் மோதுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெல்லாவ கனேவத்த ரயில் நிலையத்திற்கு அருகாமையில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா தோணிக்கல் என்னும் இடத்தைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் குருணாகல் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### வெளியாகியது...

மூலமும் 5 பேர் தமிழ் மொழி மூலமும் தோற்றிச் சித்தியடைந்துள்ளனர். 44பேர் 8 ஏ சித்தியையும், 33பேர் 7ஏ சித்தியையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் சமயம், தமிழ், கணிதம், வரலாறு, ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், நாடகமும் அரங்கியல், சங்கீதம், சித்திரம், புவியியல், குடியுரிமை கல்வி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுகாதாரம், விவசாயம் போன்ற பாடங்களில் 100 வீத சித்தியினையும், ஆங்கில பாடத்தில் 99 வீத சித்தியினையும், விஞ்ஞான பாடத்தில் 99.5 வீத சித்தியினையும், வர்த்தக பாடத்தில் 99 வீத சித்தியினையும் பெற்றுள்ளனர்.

நெல்லியடி மத்திய கல்லூரியில் மூன்று பேர் 9ஏ சித்திகளையும்,மூன்றுபேர் 8 ஏ ,பி. சித்திகளையும் பெற்றுள்ளனர்.

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி இருவர் 9ஏ சித்திபெற்றுள்ளனர்.

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இருவர் 9ஏ சித்தி பெற்றுள்ளனர். (48)

# வர்த்தக சமநிலையில் தளம்பல் தீர்வு கோரி உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக ரீதியில் மிகுந்த நெருக்கடிகளைச் சந்தித்து வரும் யாழ். வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் பிறமாவட்டத்திலிருந்து வரும் தற்காலிக வியாபாரிகளினால் ஏற்படும் வியாபாரப்பாதிப்புக்களை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனக்கோரி யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே நேற்றுக் காலை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய பண்பாட்டுப் பேரவையும் யாழ். வர்த்தகர்களும் இணைந்து இந்த உண்ணாவிரதப்போராட்டத்தை நடத்தினர்.

தற்போதைய நிலையில் யாழ். வர்த்தகர்கள் தங்களது மின்சாரக்கட்டணம், இதரவரிகளைக்கூட செலுத்த முடியாமலும், ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலையிலும், வட்டிக்கு பணம் பெற்று தொழிலை மேற்கொண்டுவந்தவர்கள் கடனைதிருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் பல கடைகள் மூடப்படுகின்றன. கைமாற்றம் செய்யப்படுகின்றன. இதனால் தற்கொலைகள் கூட இடம்பெறுகின்றன.

இதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.இதில் வர்த்தகர் சங்கத்தலைவர் ஜெயசேகரம் மற்றும் மாகாணசபை உறுப்பினர் அனந்தி சதிதரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

தொடர்ந்து நேற்று மாலை முதலமைச்சர் இவ்விடயத்தில் தலையிட்டதைத் தொடர்ந்து இப்போராட்டம் கைவிடப்பட்டது. (இ, 25)

### மீள் சுழற்சி...

சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான குறித்த நிறுவனங்களுக்கு ஊடாக கழிவு உலோகங்களிலிருந்து கைத்தொழிற்துறையை சக்திப்படுத்தி வலுப்படுத்தும் வகையிலான செயற்திட்டங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் கழிவு உலோகங்களை மூலப்பொருட்களாகக் கொண்டு செய்யப்படும் உற்பத்திகளின் தரம் மற்றும் அவற்றின் சந்தைவாய்ப்பு தொடர்பிலும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாட் பதியூதீன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசகர் தவராசா உடனிருந்தனர்.

### மாணவர்கள்...

சென்றவேளை நிர்வாகி நிறுவன கதவைப்பூட்டியுள்ளார்.

இந்த நிலையில், வீதியில் நின்றவாறே அவர் எனது மகளுக்கு ஏன் அடித்தீர்கள் எனக் கேட்டவேளை, உங்கள் மகளுக்கு மட்டும் அடிக்க வில்லை, வேறும் சில மாணவர்களுக்கும் அடித்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

ஏனைய மாணவர்கள் தொடர்பாக நான் கேட்கவர வில்லை என் மகளுக்கு அடித்தது குறித்தே கேட்கவந்தேன் எனத் தெரிவிக்க அவர் பதிலேதும் கூறாமல் உள்ளே சென்றுவிட்டார்.

இதனையடுத்து தந்தையார் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அத்துடன் நேற்று முன்தினம் யாழ். போதனாவைத்திய சாலையில் குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்டு சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக கோப்பாய் பொலிஸாரால் சிறுவர் நீதிமன்றுக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டு நேற்று முன்தினம் விசாரணைகள் நடைபெற்று எதிர்வரும் 21ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை தற்போது பரீட்சைக்காலமாகையால் குறித்த சிறுமி பரீட்சை எழுதமுடியாத நிலையில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

### நேபாள...

செயலகத்தில் சந்தித்ததுடன் யாழ். மாவட்ட அபிவிருத்திகள் தொடர்பிலான தரவுகளை அறிந்து கொண்டதுடன் யாழ். பொது நூலகத்தினை பார்வையிட்டதுடன், யாழ். போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் மேற்கொண்டனர்.

குருநகரிலுள்ள வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்தும் ஆராய்ந்த குழுவினர் அரியாலை மீள்குடியேற்ற கிராமத்திற்கும் சென்றதுடன் நண்பகல் வடமாகாண அளுநர் ஜி.ஏ. சந்திரசிறியையும் அவரது அலுவலகத்தில் சந்தித்தனர்.

வடமாகாணத்தில் தற்போது முன்னெடுத்து வரும் அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடினர். நேற்று மாலை இக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை முடித்துக்கொண்டு கிளிநொச்சிக்கு சென்றனர். (இ, 25)

### முல்லையில்...

மத்தில் நிரந்தர வீடுகள் வழங்கப்ப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதியாக நேற்று இந்த 101 வீடுகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள 65 குடும்பங்களுக்கு வழங்குவதற்கென நிரந்தர வீடுகளுக்கான அடிக்கல்லையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இந்த நிகழ்வின் போது நாட்டியுள்ளார்.

அத்துடன் பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள கேப்பாப்பிலவு கிராமத்தின் ஒரு பகுதியாகிய வயல் காணிகளில் 100 ஏக்கர் காணிகளும் விமானப் படையினருடைய பொறுப்பிலிருந்து நேற்று விடுவிக்கப்பட்டு கிராமவாசிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 165 ஏக்கர் வயல் காணிகள் விமானப்படையினர் வசம் இன்னமும் இருப்பதாகவும், அவற்றையும் உரியவர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் இந்த நிகழ்வின்போது, மகஜர் கையளிக்கப்பட்டிருப்பதாக கேப்பாப்பிலவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலை[illegible] ரன் [illegible] (40)

# வடக்கின் பாரிய குடிநீர்த் திட்டம் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்

## பொறியியலாளர் சிவகுமார் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் குடிதண்ணீர்த் திட்டத்திற்காக பாரிய நிதி ஒதுக்கீடு இப்போதுதான் முதன்முறையாக கிடைத்துள்ளது.

இந்நிதியை அனைவரும் ஒருங்கிணைந்த ரீதியில் செயற்பட்டு இரணைமடு உட்கட்டுமான வேலைகள் மேற்கொள்கின்ற அதேநேரம் யாழ். குடாவுக்கு அத்தியாவசியமான குடிதண்ணீர் தேவையும் நிறைவேற்ற வேண்டும்.

இதன்மூலம் 2300 கோடி ரூபா நிதி முழுப்பயன்பாடு உடையதாக மாறும் பேண்தகு அபிவிருத்தி ஏற்படும் என பொறியியற்பீட விரிவுரையாளரும் முன்னாள் என்றிப் திட்டப் பணிப்பாளருமான பொறியியலாளர் கலாநிதி எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பாக அபிவிருத்திக் கூட்டம் நேற்று யாழ். பல்கலை புவியியற்துறை மண்டபத்தில் புவியியற்துறை தலைவர் கலாநிதி க.சுதாகர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பொறியியலாளர் கலாநிதி எஸ்.சிவகுமார் மேலும் தெரிவிக்கையில்,

இரணைமடுக்குளமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் முக்கிய நீரேந்து பிரதேசம் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ளது.

இதேவேளை இக்குளத்தின் நீரை பயன்படுத்துபவர்கள் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளே.

இக்குளத்தின் மூலம் யாழ். மாவட்டத்திற்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டால் இத்திட்டம் வட மாகாணத்தின் நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணத்துக்குரிய இந்த நீர்விநியோக திட்டமாக அமையும் என்றார்.

மேலும் இப்பிரச்சினையை மாவட்ட ரீதியில் பிரிக்காமல் மாகாண ரீதியில் ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயற்படுத்துங்கள் என அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் புவியியற்துறை தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டம் என்பது இன்று நேற்று வந்த விடயமல்ல. கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆய்வுசெய்யப்பட்டு முன்னெடுத்த பாரிய திட்டமாகும்.

குடிநீர் பெறுதல் மக்களின் உரிமை என்ற அடிப்படையில் மக்களுக்கு குடிநீர் ழவங்குவது இன்று ஓர் முக்கிய விடயமாக மாறிவிட்டது என்றார்.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர்த் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன், சமூகவியல் நிபுணர் ரி.பாலசுப்பிரமணியம், சிரேஷ்ட பொறியியலாளர் எஸ்.பாலேந்திரா, புவியியற்துறை விரிவுரையாளர் கே. இரவீந்திரன் உட்பட பலரும் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மேற்படி கலந்துரையாடலில் விவசாயிகள் உட்பட 150 பேர் கலந்துகொண்டனர். (92)

# இறுதிப் போட்டியில் இலங்கை



20 ஓவர் உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடன் நேற்று இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணி டக்வத் லூயில் முறையில் 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

ரி - 20 உலகக் கிண்ண சுற்றுத்தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டி நேற்று இலங்கை மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையில் இடம்பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இல்ங்கை அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 6 விக்கெட் இழப்பிற்கு 160 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாட களத்தில் இறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 13.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்பிற்கு 80 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 2 விக்கெட்டுக்களை லசித் மலிங்க மற்றும் பிரசன்ன, குலசேகர தலா ஒரு விக்கெட்டினையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிலையில் மழை குறுக்கிட்டதனால் போட்டி இடையில் நிறுத்தி வைக்கப்பட்டு டக்வேத் லூயிஸ் முறையில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றிபெற்று ரி - 20 உலக கிண்ண இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

# வீடு புகுந்து வாள்வெட்டு; உடுவிலில் திருடர்கள் கைவரிசை

உடுவிலில் திருடர்களின் வாள வெட்டில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் தெற்கு பாலாவோடையில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் வீடு ஒன்றினுள் நுழைந்த இரு திருடர்கள் குடும்பஸ்தர் ஒருவரை வாளால் சரமாரியாக வெட்டியதுடன் தங்கநகைகளையும் திருடிச்சென்றுள்ளனர்.

திருடர்களின் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையிலும் அவர்களுடன் போராடியதைத் தொடர்ந்து திருடர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் க.மோகனராஜகுமார் (வயது - 43) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காயமடைந்துள்ளார். இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியிலேயே அண்மையில் ஒரு மாணவன் திருடர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# குடிதண்ணீருக்காக மக்கள் அலைச்சல் விநியோகத்தை தடுத்து நிறுத்தியது ஏன்?

## வட்டுக்கோட்டை மக்கள் கேள்வி

(யாழ்ப்பாணம்)

ஸ்கந்தா மாஸ்ரர் ஞாபகார்த்த குடிதண்ணீர் திட்டத்தை இடைநிறுத்தியதால் சுமார் 350 குடும்பங்கள் பயனடையும் திட்டம் மக்கள் ப்யன்பாடு இன்றி உள்ளது.

வலி. மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட மூளாய் வீதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் த.கிருஸ்ணமூர்த்தி இவ்விடயம் தொடர்பில் தெரிவிக்கையில்,

ஸ்கந்தா மாஸ்ரரின் இல்லத்திலிருந்து வட்டுக்கோட்டை மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் காலை முதல் மாலைவரை குடிதண்ணீரைப் பெற்றுவந்தனர்.

இதற்காக ஸ்கந்தா மாஸ்ரரின் குடும்பம் (திருமதி பேபிரோஜா ஸ்கந்தகுமார்) 5 ஆயிரம் முதல் 7 ஆயிரம் ரூபா வரை மாதாந்தம் குடிதண்ணீர் மோட்டார் மின்சாரக் கட்டணமாக செலுத்தி மக்கள் பணியாற்றி வந்தனர்.

மேற்படி குடிதண்ணீர் திட்டம் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக நடைமுறைப்படுத்தப் பட்டு வந்தது.

ஆனால் தற்போது மேற்படி கிணற்றில் மலக்கிருமிகள் உள்ளதாகவும் 15 பேர் வரை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தவறான கருத்தை மக்களுக்கு பரப்பியதுடன், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் நீர்மாதிரி பரிசோதனையின்றி இத்திட்டத்தை இடைநிறுத்தியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் புதிதாக பதவியேற்ற வைத்திய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை.

வலி. மேற்கு பிரதேச சபைக்கு இவ்விடயம் தொடர்பில் இரு கடிதங்களை மக்களாகிய நாம் கையொப்பத்துடன் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் வழங்கியபோதும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவில்லை.

தற்போது கடும் வறட்சி சூழல் நிலவுகின்றது. வலி. மேற்கு மக்கள் குடிதண்ணீருக்காக பல இடங்களுக்கும் அலைகின்றனர்.

ஸ்கந்தா மாஸ்ரரின் குடிதண்ணீர் விநியோகம் அவரது சொந்த மின்சார நிதிப் பங்களிப்புடன் பொருத்தமான குழாய் நீர் வசதிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்தக் குடிதண்ணீர் விநியோகத்தை தனிப்பட்ட காரணங்கள் நோக்கில் இடைநிறுத்தியது மிகத்தவறான விடயமாகும்.

எனவே மேற்படி விடயத்தில் வலி.மேற்கில் அக்கறையுடன் செயற்படும் பொது அமைப்புக்கள் உடன் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரி, வலி. மேற்கு பிரதேச சபைகளின் உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து தாகம் தீர்க்கும் குடிதண்ணீரை வழங்கி உதவுமாறு ஆசிரியர் கவலையுடன் கேட்டுள்ளார். (92)

# கோண்டாவில் இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் கட்டடத் தொகுதி திறப்புவிழா

(கோண்டாவில்)

யாழ். கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயத்தில் அமரர்கள் இராசையா சரஸ்வதி தம்பதியினரின் ஞாபகார்த்தமாக கல்விக் கொடையாளர் இராசையா குவேந்திரநாதனால் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்பப் பிரிவுக்கான கட்டடதொகுதி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மு.ப. 9.00 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் கணிதச் சுடர் சண்.வாமதேவன் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் ஆசியுரையினை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரம்மாச்சார்ய சுவாமிகள் (ஆதீன முதல்வர், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்), சிவஸ்ரீ இரவீந்திரராசா குருக்கள் (ஞானப் பழனியாண்டவர் ஆலயம், கோண்டாவில்), சிவஸ்ரீ கதிர்காமநாதக் குருக்கள் (பிரதம குரு, அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம், கோண்டாவில்), வண. பிதா அ.அன்ரனிகுயின் (நல்ல சமாரியன் தேவாலயம், திருநெல்வேலி) ஆகியோரும், தலைமையுரையினை கணிதச்சுடர் சண். வாமததேவன் (விழாத் தலைவர்) வழங்கவுள்ளனர்.

# குடைசாய்ந்தது பாரவூர்தி

(முழங்காவில்)

கொழும்பிலிருந்து பூநகரிக்கு ஓடுகளை ஏற்றிக்கொண்டு வந்த பாரவூர்தி பரந்தன் வீதியின் தம்பிராய் சந்திக்கு அருகே தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாரவூர்திச் சாரதி மற்றும் உதவியாளர் இருவரும் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பத்தாயிரம் ஓடுகளை ஏற்றிக் கொண்டு வந்த பாரவூர்தி குறித்த சந்திக்கருகே தடம்புரண்டு 5 அடி பள்ளத்தில் விழுந்ததில் பாரவூர்தி முற்றாக சேதமடைந்ததுடன், ஓடுகளும் நொருங்கியதாகவும் கட்டுப்பாட்டை இழந்தே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (112)

# க.பொ.த [சா/த] மேலும் சில பெறுபேறுகள்...

**யாழ். இந்துக் கல்லூரி**

9ஏ சித்திகள்

தமிழ் மொழி மூலம்

கணேசலிங்கம் பிரசாந், தேவகுமாரன் ரஜிந்தன், கனகலிங்கம் சங்கீத், சிவபாலன் சங்கீத்தன், யோகேஸ்வரன் சுவஸ்திகன்

ஆங்கில மொழி மூலம்

சத்தியசீலன் கோகுலன், பத்மநாதன் மேஷிகன், சிவயோகம் சரண்யன், ஆனந்தகுமார் வேதாகுலன்

8 ஏ சித்திகள்

தமிழ் மொழி மூலம்

விக்னராஜா நிரோஜன், சோதிலிங்கம் பிரகலாதன், பாலசுந்தரம் தாருஷன், கணேசலிங்கம் அருட்சங்கர், ரவீந்திரன் பானுப்பிரியன், திருமாறன் இளமாறன், கஜரொகானன் கஜானன், பாஸ்கரதேவன் கோபிநாத், குலசிங்கம் கணபாலன், செல்வரட்ணம் லாவர்த்தன், சிவபாதசுந்தரம் மதுரிகன், பரமேஸ்வரன் ரதீஷன், இராமநாதன் சதுர்ஷன், யோகந்திரராஜா சாகித்யன், சிவகுமார் சிவசங்கர், லிங்கரத்தினம் சுபாகரன், இலட்சுமணகுமார் டிலக்ஷிகன், சுகந்தன் டினோஷன், கேதீஸ்வரன் நவநீதன், நிர்மலரட்ணம் நிரோஜன், சுரேஸ்குமார் சிந்துஜன், பரமேஸ்வரன் தர்ஷனன், சதானந்தன் திருமாறன், துரைராஜா துஸ்யந்தன், ஆனந்தராசா கஜானன், மகேந்திரராசா மதுரன், திருச்செல்வம் கவிச்சரன், சண்முககுலகுமாரன் சரவணன், சிற்றம்பலம் சூரியகுமார், செந்தில்குமரன் சுகான்ஜன், ஸ்ரீஸ்கந்தராஜா விஜயசாந், ஆறுமுகம் விதுஷாந், முருகேசபிள்ளை டினேஸ்குமார்.

ஆங்கில மொழி மூலம்

இரவீந்திரன் ஆரூரன், ஜெயக்குமார் ஆர்த்தன், தெய்வேந்திரம் ஆதவன், ஜெய்க்குமார் லக்சுஜன், சந்திரகுமார் சிவபிரியன், லோகேஸ்வரன் தினேசன், திருஞானசம்பந்தன் ஆகாசன், விசுவநாதன் கோபிகன், வெற்றிவேல் நிஷோதன், சிவபாலன் பராபரன், சிவராசன் தர்மிகன்

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

க.சகானா - 9ஏ, செ.சுபனேந்திரா - 9ஏ, கி.தனுஷியா - 8ஏபி, ச.கானப்பிரியா - 8ஏபி, சி.காந்தினி - 8ஏபி, சி.சதுர்ஷன் - 7ஏ2பி, ப.கோஜனனி - 7ஏ2பி.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

கு.கௌசிகா - 9ஏ, சி.சிவஜா் - 9ஏ, ச.வானதி - 8ஏபி, செ.செந்தா - 8ஏபி, த.தர்மிகா - 8ஏபி, பு.ஜதுர்சன் - 8ஏசி, ச.கார்த்திகா - 8ஏபி, இ.பிரலன்சா - 8ஏபி, வி.கோபிநாத் - 8ஏபி, செ.சாரங்கன் - 8ஏபி, ந.நிருசாந் - 8ஏபி, உ.விதுசன் - 8ஏஎஸ், மு.மதுராந்தகி - 8ஏஎஸ், சி.கிருஷிகா - 7ஏ2பி, சி.தருஷாளினி - 7ஏ2பி, கு.சிந்துரிஜா - 7ஏ2பி, கு.லகுமிகா - 7ஏபிசி, ச.விதுஸ்லா - 7ஏபிசி, ர.அகிம்சா - 7ஏபிசி, ந.விபீசன்ஜா - 7ஏபிசி, து.குகரதன் - 7ஏபிசி.

6ஏ - 15 பேர், 5ஏ - 7 பேர், 4ஏ - 8 பேர்.

**யாழ். மத்திய கல்லூரி**

வி.விதுசன் - 8ஏசி, சி.சிந்துஜன் - 8ஏசி, ச.பவித்திரன் - 8ஏசி.

ஆங்கில மொழி மூலம்

மோ.ஆகாஷன் - 7ஏபிசி, ஏ.தனுசன் - 4ஏ3பி2சி, எஸ்.நிதர்ஷன் - 3ஏ3பி3சி.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.